



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:217 | 21-02-2026 | சனிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

21.02.2026 மாசி 9
சனிக்கிழமை

---

சூரிய உதயம் 6.33

---

திதி:
இன்று பிற்பகல் 2.12 வரை
சதுர்த்தி பின்பு பஞ்சமி.

---

நட்சத்திரம்:
இன்று இரவு 8.15 வரை
ரேவதி பின்பு அசுவினி.

---

யோகம் :
இன்று மாலை 4.58 வரை
சுபம் பின்பு சுப்பிரம்.

---

கரணம் :
இன்று அதிகாலை
3.02 வரை வணிசை பின்பு
பிற்பகல் 2.12 வரை பத்திரை
பின்பு பவம்.

---

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.32 வரை
அமிர்த யோகம் பின்பு
இரவு 8.15 வரை யோகம்
சரியில்லை பின்பு
சித்த யோகம்.

---

சந்திராஷ்டமம்
இன்று இரவு 8.15 வரை
பூரம் பின்பு உத்திரம்.

---

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 4.30 – 5.30.

---

இராகு காலம்
காலை 9.00 – 10.30.

---

எமகண்டம்
பிற்பகல் 3.00 – 4.30.

---

குளிகை
காலை 7.30 – 9.00.

---

இன்று சுபமுகூர்த்த நாள்

---

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# திராவிட மாடல் 2.0 ஆட்சி, எங்கள் சாதனைகளை நாங்களே விஞ்சும் அளவிற்கு இருக்கும்: முதலமைச்சர்

**சென்னை, பிப்.21:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் (16-வது பேரவை) எட்டாவது கூட்டத்தொடரின் நிறைவு நாளான (20-2-2026) தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நன்றி தெரிவித்து பேசியதாவது:

தமிழக சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 16-வது சட்டமன்றப் பேரவையின் எட்டாவது கூட்டத்தொடரின் நிறைவு நாளில் நாம் இங்கே ஒன்று கூடியுள்ளோம். கடந்த ஐந்தாண்டு காலத்தில் ஐந்து நிதிநிலை அறிக்கைகள் அளிக்கப் பெற்று, இந்த ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையும், வேளாண்மை இடைக்கால நிதிநிலை அறிக்கையும் வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் மீது சிறப்பான விவாதம், பதிலுரை வழங்கப் பெற்றுள்ளது. வேளாண் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களும், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களும் சிறப்பான அறிக்கையையும், பதிலுரையையும் வழங்கியிருக்கிறார்கள். இதன் தொடர்ச்சியை, அடுத்த இரண்டு மாதத்தில் மீண்டும் வந்து, நிச்சயம், இன்னும் கூடுதலாக, வேகமாகத் தொடர்வோம் என்ற நம்பிக்கை தமிழ்நாட்டு மக்களைப் போலவே எனக்கும் இருக்கிறது.

இந்த 5 ஆண்டுகளில் பெற்ற அனுபவத்தினால் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், இன்றைக்கு இன்னும் வலிமை பெற்று, தமிழ்நாட்டை இன்னும் ஏற்றம் பெற வைக்க முடியும் என்ற நம்பிக்கையை நான்



பெற்றுள்ளேன். நம்பிக்கையோடு இன்னும் உழைக்க வேண்டும் எனும் ஊக்கத்தையும், எதனையும் எதிர்கொள்ளும் வல்லமையையும் பெற்றுள்ளேன். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 234 தொகுதிகளையும் என்னுடைய தொகுதிகளாக நினைத்து, எங்களுக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் எனப் பிரித்துப் பார்க்காமல் நான் செயலாற்றி இருக்கிறேன். இந்த மிகப்பெரிய வாய்ப்பைத் தந்த தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றிகள்.

> நாளைய தமிழ்நாடு நிச்சயம் நெஞ்சில் தாங்கி நம்மை வரவேற்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நாளை நாங்கள் அமைக்கப் போகக்கூடிய திராவிட மாடல் 2.0 ஆட்சி, எங்கள் சாதனைகளை நாங்களே விஞ்சும் அளவிற்கு இருக்கும்.
> ”

நூற்றாண்டைக் கடந்து பெருமையோடு இயங்கி வருகிறது இந்தப் பேரவை. கடந்த 2021-ம் ஆண்டு, இந்தப் பேரவையினுடைய நூற்றாண்டு விழாவுக்கு வந்து நவீன தமிழ்நாட்டின் சிற்பியான தலைவர் கலைஞர் அவர்களின் படத்தையும் திறந்து வைத்த அன்றைய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநருக்கும் எனக்கும் தனிப்பட்ட முறையில் எந்தவிதக் கருத்து வேறுபாடும் கிடையாது. தமிழர்களுடைய சுயமரியாதை எள் முனையளவு சீண்டப்பட்டாலும், அது யாராக இருந்தாலும், எதிர்க்குரல் கொடுக்கும் திசையில் முதல் நபராக நான் இருப்பேன். தமிழர் பண்பாட்டை மனதில்கொண்டு, ஆளுநர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கெல்லாம் நான் மட்டுமா காரணம்? இல்லை! இல்லவே இல்லை! ஒட்டுமொத்த தமிழர்களும் என் கையோடு கைசேர்த்து, எனக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் வழங்கி, பல்வேறு நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தக்கூடிய வாய்ப்பையும், வலிமையையும் தந்து எனக்கு உதவினார்கள். நான் இந்த ஐந்தாண்டு காலத்தில் எனக்கும், என் மனச்சாட்சிக்கும் மட்டுமே கட்டுப்பட்டு உழைத்திருக்கின்றேன். இன்னும் உழைக்கக் காத்திருக்கின்றேன். நாளைய தமிழ்நாடு நிச்சயம் நெஞ்சில் தாங்கி நம்மை வரவேற்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நாளை நாங்கள் அமைக்கப் போகக்கூடிய திராவிட மாடல் 2.0 ஆட்சி, எங்கள் சாதனைகளை நாங்களே விஞ்சும் அளவிற்கு இருக்கும்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் இயக்கத்தின் தலைவராக அமரவைத்து, தமிழ்நாட்டின் முதல்-அமைச்சராக உழைத்த நான், லட்சக்கணக்கான கழக உடன்பிறப்புகள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். எவரேனும் விடுபட்டிருந்தால், அவர்களையும் இணைத்துக்கொண்டு, அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உறுதியாகச் சொல்கிறேன். மீண்டும் வெல்வோம். மீண்டும் வந்து ஆட்சி அமைப்போம். மீண்டும் வந்து தமிழ் மக்களுக்கான திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவோம்.

## “மீண்டும் திமுக ஆட்சிக்கு வாய்ப்பு!” முதல்வர் ஸ்டாலினை சந்தித்த ஓபிஎஸ் கருத்து

“மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடிய வாய்ப்பு திமுகவுக்கு இருக்கிறது” என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகத்தின் தலைவர் ஓ.பன்னீர்செல்வம் இன்று தமிழக சட்டப்பேரவை வளாகத்தில் முதல்வர் ஸ்டாலினை சந்தித்துப் பேசியது அரசியல் வட்டாரத்தில் பல்வேறு சந்தேகங்களை கிளப்பியுள்ளது.

இந்தச் சந்திப்புக்குப் பின் செய்தியாளர்களிடம் ஓ.பன்னீர்செல்வம் கூறும்போது, “ஐந்தாண்டு கால திமுக ஆட்சி சிறப்பாக நிறைவு பெற்றிருக்கிறது. அதனால் முதல்வரை சந்தித்து வாழ்த்து தெரிவித்தேன்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

அப்போது உசிலம்பட்டி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் ஐயப்பன், முதல்வர் ஸ்டாலினுக்கு ஆதரவாக சட்டப்பேரவையில் பேசியது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர், “தமிழக மக்கள் என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறார்களோ, அதை அவர் சொல்லியிருக்கிறார்" என்று கூறினார். பின்னர் அவர், “அது பொதுவான கருத்து, இன்றைக்கு இருக்கும் அரசியல் சூழ்நிலை, கடந்த 5 ஆண்டு கால ஆட்சியின் நிலை, திமுக செய்த சாதனைகள் மக்கள் மனதில் ஆழமாக பதிந்திருக்கிறது. மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடிய வாய்ப்பு திமுகவுக்கு இருக்கிறது. தமிழகத்துக்கே வழி பிறந்திருக்கிறது” என்றும் ஓபிஎஸ் கூறினார்.

# ஏஐ தொழில்நுட்பத்தில் இந்தியா அசுர வளர்ச்சி பெறும்: சுந்தர் பிச்சை!

**புதுடில்லி,பிப்.21:**

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இந்தியா அசுர வளர்ச்சி பெறும் எனக் கூகுள் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சை நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பாக்ஸ் சிலிகா இந்தியா இணைவதற்கான ஒப்பந்தம், மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் மற்றும் அமெரிக்கப் பொருளாதார விவகாரங்கள் துணை அமைச்சர் ஜேக்கப் ஹெல்பெர்க் முன்னிலையில் கையெழுத்தானது.

தில்லியில் நடைபெற்ற இந்தியாவின் உருமாற்றத் திறன் மற்றும் செயற்கை நுண்ணறிவு தாக்கம் உச்சி மாநாட்டில் இந்தியா, அமெரிக்கா பிரதிநிதிகள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் நிர்வாகிகள் கலந்துகொண்டனர். கூகுள் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சை



கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது,

ஏஐ தொழில்நுட்பத்தில் இந்தியாவின் வளர்ச்சி அசாதாரணமாக உள்ளது. நாம் அதீத முன்னேற்றம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளின் உச்சியில் இருக்கிறோம். ஆனால் சிறந்த விளைவுகளுக்கான உத்தரவாதம் இல்லை.

செயற்கை நுண்ணறிவின் பயன்கள் அனைவருக்கும் அனைத்து இடங்களிலும் கிடைப்பதற்காக நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். இதில் இந்தியா-அமெரிக்கா கூட்டாண்மைக்கு முக்கிய பங்கு உள்ளது. இரு நாடுகளுக்கும் இடையே இணைப்புப் புள்ளியாக கூகுள் செயல்படுவது பெருமையளிக்கிறது.

கூகுள் நிறுவனத்தின் முக்கியமான முயற்சிகளில் இரு நாடுகளிலும் உள்ள குழுக்கள் தடையின்றி இணைந்து செயல்படுகின்றன. கூகுள் பே உள்பட இந்தியாவில் தொடங்கும் புதுமைகள் உலகெங்கிலும் உள்ள மக்களுக்குச் சிறந்த தயாரிப்புகளை வழங்குகின்றன.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இந்தியாவின் எதிர்கால வளர்ச்சி அசாதாரணமானதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். தயாரிப்பு, உள்கட்டமைப்பு என அனைத்து விஷயங்களிலும் கூகுள் நிறுவனம் இந்தியாவுக்கு ஆதரவாக உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# அதிபர் டிரம்ப் விதித்த வரிகள் ரத்து! அமெரிக்க உச்ச நீதிமன்றம் அதிரடி!



**அமெரிக்கா, பிப்.21:**

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தனது அதிகாரத்தை மீறி செயல்படுகிறார் எனக் கூறி அவர் விதித்துள்ள வரிகளை அந்நாட்டின் உச்ச நீதிமன்றம் ரத்து செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் டிரம்ப் உலக நாடுகள் இடையே பேச்சுவார்த்தைகளை நடத்தவும், ஒத்துழைப்புகளைப் பெறவும் அதிகப்படியான வர்த்தக வரிகளை விதித்து அழுத்தம் கொடுத்து வந்தார். இதனால், அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்து வந்த பல்வேறு நாடுகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

அதிபர் டிரம்ப் உலக நாடுகளின் மீது அமெரிக்காவின் சர்வதேச அவசர பொருளாதார அதிகாரச் சட்டத்தின் (IEEPA) கீழ் வரிகளை விதிப்பதற்கு அவருக்கு எந்தவொரு அதிகாரமும் கிடையாது எனக் கூறிய அமெரிக்க உச்ச நீதிமன்றம் அவர் விதித்துள்ள வரிகளை இன்று (பிப். 20) ரத்து செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, அமெரிக்க கீழமை நீதிமன்றம் அதிபர் டிரம்ப் விதிக்கும் வரிகள் அனைத்தும் சட்டவிரோதமானவை எனக் கூறி கடந்த 2025 மே மாதம் தீர்ப்பளித்திருந்த நிலையில், உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு டிரம்ப் நிர்வாகத்திற்குப் பேரடியாகக் கருதப்படுகிறது.

ஆனால், உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பானது டிரம்ப் விதித்துள்ள மற்ற வரிகளை பாதிக்காது என்றும், அமெரிக்காவின் சர்வதேச அவசர பொருளாதார அதிகாரச் சட்டத்தின் (IEEPA) கீழ் விதிக்கப்பட்ட வரிகளை மட்டுமே ரத்து செய்யும் எனவும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

மேலும், அதிபர் டிரம்ப் விதித்துள்ள வரிகளால் இறக்குமதியாளர்களிடம் இருந்து அமெரிக்க அரசுக்குக் கிடைத்த பல பில்லியன் டாலர்கள் குறித்து நீதிமன்றம் எந்தவொரு கருத்தும் தெரிவிக்கவில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

# ககன்யான் திட்டத்துக்குப் பயன்படுத்தப்படும் நவீன பாராசூட் சோதனை வெற்றி: டிஆர்டிஓ சாதனை!

**புதுடில்லி,பிப்.21:**

ககன்யான் திட்டத்துக்காக பயன்படுத்தப்படவுள்ள நவீன பாராசூட்டை இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.

வானில் பறக்கும் விமானம், ஹெலிகாப்டரில் இருந்து கீழே குதிக்க பாராசூட் பயன்படுத்துவது போல, விமானம் உள்ளிட்டவை தரையிறங்கும்போது, அதன் வேகத்தை மட்டுப்படுத்த டிரோக் பாராசூட் பயன்படுத்தப்படும்.

விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான் திட்ட விண்கலத்துக்கு இதுபோன்ற பாராசூட் பயன்படுத்தப்படவுள்ளது. இந்த பாராசூட்டை புதன்கிழமை சண்டீகரில் உள்ள சோதனை மையத்தில் டிஆர்டிஓ பரிசோதித்துள்ளது.






## திருக்குறள் குறள்-537

அரியவென் றாகாத இல்லைபொச்
சாவாக்கருவியாற் போற்றிச் செயின்



மறவாமை என்னும் கருவிகொண்டு (கடமைகளைப்) போற்றிச் செய்தால், செய்வதற்கு அரியவை என்று ஒருவனால் முடியாத செயல்கள் இல்லை.

## சிந்திக்க ஒரு நொடி



வாய்ப்பும் மீனும் ஒன்றுதான் சரியாக பிடிக்கவில்லை எனில் கைநழுவி போய்விடும்

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## செய்யாறு அருகே தளரப்பாடியில் அருள்மிகு கொண்டியம்மன் கோயில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்



**திரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம்**

**செய்யாறு, பிப் .21:**
திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அடுத்த தளரப்பாடி கிராமம் ஏரிக்கரையோரம் புதிதாக நிர்மானித்துள்ள அருள்மிகு ஸ்ரீ கொண்டியம்மன் கோயில் மாசி மாத அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து சிவாச்சாரியார்கள் கோவில் வளாகத்தில் யாகசாலை அமைத்து கணபதி ஹோமம், நவகிரக ஹோமம், மகாலட்சுமி ஹோமங்கள், மாங்கல்யஹோமம், நடைபெற்றது.

பின்னர் கலசத்திற்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு, சிவாச்சாரியார்கள் கலசங்களை தலையில் சுமந்தவாறு கோவிலை சுற்றி வலம் வந்து கோபுரத்தில் உள்ள கலசத்திற்கு புனித நீரை ஊற்றி மகா கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தனர்.

பின்னர் அந்த புனித நீரானது பக்தர்களுக்கு தெளிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து அருள்மிகு ஸ்ரீ கொண்டியம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள் நடைபெற்றது. பின்னர் மங்கல வாத்தியங்கள் முழங்க கொண்டியம்மனுக்கு தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

மகா கும்பாபிஷேக வைபவத்தில் திரளான பக்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். கோயில் நிர்வாகத்தின் சார்பில் பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## மாசி மகத் தெப்பத் திருவிழா கொடியேற்றம்



மதுரை கூடலழகர் கோயிலில் நேற்று மாசி மகத் தெப்பத் திருவிழா கொடியேற்றம் நேற்று நடந்தது,

## மாதர் சங்கம் சார்பில் 78 -ஆம் ஆண்டு சோடஷ கௌரி பூஜை



மதுரைஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மதுரை மாதர் சங்கம் 78 -ஆம் ஆண்டு நிறைவு விழா சோடச கௌரி பூஜை 16 கௌரி அம்மன் வைத்து, வண்ண மலர்களால், தங்க ஆபரணங்களால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பெண்கள் அனைவரும் பாட்டுகள், பிரசாதம் நெய்வேத்தியங்களுடன் அனைவருக்கும் தாம்பூலங்களும் வழங்கப்பட்டது. 78 ஆண்டுகளாக தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் வெகு சிறப்பாக செய்கிறார்கள். ஆர்ய வைஸ்ய பெண்கள் மாதர் சங்கத்தினரால் வெகு சிறப்பாக சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## மோரணத்திற்கு நகரப் பேருந்து: 100 நாள் வேலை செய்யும் பெண்கள் அ.தி.மு.க., பொறுப்பாளர்களிடம் கோரிக்கை முன் வைப்பு!



**செய்யாறு, பிப். 21 :**
செய்யாறில் அ.தி.மு.க. சார்பில் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட செயலாளர் தூசி மோகன், முன்னாள் அமைச்சர் முக்கூர் சுப்பிரமணியன் ஆகியோர் தலைமையில் 100 நாள் வேலை செய்யும் கிராம மக்களை சந்திக்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது.

செய்யாறு அடுத்த வெம்பாக்கம் மேற்கு ஒன்றிய செயலாளர் வயலூர் ராமநாதன் ஏற்பாட்டில் அழிவிடைதாங்கி, வடமனப்பாக்கம், மோரணம் உள்ளிட்ட 5 கிராமங்களில் 100 நாள் வேலை செய்யும் மக்களை நேரடியாக சந்திப்பு நிகழ்ச்சி நடந்தது.

அ.தி.மு.க., அறிவித்துள்ள முதற்கட்ட 10 தேர்தல் அறிக்கை கொண்ட துண்டு பிரசுரங்களை கிராம பெண்களிடம் வழங்கினர். அதில், உள்ள விவரங்களை எடுத்துக் கூறினர். மோரணம் கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் செய்யாறில் இருந்து தங்கள் ஊரான மோரணத்திற்கு நகர பேருந்து இயக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர். தமிழகத்தில் அ.தி.மு.க., ஆட்சி 4 மாதங்களில் வந்ததும் உங்களது கோரிக்கை நிறைவேற்றப்படும் என முன்னாள் அமைச்சர் முக்கூர் சுப்பிரமணியன் உறுதியளித்தார்.

இந்நிகழ்ச்சியில் பராசூர் பெருமாள், நம்பண்டி பாலன், அருண் தவமணி வெற்றிசெல்வன், கன்னியப்பன் சொல்லிட்டா 70-க்கும் மேற்பட்ட அதிமுக பொறுப்பாளர்கள் தொண்டர்கள் உடனிருந்தனர்.

## அங்காளபரமேஸ்வரி அம்மன் கோயிலில் திருக்கல்யாண நிகழ்ச்சி



கிருஷ்ணகிரி அங்காளபரமேஸ்வரி அம்மன் கோயிலில் திருக்கல்யாண நிகழ்ச்சி நடந்தது.

## பாரதியார் நினைவு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு



திருநெல்வேலியில் நடந்த 4 மாவட்ட அளவிலான பாரதியார் நினைவு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன் பரிசுகளை வழங்கினார்.

## குழந்தை திருமண தடுப்பு விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி



புளியங்குடியில் குழந்தை திருமண தடுப்பு விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

## உலகத் தாய்மொழி நாள் உறுதிமொழி ஏற்பு



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் உலக தாய்மொழி நாள் தினத்தை முன்னிட்டு உயர்திரு. மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் தலைமையில் உலக தாய்மொழி நாள் உறுதிமொழியை அரசு அலுவலர்களும், அரசு ஊழியர்களும் ஏற்றுக்கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## கடலோர விழிப்புணர்வு சைக்கிளோதான் 2026 எனும் சைக்கிள் பேரணி



மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை (சிஐஎஸ்எப்) சார்பில் ‘வந்தே மாதரம்’ கடலோர விழிப்புணர்வு சைக்கிளோதான் 2026 எனும் சைக்கிள் பேரணி டெல்லியில் ஜனவரி 28-ல் தொடங்கியது. நேற்று அவர்கள் கன்னியாகுமரி வந்தடைந்தனர்.



குமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று 10, 12-ம் வகுப்பு பொதுத் தேர்வு குறித்து துறை அலுவலர்களுடன் கலெக்டர் அழகுமீனா கலந்தாய்வு மேற்கொண்டார்.

## செய்யாறு கலைஞர் சிலை அருகே ஆலத்தூர் ஏ.எம்.ஏழுமலை ஏற்பாட்டில் அன்னதானம் வழங்கல்!



**செய்யாறு, பிப். 21:**
செய்யாறு கலைஞர் சிலை அருகே 45ம் நாளான நேற்று ஆலத்தூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ஏ.எம்.ஏழுமலை ஏற்பாட்டில் அன்னதானம் வழங்கப்பட்டது. செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் ஜோதி, முன்னாள் எம்.எல்.ஏ., அன்பழகன், ஒன்றிய செயலாளர் ஞானவேல் ஆகியோர் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர்.

மாவட்ட துணைச் செயலாளர் லோகநாதன், நகர செயலாளர் விஸ்வநாதன், புரிசை சிவக்குமார், கோபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதையடுத்து தி.மு.க., பொறுப்பாளர்களான கலைச்செல்வன், ஹேமச்சந்திரன், குமாரராஜா, மாத்தூர் பாபு, பாலாஜி, ராஜீவ்காந்தி கோபு, கவுன்சிலர்கள் கோவேந்தன், ரமேஷ், அண்ணாதுரை, சூரிய பிரகாஷ், தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு, பொதுமக்கள் 1000 பேருக்கு அன்னதானம் வழங்கினர். அன்னதானத்தை பெற்று கொண்ட பொதுமக்கள் மனதார வாழ்த்து தெரிவித்து விட்டு சென்றது குறிப்பிடத்தக்கது.

## அரசு கலைக் கல்லூரியில் மாணவருக்கு பட்டம்



சிவகங்கை மன்னர் துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரியில் மாணவருக்கு பட்டம் வழங்கிய சேதுபாஸ்கரா கல்வி நிறுவனங்களின் தலைவர் சேதுகுமணன். உடன் கல்லூரி முதல்வர் அந்தோணி டேவிட்நாதன் உள்ளிட்டோர்.

## சுமை தூக்கும் தொழிலாளர்கள் மாநில பாதுகாப்பு சங்கத்தினர் முற்றுகை



திருவண்ணாமலையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் அலுவலகத்தை பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சுமை தூக்கும் தொழிலாளர்கள் மாநில பாதுகாப்பு சங்கத்தினர் முற்றுகையிட்டனர்.

## காட்பாடி ரெட்கிராஸ் கிளையின் ஆண்டு பொதுக்குழு கூட்டம் மற்றும் புதிய மேலாண்மைக்குழு நிர்வாகிகள் தேர்வு!



**வேலூர், பிப். 21:**
காட்பாடி வட்ட கிளையின் ஆண்டு பொதுக்குழு கூட்டம் மற்றும் புதிய மேலாண்மைக்குழு நிர்வாகிகள் தேர்வு கூட்டம் காட்பாடி சித்தூர் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள நாராயணா திருமண மண்டபத்தில் வேலூர் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் தலைவர் எ.செந்தில்குமார் ஒப்புதலுடன், துணைத்தலைவர் வழக்கறிஞர் வி.பாரிவள்ளல், மாவட்ட மேலாண்மைக்குழு உறுப்பினர் ஆர்.சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

காட்பாடி கிளையின் மேலாண்மைக்குழு உறுப்பினர்களாக செ.நா. ஜனார்த்தனன், எஸ்.எஸ். சிவவடிவு, ஆர்.விஜயகுமாரி, வி.பழனி, என்.தங்கவேல், டி.லிவிங்ஸ்டன் மோசஸ், எம்.திலகர், என்.பிரகாஷ், டாக்டர் வீ.தீனபந்து, எல். ரவிச்சந்திரன், எ.ஆனந்தகுமார், எஸ்.ரமேஷ்குமார் ஜெயின், ஜெ.குமரவேல், என்.ஞானவேல், பி.என்.ராமச்சந்திரன், ஆர். ராதாகிருஷ்ணன், டி.செல்வமணி, கே.குணசேகரன், ஆர்.சுதாகர், எஸ்.அருள்சுடர், வி.ஆறுமுகம், ஆர்.லட்சுமிநாராயணன் ஆகியோர் ஒரு மனதாக தேர்தெடுக்கப்பட்டனர்.

பின்னர் நடைபெற்ற மேலாண்மைக்குழு கூட்டத்தில் அவைத்தலைவராக முனைவர் செ.நா.ஜனார்த்தனன், செயலாளராக எஸ். எஸ்.சிவவடிவு, அவை துணைத்தலைவராக ஆர். விஜயகுமாரி, பொருளாளராக வி.பழனி ஆகியோர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

துணைத்தலைவர் வி.பாரிவள்ளல், ஆர். சீனிவாசன் ஆகியோர் தேர்தல் அலுவலர்களாக செயலாற்றி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் பட்டியலை அவைத்தலைவர் செ.நா. ஜனார்த்தனனிடம் வழங்கினர்.

காட்பாடி கிளையின் சார்பில் ரத்த பரிசோதனை நிலையம் மீண்டும் தொடங்க உரிய முயற்சிகள் மேற்கொள்வது, மினி ஆம்புலன்ஸ் சேவை தொடங்குவது மற்றும் சிறுநீரக டயாலிசிஸ் மையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு மேற்கொள்வது என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## ஆற்றுக்கால் பகவதி அம்மன் கோவில் பிப்.23இல் பொங்கல் திருவிழா

**நாகர்கோவில், பிப்.21:**

நாகர்கோவில்.பிப்.19 ஆற்றுகால் பகவதி அம்மன் கோவிலில் நடைபெறும் பொங்கல் திருவிழா 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 23, திங்கட்கிழமை அன்று தொடங்குகிறது. அன்றைய தினம் மாலை 5:30 மணிக்கு காப்பு கட்டி குடியிருத்தல் சடங்கு நடைபெறும். உலக புகழ்பெற்ற ஆற்றுகால் பொங்கல் விழா மார்ச் 3, செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறுகிறது. காலை 9:45 மணிக்கு பண்டார அடுப்பில் தீ ஏற்றப்படும். பிற்பகல் 2:15 மணிக்கு பொங்கல் நிவேத்யம் நடைபெறும். இரவில் அம்மனின் திருவீதி உலா முடிந்த பின், மார்ச் 4, புதன்கிழமை அதி காலை 12:45 மணிக்கு குருதி தர்ப்பணம் சடங்குடன் திருவிழா நிறைவடையும். என செய்தியாளர்களுக்கு கோவில் நிர்வாகிகள் அளித்த பேட்டியில் தெரிவித்தனர்.

## ஆதிதிராவிடர், பழங்குடியின இளைஞர்களுக்கு விமான முன்பதிவு ஆளுமை பயிற்சி

**குமரி, பிப்.21:**

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் தற்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு விமான முன்பதிவு ஆளுமை (AIRLINE RESERVATION EXECUTIVE) மற்றும் கேபின் குழு பணியாளர் (AIRLINE CABIN CREW COURSE) பயிற்சி வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சியில் சேர ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரை சார்ந்தவர்களாகவும், குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்குள்ளும் இருக்க வேண்டும். 18 முதல் 35 வயது வரை உள்ளவர்கள்,, பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். மேலும் இப் பயிற்சிக்கான கால அளவு மூன்று மாதங்கள் ஆகும். இப்பயிற்சியில் விமான டிக்கெட் முன்பதிவு முறை, வாடிக்கையாளர் சேவை, தொடர்புத் திறன்,ஆளுமை மேம்பாடு, விமான பாதுகாப்பு நடை முறைகள் மற்றும் கேபின் குழு பணிகள் குறித்து தொழில்முறை பயிற்சி வழங்கப்படும். இப்பயிற்சி திருப்பூர் மாவட்டத்தில் அளிக்கப்படவுள்ளது. இப்பயிற்சியினை முழுமையாக முடித்த இளைஞர்க ளுக்கு சான்றிதழ் மற்றும் தகுதியுள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பிற்கு வழிவகை செய்யப்படும். இப்பயிற்சி யினை பெற தாட்கோ இணையதளமான (WWW.TAHDCO. COM) என்ற முகவரியில் விண்ணப்பிக்கலாம். மேலும் திருப்பூரில் உள்ள விடுதியில் தங்கி படிக்கும் வசதி மற்றும் உணவுக்கான செலவினம் தாட்கோ மூலமாக வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர்.ஆர். அழகுமீனா தெரிவித்துள்ளார்.

## பிப்.23இல் முன்னாள் படை வீரர் சிறப்பு குறைதீர் கூட்டம்

**நாகர்கோவில். பிப்.21:**

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் பிப் 23 அன்று சரியாக காலை 9 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. எனவே கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் படைவீரர்கள், அவர்களைச் சார்ந்தோர்கள் மற்றும் படைவீரர்களைச் சார்ந்தோர்கள் தங்களது நீண்ட நாள் கோரிக்கைகளை உரிய விண்ணப்பமாக இரட்டை பிரதிகளில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நேரில் சமர்ப்பித்து பயன்பெறுமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் ஆர் அழகு மீனா தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் கனமழை எச்சரிக்கை



**சென்னை, பிப்.21:**

தமிழகத்தில் பிப் 21ஆம் தேதி கன மழை பெய்யும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 21ஆம் தேதி தமிழ்நாட்டில் தேனி, விருதுநகர், தென்காசி, நெல்லை, குமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் கன மழைக்கு வாய்ப்பு உள்ளது. இந்தியப் பெருங்கடல் மற்றும் அதை ஒட்டிய தென் கிழக்கு வங்கக்கடல் பகுதியில் அடுத்த 24 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு உள்ளது என சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

## 2025-26ம் ஆண்டுக்கான இறுதி துணை மதிப்பீடுகள்: நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பேரவையில் தாக்கல்



**சென்னை, பிப்.21:**

2025-26 ஆம் ஆண்டுக்கான இறுதி துணை மதிப்பீடுகளை முன்வைத்து அமைச்சர் தங்கம் தென்னரசு சட்டமன்றத்தில் பதிலளித்தார்.

சட்டசப்பேரவையில் இன்று பட்ஜெட் மீதான விவாதத்திற்கு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை ஆற்றினார். குறிப்பாக, 2025-26 ஆம் ஆண்டுக்கான இறுதி துணை மதிப்பீடுகளை முன்வைத்து அமைச்சர் தங்கம் தென்னரசு சட்டமன்றத்தில் பதிலளித்தார். அப்போது அவர் பேசும்போது, "2025-2026 ஆம் ஆண்டுக்கான இறுதி துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கையினை இம்மாமன்றத்தின் முன் வைக்கின்றேன். இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் 43,08,299 கோடி ரூபாய் நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கின்றன. இதில், 35,56,266 கோடி ரூபாய் வருவாய் கணக்கிலும், 4,548.71 கோடி ரூபாய் மூலதனக் கணக்கிலும், 297162 கோடி ரூபாய் கடன் கணக்கிலும் அடங்கும்.

2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாளன்று 2025-26 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், புதுப்பணிகள் மற்றும் துணைப்பணிகள் குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவது இத்துணை மதிப்பீடுகளின் முக்கிய நோக்கமாகும்.

துணை மதிப்பீடுகளில் கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படும் சில முக்கிய இனங்கள் பின்வருமாறு:

மானியக் கோரிக்கை எண். 13: உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)", அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் 2026 ஆம் ஆண்டின் பொங்கல் பரிசு தொகுப்புடன் 3,000 ரூபாய் வழங்குவதற்காக ரூ.6,95,705 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது

மானியக்கோரிக்கை எண்.53: "சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை" 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பயனாளிகளுக்கு தலா 5,000 ரூபாய் வழங்குவதற்காக கூடுதல் நிதியாக 3,913.32 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கை எண் 16 'நிதித் துறை 2025-26 ஆம் ஆண்டில் உத்திரவாத மீட்பு நிதிக்கு மாற்றப்படுவதற்காக ரூ.3,08680 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மானியக்கோரிக்கை எண்.48: "போக்குவரத்துத் துறை", நடப்பு நிதியாண்டில் அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்து இயற்கை எய்திய, ஓய்வுபெற்ற மற்றும் தன்விருப்ப ஓய்வுபெற்ற ஊழியர்களின் ஜூலை மாதம் 2023 முதல் மார்ச் மாதம் 2026 ஆம் ஆண்டு வரையிலான ஓய்வு காலப் பணப்பலன்களை வழங்குவதற்காக மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு வட்டியில்லா வழிவகை முன்பணம் வழங்குவதற்கு 3,285.03 கோடி ரூபாய் அரசு அனுமதித்துள்ளது. துணை மதிப்பீடுகளில் 161154 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதத் தொகை மானியத்தில் மறுநிதியொதுக்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.

பேரவைத் தலைவர், 2025-2026 ஆம் ஆண்டுக்கான இறுதி துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகின்றேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

## 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' என்ற தலைப்பில் பிப்.23 முதல் தி.மு.க. வீடு, வீடாக பிரச்சாரம்: ஸ்டாலின் அறிவிப்பு




**சென்னை, பிப்.21:**

'வெல்லும்தமிழ்ப்பெண்கள்' என்ற தலைப்பில் 23-ந் தேதி முதல் தி.மு.க. வீடு, வீடாக பிரச்சாரத்தை தொடங்க உள்ளதாக முதலமைச்சர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது: திராவிட மாடல் அரசு மைந்த பிறகு பெண்களுக்கான 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்', -'விடியல் பயணம்', -'தோழி விடுதிகள்', -'புதுமை பெண் திட்டம்' உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு, மகளிருக்கான ஆட்சியென நடைபெற்று வருகிறது. நமது சாதனைத் திட்டங்களால் பெண்கள் -'வெல்லும் தமிழ்ப் பெண்களாக' உயர்ந்துள்ளனர்.

பெண்களுக்கான எண்ணற்ற பல திட்டங்களையும் சாதனைகளையும் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள மகளிரிடம் எடுத்து சென்று சேர்ப்பதே 'வெல்லும் தமிப்பெண்கள்' பரப்புரை யின் நோக்கமாகும். இப்பரப்புரையை, வீடு வீடாகச் சென்று மேற்கொள்ளும் விதமாக தி.மு.க.வின் சார்பில் ஒவ்வொருவாக்குச்சாவடியிலும் மாவட்டச் செயலாளர்களால் வழங்கப்பட்டுள்ள பட்டியலின் அடிப்படையில், 10 மகளிரை கொண்ட குழு உருவாக்கப் பட்டுள்ளது.

அக்குழுவின் சார்பில் ஒரு உறுப்பினர் வீதம் தேர்வு செய்யப்பட்டு தொகுதி அளவிலான பயிற்சிக் கூட்டங்களை நடத்திட வேண்டும். "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" பரப்புரைக்கான சட்டமன்றத் தொகுதி வாரியான பயிற்சிக் கூட்டத்தை வரும் 20, 21 மற்றும் 22ம் தேதிகளுக்குள் அனைத்து தொகுதிகளிலும் நடத்தி முடித்திட வேண்டும்.இப்பயிற்சியை, சட்டமன்றத் தொகுதி மகளிர் அணி பொறுப்பாளர்கள் வழங்குவர்.

தேர்தலை காரணமாக வைத்து, கலைஞர் மகளிர் உரிமைத் தொகைதிட்டத்தையே முடக்குவதற்கான ஒன்றிய பா.ஜ.க. அ.தி.மு.க.வின் சூழ்ச்சிகளை முறியடித்து, " நீ ஆயிரம் ரூபாயை நிறுத்த முயற்சித்தால், நான் என் மக்களுக்கு ரூபாய் ஐந்தாயிரமாக தருவேன்" என சூளுரைத்து ரூ.5 ஆயிரத்தினை தமிழ்நாட்டு பெண்களுக்கு வழங்கிய திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் வீடு வீடாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

அதுமட்டுமின்றி, 'திராவிடமாடல் 2.0' ஆட்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மாதம் ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்பதையும் மகளிர்க்கு உணர்த்திட வேண்டும். வரும் 23ம் தேதி முதல் "வெல்லும் தமிழ்பெண்கள் - வீடு வீடாகப் பரப்புரை" தொடங்கி, உலக மகளிர் தினமான மார்ச் -8ம் தேதிக்குள் அனைத்து வீடுகளையும் சென்றடையும் வகையில் சிறப்பாக நடத்திட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

## புற்றுநோயைத் தடுக்கும் ஒரு கப் தேநீர்...



'டீ' என்பது வெறும் ஒரு பானம் மட்டுமல்ல, அது பலரது வாழ்வியலோடு கலந்த ஒரு உணர்வு என்று சொன்னால் மிகையாகாது. பசி எடுத்தால் சாப்பிடுகிறார்களோ இல்லையோ, நேரம் தவறாமல் டீ குடிக்கும் பழக்கம் பலரிடம் இருக்கிறது. நாம் புத்துணர்ச்சிக்காக விரும்பி அருந்தும் இந்தத் தேநீர், உண்மையில் நம் உடலுக்கு நன்மை செய்கிறதா அல்லது கேடு விளைவிக்கிறதா என்பதை நாம் ஒரு நிமிடம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தேநீர் ஒரு சிறந்த பானம் தான், ஆனால் அதைக் குடிக்கும் முறையும் அளவும் மாறும்போது, அதுவே உடலுக்குப் பல உபாதைகளை உண்டாக்கும் விஷயமாகவும் மாறக்கூடும்.

தேநீரின் ரகசிய நன்மைகள்!

தேயிலையில் இயற்கையாகவே பல மருத்துவ குணங்கள் நிறைந்துள்ளன. இதில் உள்ள ஆன்டிஆக்சிடெண்டுகள் நம் உடலில் உள்ள செல்களைப் பாதுகாத்து, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கின்றன. குறிப்பாக இதயத்தைப் பாதுகாப்பதிலும், உடலில் உள்ள கெட்ட கொழுப்பைக் கரைப்பதிலும் இதற்குப் பெரும் பங்கு உண்டு.

காபியைப் போல நடுக்கத்தையோ அல்லது பதற்றத்தையோ ஏற்படுத்தாமல், மூளையைச் சுறுசுறுப்பாகவும் விழிப்புடனும் வைத்திருக்கத் தேநீர் உதவுகிறது. கிரீன் டீ போன்ற வகைகளில் உள்ள சத்துக்கள் உடல் எடையைக் குறைக்கவும் வளர்சிதை மாற்றத்தைத் தூண்டவும் உதவுகின்றன.

புற்றுநோயைத் தடுக்கும்!

மருத்துவ நிபுணர்களின் கருத்துப்படி, ஒரு நாளைக்கு இரண்டு முதல் மூன்று கப் தேநீர் அருந்துவது மிகச் சரியான அளவாகும். இந்த அளவில் தேநீர் அருந்தும் பழக்கம் உள்ளவர்களுக்குப் புற்றுநோய் மற்றும் இதய நோய்கள் வரும் வாய்ப்பு வெகுவாகக் குறைவதாக ஆய்வுகள் கூறுகின்றன. ஆனால் நன்மை தருகிறது என்பதற்காக நாள் முழுவதும் டீ குடித்துக்கொண்டே இருக்கக் கூடாது. அப்படிச் செய்தால் உடலில் அதிகப்படியான கலோரி சேர்ந்து உடல் பருமனுக்கு வழிவகுக்கும்.

தவிர்க்க வேண்டியவை!

தேநீர் அருந்துவதற்கு என்று சில வரைமுறைகள் உள்ளன. காலையில் எழுந்தவுடனே வெறும் வயிற்றில் டீ குடிப்பது குடலுக்கு மிகவும் ஆபத்தானது. இது அமிலத்தன்மையை அதிகரித்து, நெஞ்செரிச்சல் மற்றும் பசியின்மையை உண்டாக்கும். எனவே காலை உணவு சாப்பிட்ட பிறகு அல்லது மதிய உணவுக்குப் பின் ஒரு மணி நேரம் இடைவெளி விட்டு டீ குடிப்பதே சிறந்தது. அதேபோலத் தூங்குவதற்கு ஆறு மணி நேரத்திற்கு முன்பு டீ குடிப்பதைத் தவிர்க்க வேண்டும். இல்லையெனில் தூக்கமின்மை பிரச்சனை ஏற்படும்.

பல வீடுகளிலும் கடைகளிலும் செய்யப்படும் மிகப்பெரிய தவறு, ஆறிப்போன டீயை மீண்டும் மீண்டும் சூடுபடுத்திக் குடிப்பது. இப்படிச் செய்வதால் தேயிலையின் சுவை கெடுவதோடு மட்டுமல்லாமல், அதில் உள்ள சத்துக்களும் அழிந்துவிடுகின்றன. குறிப்பாகப் பால் கலந்த டீயைச் சூடுபடுத்தும்போது அதில் தீங்கு விளைவிக்கும் பாக்டீரியாக்கள் உருவாகின்றன.

இது வயிற்றுப்போக்கு மற்றும் செரிமானக் கோளாறுகளை ஏற்படுத்தும். மேலும் அளவுக்கு அதிகமாக டீ குடிப்பவர்களுக்கு, உணவில் உள்ள இரும்புச்சத்தை உடல் கிரகித்துக்கொள்ளும் திறன் குறைந்து, ரத்த சோகை ஏற்படவும் வாய்ப்புள்ளது.

தேநீர், ஒரு மருந்து போன்றது. அதைச் சரியான அளவில், சரியான நேரத்தில் எடுத்துக்கொண்டால் அது நம் ஆயுளைக் காக்கும். அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு என்பதைப் போல, தேநீரையும் அளவோடு ருசிப்பது நல்லது.

## ஈரோட்டில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை: 943 கடைகள் மூடல், ரூ.2.57 கோடி அபராதம்

**ஈரோடு, பிப்.21:**

தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா, ஹான்ஸ், கூல் லிப் உள்ளிட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனைக்கு எதிராக ஈரோடு மாவட்டத்தில் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டு வருவதாக கலெக்டர் கந்தசாமி தெரிவித்துள்ளார்.

காவல்துறை, உணவு பாதுகாப்புத்துறை, உள்ளாட்சித்துறை, சுகாதாரத் துறை, கல்வித்துறை அதிகாரி கள் இணைந்து பள்ளி, கல்லூரிகள் அருகிலுள்ள கடைகளில் சோதனை நடத்தி வருகின்றனர். தடையை மீறி விற்பனை செய்யும் கடைகளுக்கு அபராதம் விதித்து, கடைகள் மூடப்பட்டு வருகின்றன.

2025 ஜனவரி முதல் டிசம்பர் வரை தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்த 943 கடைகள் மூடப்பட்டு, ரூ.2,57,25,000 அபராதம் விதிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் 4,783 கிலோ புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, மாவட்ட அளவிலான அழிப்புக் குழு முன்னிலையில் மாநகராட்சி குப்பைக் கிடங்கில் அழிக்கப்பட்டன.

இந்நிலையில் சத்தியமங்கலம் நீதிமன்றம் சாலை பகுதியில் உள்ள ஹனிபா பெட்டிக் கடையில், தமிழக அரசின் தடையை மீறி நான்காவது முறையாக புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டதாக புகார் கிடைத்தது. ஈரோடு மாவட்ட நியமன அலுவலர் தலைமையில் மாநக ராட்சி உணவு பாதுகாப்பு அலு வலர்கள் குழு ஆய்வு மேற்கொண்டு 1.25 கிலோ பொருட்களை பறிமுதல் செய்தது. தொடர்ந்து வணிகத் தைத் தடை செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன், உள்ளாட்சித் துறை வழங்கிய தொழில் உரிமமும் ரத்து செய்யப்பட்டது.

நான்காவது முறையாக குற்றம் செய்த கடை உரிமையாளருக்கு எதிராக மாவட்ட தீர்ப்பு வழங்கும் அலுவலக நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன்பு தொடர்ச்சியான குற்றச்செயலுக்காக ரூ.1.9 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. ஆய்வின் போது சுகாதாரத்துறை, மாநக ராட்சி மற்றும் காவல்துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

பள்ளி, கல்லூரிகள் மற்றும் உணவு வணிக நிறுவனங்கள் அருகில் தொடர்ந்து சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், வாகனங்களிலும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப் பட்டுள்ளதாகவும் ஆட்சியர் தெரிவித்தார்.

தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் நிகோட்டின் கலந்த உணவுப் பொருட்கள் விற்பனை குறித்த புகார்களை 0424-2223545 மற்றும் 9444042322 என்ற வாட்ஸ்அப் எண்ணில் தெரிவிக்கலாம். புகார் அளிப்போரின் விவரங்கள் ரகசியமாக வைக்கப்படும் எனவும் கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## தூத்துக்குடி மாவட்ட சோதனைச் சாவடிகளில் 24 மணி நேர தீவிர கண்காணிப்பு: எஸ்பி திடீர் ஆய்வு

**தூத்துக்குடி, பிப்.21:**

2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்ட எல்லைகளில் உள்ள சோதனைச் சாவடிகளில் நடை பெற்று வரும் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப் பணிகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சி. மதன் நேரில் சென்று ஆய்வு செய்தார். சட்டமன்றத் தேர்தலை ஒட்டி, தூத்துக்குடி மாவட்டம் முழுவ தும் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த எஸ்பி உத்தரவிட்டிருந்தார். அதன்படி மாவட்டத்தின் பிற மாவட்ட எல்லைகளில் உள்ள அனைத்து சோதனைச் சாவடிகளிலும் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் வாகனத் தணிக்கை நடைபெற்று வருகிறது. சோதனையின் போது வாகனங்களின் விவரங்கள் முறையாகப் பதிவேட்டில் குறிக்கப்படுகின்றன. சோதனைச் சாவடிகளில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்கள் மூலம் மாவட்டத்திற்குள் நுழையும் மற்றும் வெளியேறும் அனைத்து வாகனங்களும் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகின்றன. இந்த நிலையில் புதனன்று செய்துங்கநல்லூர் சோதனைச் சாவடியில் கண்காணிப்புப் பணிகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது அங்கு பணியில் இருந்த காவலர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்கினார். ஆய்வின் போது, ஸ்ரீவைகுண் டம் டிஎஸ்பி நிரேஷ், செய்துங்கநல்லூர் காவல் நிலைய ஆய்வாளர் ஜுன்குமார் மற்றும் காவலர்கள் உடனிருந்தனர்.

## தென்காசி மாவட்டத்தில், வைட்டமின் ஏ திரவம் வழங்கும் முகாம்

**தென்காசி, பிப். 21:**

வைட்டமின்-ஏ குறைபாட்டினால் ஏற்படும் பார்வை குறை பாடு, வயிற்றுப் போக்கு, தீவிர சுவாச தொற்று மற்றும் பள்ளி முன்பருவ குழந்தைகளிடையே (3-5 வயது) ஏற்படும் இறப்பதை தவிர்க்கும் பொருட்டும் வைட்டமின்-ஏ திரவம் வழங்கப்படுகிறது. தென்காசி மாவட்டம் முழுவதும் வைட்டமின் ஏ திரவம் வழங்கும் முகாம் பிப்ரவரி மாதம் 23 முதல் 28 வரை (புதன் நீங்கலாக) நடைபெறும். வைட்டமின்-ஏ திரவம், 6 மாதம் முதல் 60 மாதம் வரையிலான சுமார் 88,690 குழந்தைகளு க்கு வழங்குவதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வைட்டமின்-ஏ திரவமானது 6 மாதம் முதல் 11 மாதம் வரை யுள்ள குழந்தைகளுக்கு 1 மி.லி. என்ற அளவிலும், 12 மாதம் முதல் 60 மாதம் வரை குழந்தைகளுக்கு 2 மி.லி. என்ற அள விலும், அங்கன்வாடி மற்றும் துணை சுகாதார நிலையங்க ளில் வழங்கப்படவுள்ளது. எனவே, பொதுமக்கள் தங்களுக்கு அருகிலுள்ள துணை சுகாதார நிலையங்கள் மற்றும் அங்கன் வாடி மையங்களுக்கு தங்களது 5 வயதிற்குட்பட்ட குழந்தைக ளை அழைத்துச் சென்று பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.

# 12 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் வெளியே எடுக்கப்படும் அத்திவரதர் சிலை: மார்ச் 1 முதல் தரிசனம் செய்யலாம்



**கும்பகோணம், பிப்.21:**

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வரதராஜப் பெருமாள் கோயிலில் பாதாள அறையில் வைக்கப்பட்டுள்ள ஸ்ரீதேவி, பூதேவி உடனாய அத்திவரதரை 12 ஆண்டுகளுக்கு பிறகு மார்ச் 1-ம் தேதி முதல் 10 நாட்களுக்கு பக்தர்கள் தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கும்பகோணம் பிரம்மன் கோயில் தெருவில் உள்ள வரதராஜப் பெருமாள் கோயிலில் மூலவர் சந்நிதிக்கு கிழக்கில் உள்ள பாதாள அறையில் அத்தி மரத்தாலான, சுமார் ஒன்றரை அடி உயரம் உள்ள ஸ்ரீதேவி, பூதேவி உடனாய அத்திவரதர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

இந்த சிலை 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியில் எடுக்கப்பட்டு, பக்தர்கள் தரிசனத்துக்காக வைக்கப்பட்டு, மீண்டும் பாதாள அறைக்கு கொண்டு செல்லப்படும். 1915-ம் ஆண்டுக்குப் பின் பல்வேறு காரணங்களால் இந்த சிலை வெளியே எடுத்து வைக்கப் படவில்லை.

98 ஆண்டுகளுக்கு பிறகு 2013-ம் ஆண்டு இந்த சிலை வெளியே எடுக்கப்பட்டு, பக்தர்களின் தரிசனத்துக்காக வைக்கப்பட்டது. பின்னர் அந்த சிலை மீண்டும் பாதாள அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது.

இந்தநிலையில், 12 ஆண்டுகளுக்குப் பிறகு, ஸ்ரீதேவி, பூதேவி உடனாய அத்திவரதர் சிலை மார்ச் 1-ம் தேதி வெளியில் எடுக்கப்பட்டு, சிறப்பு பூஜைகளுக்குப் பின்னர் பக்தர்கள் தரிசனத்துக்காக வைக்கப்பட உள்ளது.

தொடர்ந்து, மார்ச் 10-ம் தேதி வரை இந்த சிலையை பக்தர்கள் தரிசனம் செய்யலாம். அப்போது ஆகம விதிகளின்படி காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை, மாலை 5 மணி முதல் இரவு 8.30 மணி வரை தைலக்காப்பு, புஷ்ப சேவை, ஊஞ்சல் சேவைகளை பக்தர்களே செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மகாசிவராத்திரி பிரம்மோற்சவ விழா 10-வது நாள்: பக்தர்களுடன் கிரிவலம் சென்ற ஸ்ரீகாளஹஸ்தீஸ்வரர்





**திருப்பதி, பிப்.21:**

திருப்பதி மாவட்டம் ஸ்ரீகாளஹஸ்தி சிவன் கோவிலில் வருடாந்திர மகாசிவராத்திரி பிரம்மோற்சவ விழா கோலாகலமாக நடந்து வருகிறது. விழாவின் 10-வதுநாளான நேற்று காலை 8.30 மணியளவில் தனித்தனி ஜனதா அம்பாரி வாகனங்களில் உற்சவர்களான ஸ்ரீகாளஹஸ்தீஸ்வரரும், ஞானப்பிரசுனாம்பிகை தாயாரும் புதுமண தம்பதியர் அலங்காரத்தில் கைலாசகிரி மலையை சுற்றி கிரிவலம் செல்லும் நிகழ்ச்சி நடந்தது.

இதையொட்டி கோவில் வளாகத்தில் உள்ள அலங்கார மண்டபத்தில் உற்சவர்களுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீப, தூபம் மற்றும் தீபாராதனை, நெய்வேத்தியம் சமர்ப்பிக்கப்பட்டது. தொடர்ந்து மேள, தாளங்கள் மற்றும் மங்கள வாத்தியங்கள் முழங்க கோவிலில் இருந்து ஊர்வலமாக எடுத்துச் சென்று வாகனங்களில் அமர்த்தப்பட்டனர்.

பின்னர் சுவாமி-அம்பாள் கிரிவலம் புறப்பட்டனர். பஜார் வீதி, ஜெயராம் ராவ் வீதி வழியாக சென்ற சுவாமி-அம்பாளை பின்தொடர்ந்து கோவில் அதிகாரிகள், திரளான பக்தர்கள் கிரிவலம் சென்றனர். சுவாமி-அம்பாள் சுமார் 16 கிராமங்கள் வழியாக சென்று பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். சுமார் 23 கிலோ மீட்டர் சுற்றளவு கொண்ட இந்த கிரிவலத்தை நிறைவு செய்த சுவாமி-அம்பாள், அங்கிருந்து புறப்பட்டு இரவு 10 மணியளவில் ஸ்ரீகாளஹஸ்தி சிவன் கோவிலை அடைந்தனர்.

சுவாமி-அம்பாள் கைலாசகிரி மலையை வலம் வரும் நிகழ்ச்சி ஆண்டுக்கு 2 முறை நடப்பது வழக்கம். ஒரு முறை மாட்டுப்பொங்கல் அன்றும், மற்றொரு முறை வருடாந்திர மகா சிவராத்திரி பிரம்மோற்சவ விழாவின்போதும் நடக்கும்.

திருக்கல்யாண உற்சவங்களில் (ஸ்ரீகாளஹஸ்தீஸ்வரர் திருக்கல்யாணம், சபாபதி திருக்கல்யாணம்) பங்கேற்ற முப்பத்து முக்கோடி தேவர்கள், முனிவர்கள், ரிஷிகளை சிவபெருமானும் அம்பாளும் கைலாசகிரி மலை வரை சென்று வழியனுப்பி வைப்பதற்காக கிரிவலம் நடப்பதாக ஐதீகம்.

கிரிவலம் செல்ல இயலாத பக்தர்கள் ஸ்ரீகாளஹஸ்தி சிவன் கோவில் அருகில் உள்ள சுகப்பிரம்மாஸ்ரமத்துக்கு அருகிலுள்ள 16 கால் மண்டபம் அருகே காத்திருந்து கிரிவலம் சென்று திரும்பிய உற்சவர்களை வரவேற்று விழா நடத்தினர். இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர். இதை, எதிர்சேவை நிகழ்ச்சி என்றும் பக்தர்கள் அழைக்கின்றனர்.

கிரிவலம் நிறைவடைந்ததும் இரவு 11 மணியளவில் குதிரை வாகனத்தில் ஸ்ரீகாளஹஸ்தீஸ்வரரும், சிம்ம வாகனத்தில் ஞானப்பிரசுனாம்பிகை தாயாரும் கோவிலின் நான்கு மாடவீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.



வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## வி.கே.புரத்தில் 14 பேரை கடித்து குதறிய தெரு நாய்

**திருநெல்வேலி, பிப்.21:**

நெல்லை மாவட்டம் வி. கே.புரம் நகராட்சியின் சுற்று வட்டார பகுதியில் கடந்த சில மாதங்களாக தெரு நாய் தொல்லை அதிகரித்து காணப்படுகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்பாக வீட்டில் வளர்க்கப்பட்ட நாய் ஒன்று ஏராளமா னோரை கடித்து குதறிய சம்பவத்தில் நாயின் உரிமையாளர் மீது வழக்கு பதிவு செய்ய கோரி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அதே. நேரத்தில் தெரு நாய்கள் வி.கே.புரம் நகர் பகுதிகளில் பள்ளிக் கூடங்கள் இருக்கும் இடங்களிலும், தெருக்களிலும் கூட்டம் கூட்டமாக திரிவது மட்டுமல்லாது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் துரத்தி சென்று கடித்து வருகின்றன. இது தொடர்பாக நகராட்சி நிர்வாகத்திடம் பலமுறை கோரிக்கை வைத்தும் அவர்கள் எந்தவித நட வடிக்கை யும் எடுக்கவில்லை என்று பொதுமக்கள் புகார் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் தெருநாய் ஒன்று வெறித்தனமாக சுற்றித் திரிந்து 14 பேரை கடித்து குதறிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அய்யா கோவில் தெரு, பழைய போலீஸ் நிலையம் பகுதி களில் நடந்த இந்த சம்பவத்தில் 3 சிறு வர்கள் உட்பட மொத்தம் 14 பேர் நாய் கடியால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் ஜெசிந்தா, பிரேமா தனுசு வேல், பாலமதி,தீரான், மதன்குமார் உள்பட 10 பேர் படுகாயம் அடைந்த நிலையில் அம்பாசமுத்திரம் அரசு சிகிச்சை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தொடர் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் 4 பேர் லேசான காயங்களுடன் முதலுதவி பெற்றுள்ளனர். அம்பாசமுத்திரம் சுற்று வட்டார பகுதிகளில் தொடர்ந்து தெரு நாய் கடிப்பு சம்பவங்கள் நடைபெற்று வருவது பொது மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே தெரு நாய்களை உடனடியாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் அதிகாரி களிடம் வலியுறுத்தியுள்ளனர்.

## விவசாய நகைக்கடனில் கட்டாய இன்சூரன்ஸ் ஐஓபி வங்கிக்கு எதிராக விவசாயிகள் சங்கம் புகார்

**தூத்துக்குடி, பிப்.21:**

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தூத்துக்குடி மாவட்ட செய லாளர் பா.புவி ராஜ், மாவட்ட தலைவர் ராகவன் ஆட்சியர் அலுவலகத்தில் நடை பெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் முகாமின் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்த னர். அந்த மனுவில், ஆயி ரக்கணக்கான விவசாயிகள் ஐஓபி வங்கியின் வாடிக்கை யாளர்களாக இருந்து வருவ தாகவும், நகைக்கடன் பெறும் போது வங்கி அதி காரிகள் இன்சூரன்ஸ் பாலிசிகளை கட்டா யப்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விவசாய நகைக்கடன் பெற இன்சூரன்ஸ் அவசியம் என அரசு அல்லது ரிசர்வ் வங்கி இதுவரை எந்த உத்த ரவும் பிறப்பிக்கவில்லை என்றும், இலக்குகளை (TARGET) நிறைவேற்றும் நோக்கில் வங்கி அதிகாரிகள் விவசாயிகளை அழுத்தம் கொடுத்து பாலிசிகளை வாங்க வற்புறுத்துகின்றனர் என்றும் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. இத்தகைய விதிமீறல்கள் நடைபெறாத வகையில் வங்கி அதிகாரிகளுக்கு தெளிவான வழிகாட்டுதல்கள் வழங்க வேண்டும் என்றும் மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# டெபிட் கார்டை விட கிரெடிட் கார்டு பயன்படுத்துவது நல்லதா?

தனி நபர்களின் செலவு, பணம் செலுத்தும் முறை, வங்கிப் பணத்தின் பாதுகாப்பு போன்றவை, அவர் எந்த வகையான வங்கி அட்டையைப் பயன்படுத்துகிறார் என்பதைப் பொருத்து மாறுபடுகிறது.

பெரும்பாலான மக்கள் கிரெடிட் மற்றும் டெபிட் கார்டு என இரண்டையும் பயன்படுத்தினாலும்கூட, ஒவ்வொரு கார்டும் பணப்பரிமாற்றத்தில் பல்வேறு செயல்பாடுகளைக் கொண்டிருக்கிறது.

டெபிட் கார்டுகள் உங்கள் வங்கிக் கணக்குடன் இணைக்கப்பட்டிருக்கும். கிரெடிட் கார்டுகள் முதலில் பொருளை வாங்கிவிட்டு பின்னர் தொகையை செலுத்த அனுமதிக்கும்.

இதில் எந்த வகையான கார்டுகள் எந்த வகையான செலவினங்களுக்கு உகந்தது, சிறந்தது என்பதை ஒருவர் புரிந்து கொள்ளும்பட்சத்தில், பாதுகாப்பான மற்றும் பணத்தின் மதிப்பை உணர்ந்தவராக ஒருவரை மாற்றும் என்கிறார்கள்.

அதாவது, கிரெடிட் கார்டுகள் என்றாலே கடனாளி ஆக்குபவை அல்ல, அதில் நன்மைகளும் இருக்கின்றன, டெபிட் கார்டுகளை விடவும் கிரெடிட் கார்டுகள் பல சிறப்பம்சங்களைக் கொண்டிருக்கின்றன அதனை உரிய முறையில் பயன்படுத்துபவர்கள்.

கிரெடிட் கார்டுகள் எவ்வாறு செயல்படுகின்றன?

ஒருவர் டெபிட் கார்டு மூலம் பொருள் வாங்கும்போது, அதனுடன் இணைக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கிலிருந்து பணம் எடுக்கப்படும். வங்கிக் கணக்கில் பணமில்லையேல் வாங்க முடியாது. ஒவ்வொரு பரிவர்த்தனையிலும், கணக்கில் வரவு குறைக்கப்பட்டு, பணம் உடனடியாக எடுக்கப்படும். ஆனால், கிரெடிட் கார்டு மூலம், ஒருவர் குறிப்பிட்ட வரம்பிற்குள் பணத்தைச் செலவழித்து, பின்னர் அதற்குரிய பணத்தை செலுத்தும் வசதி கிடைக்கிறது.




கிரெடிட் கார்டுகள், டெபிட் கார்டுகளுடன் ஒப்பிடும் போது, சிறந்தா என்பதே இங்கு கேள்வி அல்ல, சரியான இடத்தில், சரியான அட்டையைப் பயன்படுத்துவதுதான் முக்கியம் என்பதுதான்.

கிரெடிட் கார்டுசெலவினமும் சுழற்சியும்

உங்களிடம் பணம் இருக்கிறதோ இல்லையோ, ஆனால் ஒரு கட்டுப்பாட்டுடன் செலவுகளை மேற்கொள்ள வழிவகுக்கிறது. சிலருக்கு குறிப்பிட்ட தேதிக்குள் மாத வருமானம் வராமல் இருக்கலாம், ஒரு சீரற்ற வருமான முறை இருக்கலாம். அந்த நேரங்களில் அவர்களுக்கு கிரெடிட் கார்டு கைகொடுக்கும். இந்த சரியான சுழற்சியில் உங்களைச் சுழல வைக்க கிரெடிட் கார்டு உதவலாம்.

முழு கட்டணம் செலுத்த அவகாசம்

பல கிரெடிட் கார்டு நிறுவனங்கள் கட்டணத்தை செலுத்த அவகாசங்களை வழங்குகின்றன, இது ஒருவர் கிரெடிட் கார்டு கட்டணத்தை முழுமையாகச் செலுத்தும்போது அந்தத் தொகைக்கு வட்டி செலுத்த வேண்டிய அவசியமில்லாமல் செய்கிறது.

சிபில் ஸ்கோர்

கிரெடிட் கார்டுகளை தொடர்ந்து சரியான முறையில் பயன்படுத்தி உரிய நேரத்தில் பணம் செலுத்துவதும் சிபில் ஸ்கோர் உயர வழிவகுக்கும். ஆனால், டெபிட் கார்டை எவ்வளவு பயன்படுத்தினாலும் சிபில் ஸ்கோர் உயராது.

பணப் பாதுகாப்பு

கிரெடிட் கார்டுகள் மூலம் செலவிடும்போது பணப் பரிவர்த்தனை ஒருவரது வங்கிக் கணக்கிலிருந்து கழிக்கப்படாததால், மோசடி நடந்தாலும் அதனை திரும்பப் பெற கால அவகாசம் கிடைக்கலாம். உங்கள் சொந்தப் பணம் பாதுகாப்பாக இருக்கும்.

ஆன்லைன் ஷாப்பிங்

கிரெடிட் கார்டு மூலம் ஆன்லைனில் ஷாப்பிங் செய்வது பாதுகாப்பானது. கிரெடிட் கார்டு பரிவர்த்தனை என்பதால் வங்கிக் கணக்கில் பணத்தை இழக்கும் அபாயம் ஏற்படாது.

அவசரகால உதவி

ஒருவரிடம் பெரிய அளவில் சேமிப்பு இல்லாதபோது கிரெடிட் கார்டுகள் பணப் பயன்பாட்டின் சுதந்திரத்தை வழங்குகின்றன. உங்களிடம் பணம் இருப்பதற்கு இணையாக, கிரெடிட் கார்டுகள் அவசரகாலத்தில் உதவும்.

பயணச் சலுகைகள்

கிரெடிட் கார்டுகள் எங்கும் ஏற்றுக்கொள்ளப்படுவதால் வெளிநாடு, வெளியூர் பயணங்களை எளிதாக்குகின்றன, மேலும் சர்வதேச பரிவர்த்தனைகளையும் மேற்கொள்ள முடியும்.

எனவே, திட்டமிட்டு குறிப்பிட்ட செலவுகளை கிரெடிட் கார்டு மூலம் மேற்கொண்டு, அந்த தொகையை அவகாச காலத்துக்குள் சரியாக செலுத்தினால் டெபிட் கார்டுகளை விடவும் கிரெடிட் கார்டுகள் பயனர்களுக்கு பல வகைகளில் நன்மைகளை அளிக்கின்றன என்பது பயன்படுத்தியவர்களின் கூற்றாக உள்ளது.

நிதி மேலாண்மையில் பெரிய அளவில் நிபுணத்துவம் இல்லாதவர்கள், வங்கிகள் அளிக்கும் கிரெடிட் கார்டுகள் பற்றிய புரிதல் இல்லாதவர்கள், முழுமையான தகவல்களைக் கேட்டறிந்துகொண்டு பயன்படுத்தலாம்.

# கல்லான ஒரு கல்யாண கதை

பாரதி நன்கு படித்து பெங்களூரில் மிக நல்ல வேலையில் இருந்த போது அவளது மேல் அதிகாரி ப்ரொபோஸ் செய்ததை ஏற்று கொண்டு திருமணம் செய்ய முடிவெடுத்தாள். பிரமதேஷ் பிரகாஷ் என்ற அவன் பெயரில் மட்டுமே பிரகாசம் இருந்ததை அவள் புரிந்து கொள்ளவில்லை . அவன் பிற மாநிலத்தை சேர்ந்தவன் . இந்திய கிழக்கெல்லையில் ஒரு கிராமத்தை சேர்ந்த அவனது பெற்றோர் தெற்கெல்லையை சேர்ந்த பாரதியை முதலில் ஏற்க மறுத்து ...பின்னர் மகனது சில குணங்களுக்கு இவளே சரி என்று யோசித்து திருமணத்திற்கு ஒத்து கொண்டார்கள்

.கோமதியின் தோழி தீபாவிடம் வந்து "பாரதி செலக்ட் பண்ணிய பையன் அசாம் கௌஹாத்தி எனக்கு பயமாக உள்ளது முற்றிலும் மாறுபட்ட மாநிலம் மக்கள் ....இருந்தாலும் .... அவளுக்கு பிடித்ததால் நாங்கள் ஒத்து கொண்டோம் என்று சொன்னவுடன் தீபா சொல்கிறாள் " இந்தியன் தானே கவலை படாதே "

ஆனாலும் கோமதிக்கு ஏனோ கவலை. அதனால் தீபாவிடம் " அவர்களை பற்றி நன்கு தெரிந்து கொண்டாயா ...உன் மகளுக்கு எவ்வளவு நாள் பழக்கம் " அதற்குள் பாரதி வந்து சொன்னாள் ...ஒருவரை தெரிந்து கொள்ள தனக்கு சில நாட்களே போதும் ஏனெனில் நான் மேனேஜ்மெண்ட் படிப்பு படித்துளேன் என்னால் மனிதர்களை கணிக்க முடியும் என்று ... சரி ஆல் தி பெஸ்ட் என்று கூறி கோமதி அமைதி ஆகிவிட்டாள் .

திருமண நாள் நெருங்கியது , அனைத்து உறவினர்களும் வந்து விட்டனர்... இல்லத்தில் திருமண களை கூடி விட்டது ...பெற்றோர்கள் மகிழ்ச்சியாக இங்கும் அங்கும் நடமாடி கொண்டு இருந்தனர் ...உறவுகள் வழக்கம் போல் முன்னால் ஒரு விதமாகவும் பின்னால் வேறு விதமாகவும் பெண்ணை பற்றியும் பையனை பற்றியும் பேசி கொண்டு இருந்தார்கள்.



எனக்கு மட்டும் பெண்ணை பார்க்கும் போது மனதில் ஒரு நெருடல் ... அவள் முகத்தில் காணும் மகிழ்ச்சியில் ஒரு நடிப்பும் தென்படுகிறதோ என்று ... மெதுவாக என் கணவரிடம் இதை பற்றி கூறிய போது உனக்கு என்றும் நீதான் புத்திசாலி என்று நினைப்பு ... அருமையாக பட்டு புடவையும் நகைகளும் அணிந்து தேவதையாக வலம் வரும் பெண்ணை பார்த்து என்ன கூறுகிறாய் ? குழப்பம் உண்டாக்காதே ... என்று என்னை அடக்கி சென்று விட்டார் ...

மன எச்சரிக்கைக்கு மதிப்பளிக்கும் விதத்தில் என் தோழியிடம் சென்று அனைவரின் விருப்பத்துடன் தானே இந்த திருமணம் என்று கேட்ட பொழுது அவள் கூறியது என் மன அமைதியை மேலும் கெடுத்தது என்றே சொல்லலாம் . பின் ஏன் இந்த திருமணம் என்ற பொழுது உறவை கூட்டி திருமணம் வைக்கும்போது எங்கள் கௌரவம் அதில் அடங்கி உள்ளது ... அதில் பாரதியின் தந்தை விட்டு கொடுக்க மாட்டேன் என்கிறார் ..இந்த திருமணம் நடந்தாக வேண்டும் ...இது அவளாக தேடி கொண்ட வாழ்க்கை என்று முடித்து விட்டார் ... அதன் பிறகும் போலியாக அந்த பெற்றோரும் ...பெண்ணும் முட்டாளின் சுவர்க்கம் என்று கூறும் கூற்றை போல் திருமணத்தில் ஈடுபட்டு அந்த திருமணமும் நடந்தது உறவின் முன்னால் கவுரவத்தை காப்பாற்ற !!! பாவம் அந்த படித்த பெண் பெயரில் மட்டுமே பாரதி கண்ட புதுமை பெண்ணாக சூழ்நிலை கைதியாக ... திருமணம் என்னவோ வேடிக்கை பொருள் போல் அவர்கள் முறை இவர்கள் வழக்கம் என நடந்து முடித்தாலும் உறவுகள் சென்ற பிறகே ...திருமண விவகாரம் தெரிய வந்தது .

பாவம் பாரதி ... சில நாட்களில் அவளை பெற்றவர்கள் வீட்டில் நான் கண்ட போது அவள் சொன்ன விஷயம் ... என்னை மிக மிக கோபம் கொள்ள செய்தது .

திருமண பத்திரிகை அடித்து அந்த பிரமதேஷிடம் காண்பிக்கும் எண்ணத்தில் ஒன்றும் சொல்லாமல் திடீரென அவனது இருப்பிடம் சென்ற போதே அவன் பெற்றோரிடம் ... இரு வருமானத்திற்கு இவளையும் , பின்னர் விரைவில் நம் குல வழக்க படி திருமணம் செய்து குழந்தையுடன் உள்ள தீப்தி என்ற பெண்ணை அழைத்து வருவோம் என்று கூறி கொண்டு இருந்ததை தெரிந்து கொண்டாளாம்

மிகவும் அதிர்ந்து போய் அவனிடம் விசாரித்த போது அந்த திருமணம் செல்லாது ...பதிவு செய்யவில்லை ...நாம் பதிவு செய்து விடுவோம் என்று கூறியுள்ளான் ......

செய்வதறியாது பின்னர் பெற்றோரிடம் இந்த திருமணம் வேண்டாம் என கூறிய போது தந்தை நான் அனைவரையும் அழைத்து விட்டேன் ...இதுதான் உன் தலை எழுத்து என கூறி நிர்பந்தத்தில் இந்த திருமணம் முடிந்ததாகவும் .... ஆனால் நான் அவனை பிரிந்து விட்டேன் என கூறினாள். எவ்வளவு மன உளைச்சல் .....

நிகழ் கால போலி கௌரவத்திற்காக நீண்ட கால வாழ்க்கையை தொலைத்து விட்டார்கள் .

திருமணம் செய்து விவாக ரத்து செய்வதை விட திருமணத்தையே ரத்து செய்து , அந்த பையன் மேல் புகார் கொடுத்து உண்மை பாரதி கண்ட புதுமை பெண்ணாக இருந்து இருக்கலாம் .



-CHELLAM SEKAR

# மருத்துவச்சி

தூரிகையின் ஏழு வயது மகள் மின்மினி மார் சளிப் பிடித்து இறும்பி கொண்டிருந்தாள்.

"அய்யய்யோ குழந்தைக்குச் சளி அதிகம் பிடிச்சிருக்கு, சரி சீக்கிரம் கிளம்பு. அப்பாவ கூப்பிட்டுகிட்டு மருத்துவரப் பாத்துட்டு வரலாம்னு சொன்னதும்",

மின்மினி தனது அம்மாவைப் பார்த்து "அம்மா நீயே ஒரு மருத்துவர், நாம ஏன் வேற ஒரு மருத்துவரைப் பாக்கணும்" என்றாள்.

"உனக்கு அந்த மருத்துவரப் பத்தி தெரியாதுமா, அவங்க கைராசிக்காரங்க. இந்த நோய்க்கெல்லாம் அவங்களோட கைப் பட்டாலே குணமாயிடும். நீ கௌம்பு, நான் எல்லாத்தையும் போகும்போது சொல்றேன்" என்றாள்

தூரிகையின் கணவன் கவிப்பிரியன் மகிழுந்தை ஓட்டினான்.

"அம்மா ஏதோ சொல்றேன்னு சொன்னியே" என நினைவுப்படுத்தினால் மின்மினி.

"இன்னைக்கு அம்மா பெரியப் படிப்பு படிச்சு மருத்துவரா இருக்கேன்னா அதுக்கு காரணமே நாம பார்க்கப்போற மருத்துவர்தான். அவங்ககிட்ட என் அம்மா காட்டாம விட்டிருந்தாங்கன்னா, நான் என்னைக்கோ செத்துப்போயிருப்பன்." எனப் சொல்லிக்கொண்டே வந்தாள்.

"அவங்க பேரு சந்திரா."

பின்னிருக்கையில் உட்கார்ந்துகொண்டு தனது மலரும் நினைவுகளைத் மகள் மின்மினியுடன் பகிர்ந்து கொண்டாள்.

"சந்திரா'ன்னா சுத்தி இருக்கிற ஊர் பொம்பளைங்களுக்கு நல்லா தெரியும். மகராசி, கைராசிக்காரின்னு வாழ்த்துவாங்க".

காலையில யாராவது பச்சைக் குழந்தையோட சந்திரா வீட்டுக்கு வந்துருவாங்க.

"உட்காருமா டீ'த் தண்ணி குடிச்சிட்டு வரேன்னு" கடைக்குப் போயிட்டு, ஆத்தி குடிச்சிட்டு அழுக்கடஞ்ச மருந்துப் பையும், ஒரு தகர டப்பாவையும் எடுத்துவந்து உட்காருவாங்க".

"சொல்லு, என்ன ஆச்சுன்?னு பையிலிருந்து பட்டுத் துணியைக் எடுத்துக் குழந்தையோட



கையப் புடிச்சு நாடியப் பார்த்து, கண்ணப் பார்த்துட்டு டக்குன்னு சொல்லிடுவாங்க"

"பணி, உடம்புக்கு ஒத்துக்கல, பாரு எப்படி இழுக்குது. கரும்புறுன்னு மார்சளி புடிச்சிருக்கு. கட்டு இழச்சு போட்டுடறேன்" என்று சொல்வாங்க.

கட்டு இழைக்க ஆரம்பிச்சதும் குழந்தைங்க அழும். "ஒன்னும் ஆகாது, அழாதே,"ன்னு பேசிகிட்டே வட்டக் கல்லைப் பையிலிருந்து எடுத்து வைப்பாள். உள்ளிருந்து சிறு சிறு குழாங் கற்கள் ஐந்தாறு எடுத்துச் சின்னக் கண்ணாடிப் பாட்டிலில் உள்ள தேனை நனைத்து சிறு சிறு கற்களால் மாற்றி மாற்றித் தேய்ப்பாள். மருந்தைப் பாலாடையில் எடுத்து, குழந்தையைத் தன் காலில் போட்டு, மூக்கை பிடித்து போட்டுவிடுவாள். அழாமல் நின்று தேன் பாட்டிலை பார்த்த குழந்தையிடம் "வேணுமா" என்று பேசுவதால்தான், சுற்றுபட்டு மக்கலெல்லாம் மகராசின்னும் கைராசிக்காரின்னும் பேர் சொல்றாங்க.

அதுவரை குழந்தையோட கவலையான முகத்தோடு உட்கார்ந்திருந்தவங்க எவ்வளவு என்று கனிவாகக் கேட்க,

"கொடு, கையில இருக்கிறது கொடு" என்று கராராகக் கேட்காமல், கொடுப்பதை வாங்கிக் கொள்வாள்.

"இதான் இருக்கு. அடுத்த முறை வரும்போது தரேன்னு" சொன்னா, "வேண்டாம் இதோட சரியாப் போய்டும்" என நம்பிக்கையான பதில் சொல்வாள்.

"நான் அடுத்த முற வரும்போது பச்சை மிளகாய் கேழ்வரகு எடுத்து வந்து தரேன். இல்லன்னா நீ அந்தப் பக்கம் வந்தா என்ன வந்து பாரு. நான் கொடுத்த அனுப்புறேன்னு அன்பாகப் பேசிவிட்டு," குழந்தையைத் தூக்கிக்கொண்டு செல்வார்கள்.

காலையில் காத்திருந்த வைத்தியம் பார்த்துக் கொண்டிருக்கும்போது அடுத்தடுத்த வரிசையாகக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

"செத்த இரும. வேதிக்கு மருந்தா ? நாளைக்கு காலையில வாமா. வெறும் வயித்துல சாப்பிடணும்'.ன்னு வைத்தியம் பார்ப்பாள்.

"சரிமா நான் காலையில வரன்"ன்னு அருகில் அமைதியாய் நின்ற சின்னப் பெண்ணிடம், தண்ணி காயப் போடச் சொல்லுமா, இது முடிச்சுட்டு வரன்னு" பதில் சொல்லி அனுப்புவாள்.

"பச்சப்புள்ளக்காரி தீட்டு எடுக்கணும்னு."ன்னு வைத்தியம் பார்க்க வந்தவர்களிடம் சொல்லி சுருக்குப் பையிலிருந்து பச்சப் பாக்க வாயிலப் போட்டு மெல்லுவாள்.

"சரி சீக்கிரமா போ, சரியாப் போயிடும்" என்று ஆறுதல் கூறி வழி அனுப்பிவிட்டு, சுருக்குப் பையை இடுப்பில் சொருகிக்கொண்டு, அழுக்குப் பையோடு தகர டப்பாவை எடுத்துக்கொண்டு புறப்படுவாள்.

"சந்திரா இதோடு ஊர் முழுக்க வைத்தியம் பார்த்துவிட்டு வீடு வந்து சேர பகல் 12 ஆகும். காலை உணவை மதியம் சாப்பிட்டுவிட்டு அசதியாய் உட்காருவாள்.

தூரிகை மருத்துவச்சியின் கதையை மின்மினிக்கு சொல்லி முடித்தாள்.

மாரியம்மன் கோயில் தெருவில் வலது பக்கத்தில் சந்தராவின் கூரைவீடு. தூளம் வைத்துக் கட்டப்பட்ட வீட்டுத். திண்ணைக்குப் பக்கத்தில் உள்ள சந்துக்குள் போகணும். சரி இதேதான் நிறுத்துங்க" எனத் தனது கணவன் கவிப்பிரியனிடம் சொன்னால் தூரிகை.

மகிழுந்து நின்றது.

தூரிகை மின்மணியோடு மகிழுந்தைவிட்டு இறங்கிச் சுத்திப்பார்த்தாள்.

ஒட்டுமொத்த வீட்டின் அமைப்பும் மாறியிருந்தது. மருத்துவச்சி சந்திரா வாழ்ந்ததற்கான அடையாளங்கள் சிதைந்து போயிருந்தது. தூரிகை செய்வது அறியாது திகைத்து நின்றாள்.

சின்ன ஓலக் குடிசையில் கூன் விழுந்த முதுகோடு, பொக்கை வாயில் வெற்றிலைப் போட்டு மென்னதின் எச்சில் ஒழுக, கையில் அதே அழுக்கு பையுடன் தகர டப்பாவோடு வெளியே வந்தாள் சந்திரா.

வந்தது யாருன்னு தெரியாது. நம்மலதான் பார்க்க வந்திருக்காங்கன்னு "மார் சளி பிடிச்சிருக்கு. பணி உடம்புக்கு ஒத்துக்கல. எல்லாம் சரியாயிடும்." அதே சொற்கள். அதே வட்டக் கல். தேனில் குழைத்து அதே பாலாடையில் மின்மினியின் மூக்கைப் பிடித்து ஊற்றிவிட்டு, குழந்தையை நிற்க வைத்தால்.

மின்மினி தேன் சீசாவை முறைத்து பார்த்தாள்.

"வேணுமா.?" சுருக்கு பையிலிருந்து பாக்கை எடுத்துப் போட்டு மென்னுக்கொண்டு தூரிகையிடம் சொன்னாள் "இருக்கிறத கொடுமா" என்று.

மின்மினி அம்மாவைப் பார்த்து சிரித்து "அம்மா பாட்டிக்கு நிறையா குடுமா" என்றாள்.



- கயப்பக்கம் இரா.இரமேஷ்

# ஔவைக் குறளும் 8,9



Banumathi Nachiyar

தொக்குதீரந் தோடுன் மூளை நிணமென்பு
சுக்கிலந் தாதுக ளேது

விளக்கம்

இக்குறள் "பிறப்பின் நிலைமை" என்ற அதிகாரத்தில் வரும் எட்டாவது குறள் ஆகும்.

நம் தேகம் ஏழு தாதுகளால் ஆனது என்பதை உணர்த்தும் குறளாக அமைகிறது.

தொக்கு என்பது உணவாகக் கொண்டால் உதிரம் (ரத்தம்) நிணம் (தசை) ஊன் (மாமிசம்) மூளை (கொழுப்பு) என்பு (எலும்பு) சுக்கிலம் என்னும் ஏழு தாதுகளால் ஆனது.

சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தின் படி, உணவு ரசமாக, (பிளாஸ்மா சாரம்) ரத்தம், சதை, கொழுப்பு, எலும்பு (அஸ்தி) மஜ்ஜை, எலும்பு மஜ்ஜை இனப்பெருக்கத் திரவம் ஆகியவை ஆகும். தொக்கு உணவானது ரசமாகி உடலின் திரவ நிலையைப் பராமரிக்கிறது.

ரசம் ரத்தமாகி உடல் முழுவதும் பிராணவாயுவையும் சக்தியையும் கொடுக்கின்றது.

ரத்தம் தசையாகி உடலின் உறுப்புகளை இயக்கச் செய்கிறது. தசைகள் கொழுப்பாகி உடல் வெப்ப நிலையையும் ஆற்றலையும் கொடுக்கிறது.

கொழுப்பு எலும்பாகி உடலுக்கு ஆதாரத்தையும் வடிவத்தையும் கொடுக்கிறது.



மஜ்ஜை எலும்பு மற்றும் நரம்பு மண்டலத்தையும் உடலின்



ஒருங்கிணைப்பும் உறுதி செய்கிறது.

சுக்கிலம் இனப்பெருக்கம் திரவங்கள் (விந்து அண்டம்) இனப்பெருக்கத்திற்கும் உடல் வலிமைக்கும் அடிப்படையாகும்.

இதனை ஏழே சொற்களில் ஔவையார் பிறப்பின் நிலைமையை எடுத்துரைக்கிறார்.

நாளை அடுத்த செல்பியுடன் ஔவையின் குறளும் ஆன்மீகப் பதிவும்

9

மண்ணோடு நீரங்கி மதியோடு
காற்று ரவி விண்ணெச்ச
மூர்த்தியோ டெட்டு

விளக்கம்

நிலம், நீர், நெருப்பு, சந்திரன், காற்று, சூரியன், விண்ணுடன் ஆத்மா எட்டு மூர்த்தங்கள் ஆகிறது.

எட்டு மூர்த்தங்கள் என்பது உலகை இயக்கும் எட்டு அடிப்படை சக்திகளாகும். பிரபஞ்சத்தில் பல்வேறு நிலைகளையும் குறிக்கும் தெய்வ வடிவங்கள் ஆகும். பிறப்பின் நிலைமை என்ற அதிகாரத்தில் பிறப்பின் ரகசியத்தை நிர்ணயிக்கும் எட்டு மூத்தங்களாக இதனைக் கூறுகிறார்.

ஐம்பெரும் பூதங்களோடு சூரியன் சந்திரன் மற்றும் ஆன்மாவாகவும் வெளிப்படும் வடிவங்களே எட்டு வடிவங்கள் ஆகும்.

இவை இயற்கையோடு ஒன்றி இறைவனை உணரும் தமிழ் நெறியாரின் வழிபாடாக ஔவை எட்டு மூர்த்தங்களை உணர்த்துகிறார்.

சைவ நெறி தத்துவத்தை உணர்த்தும் குறளாக அமைகிறது.

நாளை வேறு ஒரு செல்பியுடன்



(தொடரும்).

# முருகப்பெருமானுக்கு சுருட்டை நிவேதனமாக படைக்கும் அதிசயக் கோவில் பற்றித் தெரியுமா?




தமிழ்நாட்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் விராலிமலையில் அமைந்துள்ள சுப்ரமணிய சுவாமிக் கோவில் 1500 வருடம் பழமையானதாகும். இக்கோவிலில் தான் நிவேதனமாக சுருட்டு வழங்கப்படும் வினோதமான பழக்கம் இருக்கிறது.

முன்னொருக்காலத்தில் முருகரின் தீவிர பக்தரான கருப்பமுத்துபிள்ளை என்பவர் முருகனை தரிசித்தப் பிறகே உணவு உண்ணும் பழக்கத்தை வாடிக்கையாக கொண்டிருந்தார். முருகனுக்கு நடக்கும் திருப்பணியிலும் இவர் ஈடுபட்டிருந்தார்.

ஒருநாள் எப்போதும் போல முருகனை தரிசிக்க விராலிமலைக்கு வந்தார் கருப்பமுத்துபிள்ளை. அச்சமயம் வானம் நன்றாக இருட்டி மழைப் பெய்யத் தொடங்கியது. இதனால் அவரால் ஆற்றைக் கடக்க முடியவில்லை. கருப்பமுத்து பிள்ளை ஒரு மேடானப்பகுதியில் தங்கினார். ஆற்றில் வெள்ளம் வந்து தண்ணீர் கரைப்புரண்டு ஓடத் தொடங்கியது.

நீண்டநேரம் ஆகியதால் கருப்பமுத்துபிள்ளைக்கு பசிக்கத் தொடங்கியது. குளிர்த் தாங்க முடியாமல் சுருட்டை பற்ற வைத்தார். அருகில் மற்றொருவர் நிற்பதை பார்த்த கருப்பமுத்துபிள்ளை குளிருக்கு இதமாக இருக்கட்டும் என்று அவருக்கும் ஒரு சுருட்டை கொடுத்தார். அந்த நபரும் சுருட்டை வாங்கிக் கொண்டு கருப்பமுத்துபிள்ளையை ஆற்றை கடக்க உதவினார். பிறகு கருப்பமுத்து கோவிலை அடைந்ததும் அங்கே முருகப்பெருமானின் முன்பு சுருட்டு இருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தார்.

இதை கருப்பமுத்துபிள்ளை அங்கிருந்த மக்களிடம் கூற அனைவரும் ஆச்சர்யமடைந்தனர். அன்றிலிருந்து முருகப்பெருமானுக்கு சுருட்டு நைவேத்தியமாக மாலை வேளை வழங்கப்படுகிறது. பிறகு புதுக்கோட்டை மகாராஜா இப்பழக்கத்திற்கு தடைவிதிக்க, அவர் கனவில் முருகப்பெருமான் தோன்றி, 'பிறர் துன்பம் கண்டு அன்பை வழங்கும் குறியீடாகவே சுருட்டு நிவேதனம் இருக்கிறது' என்று கூற, அவர் தடையை நீக்கியதாகவும் சொல்லப்படுகிறது.

அன்றிலிருந்து இன்றுவரை இப்பழக்கம் விராலிமலை முருகன் கோவிலில் வழக்கத்தில் உள்ளது. பக்தர்கள் சுருட்டை நிவேதனமாக பெற்றுச் சென்று வீட்டில் வைக்கிறார்கள். பக்தியுடனும், அன்புடனும் நாம் கடவுளுக்கு படைப்பதை அவர் முழுமனதுடன் ஏற்றுக் கொள்வார் என்பதை உணர்த்துவதாக இந்நிகழ்வு அமைகிறது. இத்தலத்தில் முருகனை வழிப்பட்டால் ஆயுள், மனஅமைதி, குழந்தைப் பேருக்கிட்டும் என்று சொல்லப்படுகிறது.



-சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி

# தினம் ஒரு தலைவர்கள் அல்லூரி சீதாராம இராஜு வரலாறு





அல்லூரி சீதாராம ராஜீ (பிறப்பு: 1897-98 - இறப்பு:1924 மே 7) இவர் இந்திய சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்ட ஒரு இந்திய புரட்சியாளராவார். 1882 மெட்ராஸ் வனச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், பதேரு காட்டில் பழங்குடியினரின் சுதந்திரமான நடமாட்டத்திற்கான அதன் கட்டுப்பாடுகள், அவர்களின் பாரம்பரிய போடு விவசாய முறைமையில் ஈடுபடுவதைத் தடுத்தன. இது சாகுபடியை மாற்றியது . 1922-24ல் ராம்பா கிளர்ச்சிக்கு இராஜு தலைமை தாங்கினார். அப்போது, ஆந்திராவின் கிழக்கு கோதாவரி மற்றும் விசாகப்பட்டினம் பிராந்தியங்களின் எல்லைப் பகுதிகளில், இன்றைய ஆந்திரப் பிரதேசத்தில், பிரித்தானிய இராச்சியத்திற்கு எதிராக, பழங்குடி மக்கள் மற்றும் பிற அனுதாபிகள் கொண்ட ஒரு குழு போராடியது. மேலும் ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றியது. இதனால் இவரை உள்ளூர் மக்கள் "மான்யம் வீருடு" ("காடுகளின் நாயகன்") என்று அழைத்தனர்.

முந்தைய ஒத்துழையாமை இயக்கத்தின் அவசியத்தைக் கூறி பழங்குடி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திய இராஜு, சிந்தப்பல்லி, ரம்பச்சோதவரம், தம்மனப்பள்ளி, கிருட்டிணா தேவி பேட்டை, ராஜவோம்மங்கி, அடடீகலா, நர்சிப்பட்டிணம் மற்றும் அன்னவரம் ஆகிய இடங்களில் உள்ள காவல் நிலையங்களில் தாக்குதல் நடத்தினர். துப்பாக்கிகள் மற்றும் வெடிமருந்துகளைக் கைப்பற்றி, தம்மனப்பள்ளி அருகே இரண்டு பிரித்தன் காவல் அதிகாரிகளை கொன்றார். இராஜு இறுதியில் சிந்தப்பல்லி காடுகளில் ஆங்கிலேயர்களிடம் சிக்கி, பின்னர் ஒரு மரத்தில் கட்டப்பட்டு, கொய்யூரு கிராமத்தில் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது கல்லறை கிருட்டிணா தேவி பேட்டை கிராமத்தில் இன்றும் உள்ளது.

வாழ்க்கை

அல்லூரி சீதாராம இராஜுவின் ஆரம்பகால வாழ்க்கையின் விவரங்கள் வேறுபடுகின்றன. விசாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள பீமுனிபட்டணத்தில் இவர் பிறந்தார் என்று ஒரு அதிகாரப்பூர்வ அறிக்கை தெரிவிக்கிறது. பீமிலிபட்டணம் சட்டமன்ற சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள பாண்டரங்கி கிராமத்தை இவரது துல்லியமான பிறந்த இடமாக பெயரிடும் சமீபத்திய செய்திகளும் வந்துள்ளன. இவர் மேற்கு கோதாவரி மாவட்டத்தில் உள்ள மொகல்லு என்ற ஒரு கிராமத்தில் பிறந்தார் எனவும் பல வட்டாரங்கள் கூறுகின்றன.

இவரது பிறந்த தேதியும் சர்ச்சைக்குரியது. பல ஆதாரங்கள் இதை 1897 சூலை 4 என்றும் ஆனால் மற்றவர்கள் இவர் 1898 இல் பிறந்ததாகவும் கூறுகின்றனர். மேலும், குறிப்பாக இவர் பிறந்த தேதி 4 ஜூலை 1898 என்பதாகும்.

இராஜுவின் பெற்றோர் வெங்கடராம இராஜு மற்றும் சூரியநாராயணம்மா. இவர்கள் சத்திரிய வர்ணத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். சமகால அறிக்கைகள் இவர் ஒரு தனித்துவமான கல்வியைக் கொண்டிருந்தன. ஆனால் 18 வயதில் சன்யாசியாக மாறுவதற்கு முன்பு ஜோதிடம், மூலிகை, கைரேகை மற்றும் குதிரை சவாரி ஆகியவற்றில் ஒரு குறிப்பிட்ட அக்கறை காட்டினார். இவர் பின்னர் கோதாவரி பகுதியைச் சுற்றித் திரிந்தபோது, இந்த திறமைகளும் இவரது கவர்ச்சியான தன்மையும் பழங்குடி மக்களிடையே இவருக்கு மாயாஜால சக்திகள் மற்றும் புனித அந்தஸ்து உடையவர் என்ற புகழைப் பெற்றன.

இராஜு இறுதியில் சிந்தப்பல்லி காடுகளில் ஆங்கிலேயர்களிடம் சிக்கினார். கொய்யூரு கிராமத்தில் ஒரு மரத்தில் கட்டப்பட்டு துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது கல்லறை கிருஷ்ணா தேவி பேட்டை கிராமத்தில் உள்ளது.

# அரசன் திரைப்படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு தொடங்கியது



இயக்குநர் வெற்றிமாறன் முதன்முறையாக நடிகர் சிலம்பரசனுடன் இணைந்து "அரசன்" என்ற திரைப்படத்தை உருவாக்கி வருகிறார். இந்தப் படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார்.

இதில் நடிகர் சிலம்பரசன் இரட்டை வேடத்தில் நடிக்க உள்ளார். இதற்கான முதல்கட்ட படப்பிடிப்பு ஏற்கனவே கோவில்பட்டியில் நடந்து முடிந்த நிலையில், இந்தப் படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு சென்னையில் தொடங்கியுள்ளது.

வடசென்னையை மையப்படுத்தி உருவாகும் இந்தப் படம் ரசிகர்களிடையே மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது.

# ரஜினி – கமல் இணையும் படத்தின் ப்ரோமோ அப்டேட்




கமல் ஹாசன் தயாரிப்பில் ரஜினி தனது 173-வது படத்தில் நடிக்க இருக்கிறார். இந்தப் படத்தை டான் திரைப்படத்தை இயக்கிய சிபி சக்கரவர்த்தி இயக்க இருக்கிறார். இதையடுற்றது ரஜினிகாந்த் மற்றும் கமல் ஹாசன் இணைந்து புதிய படத்தில் நடிக்கவுள்ளனர். இருவரும் சேர்ந்து நடிக்கும் படத்தின் புரோமோ படப்பிடிப்பு நடைபெற்று முடிந்துள்ளது.

இந்தப் படத்தை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேரனும், துணை முதலமைச்சர் உதயநிதி மகனுமான இன்பநிதி தயாரிக்கவுள்ளார். இந்தப் படத்தில் ரஜினிக்கும், கமலுக்கும் சம்பளம் இல்லாமல் லாபத்தில் பங்கு என்ற முறையில் ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளதாக கூறப்படுகிறது.

நேற்றிரவு 7.12 மணிக்கு ரஜினி – கமல் இணைந்து நடிக்கும் படத்தின் அறிவிப்பை ரெட் ஜெயண்ட் மூவிஸ் போஸ்டர் வெளியிட்டு அறிவித்தது. இந்நிலையில், ரஜினி மற்றம் கமல் இணையும் படத்தின் ப்ரோமோ வீடியோ நாளை மதியம் 12.07 மணிக்கு வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக படக்குழு சார்பில் புதிய போஸ்டர் வெளியிடப்பட்டுள்ளது.

போஸ்டரில் ரஜினி மற்றும் கமல் ஹாசனின் கைகள் ரெட்ரோ தோற்றத்தில் இருப்பது போல் வடிவமைக்கப்பட்டுள்ளது. அடுத்தடுத்து அப்டேட்கள் வெளியாகும் போதிலும், இந்தப் படத்தின் இயக்குநர் யார் என்பது இதுவரை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படாமலேயே உள்ளது.

# நேரடியாக ஓ.டி.டி.யில் வெளியான ஜி.வி. பிரகாஷ் திரைப்படம்



நடிகரும், இசையமைப்பாளருமான ஜி.வி. பிரகாஷின் நடிப்பில் உருவாகி இருக்கும் திரைப்படம் ‘லக்கி தி சூப்பர் ஸ்டார்’. இந்தப் படம் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் எடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், லக்கி திரைப்படம் நேரடியாக ஓ.டி.டி.-யில் வெளியானது.

ஜியோ ஹாட்ஸ்டார் தளத்தில் வெளியான "லக்கி" திரைப்படத்தை கந்தசாமி மற்றும் புஷ்பா கந்தசாமி தயாரித்துள்ளனர். இந்தப் படத்தில் அனஸ்வரா ராஜன், மேக்னா சுமேஷ், தேவதர்ஷினி, இளங்கோ குமரவேல், உதய் மகேஷ் உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர்.

மாயமான நாய் குட்டி "லக்கி" அரசியல்வாதிகளிடம் சிக்கிக்கொள்ள அதனை கதாநாயகன் மீட்பதே கதைக்கருவாக அமைக்கப்பட்டுள்ளது. உதய் மகேஷ் இயக்கத்தில் "லக்கி" திரைப்படம் நேரடியாக ஓ.டி.டி.யில் வெளியாகி இருப்பது ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

# “டாக்சிக்” டீசர் வெளியானது



டிராகன் படத்தின் மூலமாக பிரபலம் ஆனவர் கயாடு லோஹர். அவர் ஒரே படத்தில் புகழின் உச்சம் தொட்ட நிலையில் தற்போது தெலுங்கு, தமிழ், மலையாளம் என பல மொழிகளில் அவருக்கு வாய்ப்புகள் குவிந்திருந்தது.

அவர் கைவசம் தற்போது அரை டஜன் படங்களுக்கு மேல் இருக்கிறது. அப்படி பிசியாக நடித்து வரும் அவர் அவ்வப்போது பல நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு வருகிறார்.

கயாடு லோஹர் தற்போது மஞ்சள் நிற சேலையில் கியூட் ஆக போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.



மலையாள இயக்குநர் கீது மோகன்தாஸ் இயக்கத்தில், ’ராக்கிங் ஸ்டார்’ யஷ் நடிப்பில் உருவாகி வரும் படம் டாக்ஸிக்.

1940 முதல் 1970 வரையிலான காலகட்டத்தில், கோவாவில் நிலவிய போதைப்பொருள் கடத்தல் மற்றும் மாஃபியா கும்பல்களை மையமாகக் கொண்ட ஆக்ஷன் த்ரில்லர் கதையாக இது உருவாகியுள்ளது.

இப்படத்தில் நயன்தாரா, கியாரா அத்வானி, ஹூமா குரேஷி, தாரா சுதாரியா மற்றும் ருக்மிணி வசந்த் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். இப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் மார்ச் 19 அன்று திரையரங்குகளில் வெளியாகிறது.

இந்நிலையில் இப்படத்தின் டீசர் இன்று காலை வெளியானது.

# மனித வாழ்க்கையில் எல்லாமே பணமாகிவிட்டது சீனு ராமசாமி



இலங்கையில் ஒரு சினிமா எடுத்து, அந்த படத்தை இங்குள்ள தியேட்டர்களில் வினியோகிப்பது என்பது பெரிய விஷயம்.

எதையோ ஒன்றை மறைக்க, எதையோ ஒன்றை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ரமணா தயாரித்து, சுகிர்தன் கிறிஸ்துராஜா மற்றும் ஜெனோசன் ஆகியோர் இயக்கியுள்ள புதிய படம், ’அந்தோணி’. கயல் வின்செண்ட், டி.ஜே.பானு, சுதர்ஷன், அருள்தாஸ், நிழல்கள் ரவி ஆகியோர் நடித்துள்ள படம் விரைவில் திரைக்கு வருகிறது. ஈழத்தமிழரின் வாழ்க்கை பற்றிய கதை இது.

சென்னையில் நடந்த படத்தின் இசை வெளியீட்டு விழாவில் இயக்குனர் சீனு ராமசாமி கலந்துகொண்டு பேசும்போது, "இலங்கையில் ஒரு சினிமா எடுத்து, அந்த படத்தை இங்குள்ள தியேட்டர்களில் வினியோகிப்பது என்பது பெரிய விஷயம்.

ஒரு நாடு போருக்கு பிறகு, சிதைந்த பிறகு, அந்த நாட்டில் வாழ்க்கை என்பது கேள்விக்குறிதான். குண்டு விழுந்த சத்தம் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கும். எல்லா வகையிலும் அடக்குமுறையை சந்தித்து வரும் ஜனங்களின் குரல்தான் இந்த படம்.

எதையோ ஒன்றை மறைக்க, எதையோ ஒன்றை பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதுதான் வாழ்க்கை என்றாகி விட்டது. மனித வாழ்க்கையில் எல்லாமே பணமாகிவிட்டது. பார்க்க வைக்கப்படும். கேட்க வைக்கப்படும் உலகத்தில் மக்கள் வாழ்கிறார்கள். நம்மை வேடிக்கை பார்க்க வைத்துவிட்டார்கள். அப்படிப்பட்ட உலகத்தில் ஈழத்து மக்களின் வாழ்க்கையை உயிரோட்டமாக காட்சிப்படுத்தியிருப்பதை வாழ்த்துகிறேன்". என்றார்.



கன்னடத்தில் வெளிவந்த சப்த சாகர தாச்சே எல்லோ என்கிற ஒரே ஒரு படத்தின் மூலம் ஒட்டுமொத்த தென்னிந்திய சினிமாவையும் தன்பக்கம் திரும்பி பார்க்க வைத்தவர் நடிகை ருக்மிணி வசந்த். இதன்பின், காந்தாரா படத்தில் வில்லியாக நடித்து மிரட்டினார். இதில் இவருக்கு இந்திய அளவில் பிரபலம் கிடைத்தது. இதனால் பாலிவுட் படங்களில் நடிக்கும் வாய்ப்பும் வந்துள்ளதாக திரை வட்டாரத்தில் பேசப்படுகிறது.

ரசிகர்களின் மனம் கவர்ந்த நாயகன், நாயகிகளின் லேட்டஸ்ட் புகைப்படங்கள் எப்போது வெளிவந்தாலும் அது உடனடியாக இணையத்தில் வைரலாகும். அந்த வகையில் தற்போது ருக்மிணி வசந்தின் லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்கள் வெளியாகி, ரசிகர்கள் மத்தியில் வைரலாகி வருகிறது.


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY OR SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


ஆட்கள் தேவை
CNC டர்னிங் ஆப்பரேட்டர்
பெயிண்டர்
ஹெல்பர்
நல்ல சம்பளம் வழங்கப்படும்
Southern Heat Exchangers, Coimbatore
99444 40560


WANTED
MARKETING MANAGER
ACCOUNTANT
CNC LATHE MILLING OPERATOR & PROGRAMMER
PLASMA & BENDING OPERATOR
LATHE MILLING MACHINERY OPERATOR
AMBATTUR TAPSTIA,KATTUR
Contact: 95660 61750



THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


MLMPERFECT.COM
Start Any MLM Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by 1000+ satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756



HAPPY BIRTHDAY
Birthday wishes to Mr. Farooq, Deputy President of North Chennai East District, on his birthday (20/02/2026).
Wishes were extended by Mr. TV. Durairaj, Former District President, Mr. N. V. Jayaraman, Former Circle President, and Mr. Mohan Kumar,
Mr. Mohan Kumar
-TAMILNADUEPAPER-




## கடன்

கடன் ஒரு சூழாயுதம்.
வாங்கியோரைக் குத்திக்
கிழிப்பது அதன் இயல்பு.
அதிலிருந்து மீள்வது கடினம்.
பணம் கையில் இல்லை
என்பதற்காகக் கடன்
வாங்கக்கூடாது.
வாங்கினால் தொல்லை தரும்.
கடன் நட்பை பிளவுபடுத்தும்.
அவமானத்தைத் தேடித் தரும்.
நம்பிக்கையைச் சிதறடிக்கும்.
உண்மை பேசினாலும்
அது பயன் தராது.
கடுமையான மனைவலியும்,
உளைச்சலும்தான் பரிசாகக்
கிடைக்கும். நாளை என்ற
நாளை நம்பி வாங்குவது
கடன். கனவில் கூட கசப்பை
விதைக்கும் ஒருவித
சுமை அது. கடன்
வாங்கும்போது
இன்பம் தரும் போல
தோன்றினாலும்
இரவு தூக்கத்தைத்
திருடும் நிழல்
அது. வட்டி என்ற வாளால்
கடன் மனத்தை கிழிக்கும்
பேராயுதம். வாழ்க்கைப்
பாதையில் பயம் நிழல்
போல் தொடரும். கடனைத்
தீர்த்திடும் நாளை எண்ணி
துடிக்கும் இதயம்.
நாள்தோறும் வட்டியைக்
கணக்கிட்டுத் தொடரும்
வாழ்க்கை. கடனைத்
கொடுத்தவன் உயர்ந்து
நிற்பான். கட்டுப்பாட்டால்
கண்ணியம் காக்கலாம்.
அளவறிந்து வாங்கினால்
அதை உதவியாகக்
கொள்ளலாம். அளவுக்கு
மீறினால் அடிமை அது.
சிக்கனமும் சிந்தனையும்
சேர்ந்திடுமேயானால்,
கடன் இல்லா சுமையற்ற
சுதந்திரம் கிடைக்கும்.
கடமை உணர்ந்து
வாழ்ந்தால் கவலை மறந்து
வாழ்க்கை சுகம் தரும்.



**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.




## நுணலும் தன்வாயால் கெடும்!

அறுசீர் மண்டிலம்.


தீய சொற்களைப்
பேசாதே தீய பார்வையை
வீசாதே நேய சொற்களைப்
பேசிவிடு நேர்ந்தே என்றுமே
வாழ்ந்துவிடு!
ஏய உணர்வுடன்
காண்பாயே என்றும்
உண்மையே பூண்பாயே
பாயும் புலியென மாறாதே
பண்பின் சிகரமாய்
மாறிவிடு!
=நம்மின் வாழ்விடம்
இஃதென்றே நன்கு கத்திடும்
தவளைதான் வம்பை
விலையிடும் தன்மையிது
வாயால் கெட்டிடும்
உண்மையிது!
சும்மா வாயினை
வைக்காமல் சும்மா கிடந்திடும்
சங்காக இம்மைப் பிறப்பிலே
ஊதிட்டால் ஈங்குத் தீமைகள்
வளர்ந்திடுமே!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## நிழலாக வருகிறாய்...

என்னைக் காக்கும் நிழல் நீயே
உள்ளப் பாதையில்
தொடர்கிறாய் மௌன
மொழி பேசுகிறாய்
உள்ளத்தில் சங்கீதம்
பாடுகிறாய்
நானே அறியாமல்
என்னைத் தொட்டு
வருகிறாய்
நிழல் இல்லை நிஜம் என்று
சில நேரம் உணர்கிறேன்
வாழ்க்கைப் பாதையில் நீயே
வெளிச்சம் தந்தாய் .
காலை கதிரவன் போல்
இதமாக சிரிக்கிறாய்
மெல்லிய தூறலாய் என்மீது
விழுகிறாய் மெல்லிய
காற்றாய் வீசி காதில் இசை
ஒலிக்கிறாய் நீ பேசும் காதல்
ரகசியம் நான் அறிவேன்
என் விழிகளுக்கு
மட்டும் தெரியும்
உருவமாக இருப்பதால்
மற்றவருக்கு
அருவமாய் இருக்கிறாய்



**உஷா முத்துராமன்**

பாட்டிகளின் உலகம்
எல்லையற்றது..
உள்ளே நுழைய
முடிந்தால் போதும்..
வெளியேற மனசே வராது !

வாழ்க்கையை
ரசிக்கிற வித்தையை
எல்லாம் தொலைத்த..
எவருமே இல்லாத..
பாட்டியிடம் கற்க முடிகிறது..
சுலபமாய் !

கன்னங்களை வழிக்கிற
அன்பில் எப்போதும்
முதல் பரிசு பாட்டிக்குத்தான்!



எத்தனை
முறை
பிரித்தாலும்
சுருண்டு
கொள்கிறது
பாட்டியின்
விரல்கள் !

**ரிஷபன்**

## கிறுக்கல்கள்

கம்பனின் கருத்துள்ள
வரிகளை விட
கண்ணதாசனின் அனுபவ
வரிகளை விட வாலியின்
வாலிப வரிகளை
விட வைரமுத்துவின்
வைரவரிகளை விட
நா.முத்துகுமாரின் முத்தான
வரிகளை விட மேத்தாவின்
மேன்மையான வரிகளை விட
உயர்ந்தது நான் உன்னை
நினைத்து
எழுதும்
"கிறுக்கல்கள்!"



**எஸ் சந்திரசேகரன் அமுதா**
செஞ்சிக்கோட்டை

## ஊன மனத்துடன் உலவிடாதிரு!

நேரிசை ஆசிரியப்பா.

கள்ள மனத்தால் கபடங்
கொண்டு உள்ளில் ஊனமே
இல்லா திருப்பாய்!

உடலில் ஊனம் இருக்கலாம்
என்றும் திடமாய் மனத்தில்
தேவை யில்லை!

உள்ளத் தூய்மை உன்னதம்
தானே கள்ள மில்லாக்
கருணை தானே!

ஊன முள்ளோர் கான
முள்ளோர் ஆன மட்டும்
அவருக் குதவிசெய்!

மனத்தின் தூய்மையை
மாண்பாய்க் கொண்டு
கனிவா யாக்கு
காணும் மனத்தை!

கானக் குயிலாய்ப்
பாடி ஊன மனத்துடன்
உலவி டாதே!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**



## பூட்டும், நீயும் காப்பான்

ஆருயிர் என்றாலும்
தன்னுயிர் போல் வருமா...
புதைத்த விதையை போல்
வீரிட்டு எழ முடியுமா....!

போட்டாலே பூட்டினாலும்
உன் நினைவை மறைக்க
முடியுமா.... உன் காதலை
தவிர அதை யாராலும்
திறக்க முடியுமா...

பார்க்க முடியாத
இதயத்திற்குள்...நீ
எப்படி குடியேறினாய்...

வார்த்தைகளால் மட்டும் ..நீ
அன்பாய் வெளியேறினாய்....

பெண் மனசு ஆழமா...
இல்லை உன் பெண்மை
கவர்ச்சி ஆழமா....

உன்னை புரிந்து நடந்தால்
இமயம் கூட நம் கையில்
அடங்குமே...



உன்னை பிரிந்து
வாழ்ந்தால்
இலைகள் கூட
பாரமாகுமே....!!

**பொன்.கருணா**
நவி மும்பை



## குறள்வெண்செந்துறை! வண்ணம்!

ஒளியின் சேர்க்கை
வண்ணமன்றோ
ஒருங்கின் சேர்க்கை
வண்ணமன்றோ!
களிப்பாய்த் தோன்றும்
வண்ணமன்றோ
கனிவாய்க் காணும்
வண்ணமறோ!

அழகு சேர்க்கும்
வண்ணமன்றோ
அன்பாய்த் தெரியும்
வண்ணமன்றோ!
ஒழுங்காய்த் தெரியும்
வண்ணமன்றோ
ஒப்பே இல்லா
வண்ணமன்றோ!

## அலங்குகளைக்காப்போம்! (எறும்புத் தின்னி)

நிலைமண்டில ஆசிரியப்பா!



கவச உடலாய்க்காணும்
அலங்கு உவகை யோடு
உண்ணும் எறும்பை!

எறும்பு தின்னி என்ற
பெயரை சிறப்பாய்ப் பெற்றதே
சீர்மை அலங்கு!

நீண்ட நாக்கு நெடிய
மோப்பம் ஆன்ற முறையில்
அழகாய்ப் பெற்றதே!

எதிரியைக் கண்டால்
ஏற்றவாறு பதமாய்த் தம்முடல்
பாங்காய்ச்சுருட்டும்!

சங்க இலக்கியம் சார்ந்தே
காணும் மங்கா இலக்கிய
மாகத் திகழும்!


அழிந்து வந்திடும்
அலங்கைக் காப்போம்
அழகாய்
அஃதை
என்றும்
காப்பமே!



**முனைவர்**
**இராம. வேதநாயகம்**

## இனிய காதல் நல்வாழ்த்துகள்

நான் இன்று தக்காளி ரசம்
வைக்கிறேன் என்று நீ
சொன்னாலும் கூட அது
எனக்கு ஓர் இனிய காதல்
குறளாகத்தான்
காதில் விழுகிறது!
நீ ஆடைவடிவமைப்பாளராமே
ஆகவே தானோ என்னவோ
உன் தேகம் பற்றும்
விதவிதமான ஆடைகள்
ஒவ்வொன்றும் உன்னிடம்
முன்னதாகவே வரம் பெற்று
விடுகின்றன அன்பே!
உனக்கு என் இனிய காதல்
நல்வாழ்த்துகள் என்று நான்
சொல்லும் நாட்களிலெல்லாம்
மிக சத்தியமாய் உன்
இல்லத்திலிருந்து ஏதேனும்
ஒரு தேன் குழம்பு எனக்கு
வரவேற்பு சொல்லி விடுகிறது!
கா த ல் எவ்வளவு
அழகென்று நான் சொல்ல
இதைப் போல்
ஆயிரமாயிரம் காரணங்கள்
காத்திருக்கின்றது!
-------------------
ஒரு புத்த பிட்சுவைப் போல்
அமைதியான தோற்றமுடைய
பூவை நீ!
பூக்கள் உன்னிடமிருந்து தான்
மென்மையையும் மிருதுவையும்
பெற்றிருக்குமோ என்று
நினைக்குமளவிற்கான
பாவை நீ!
ரதி நீ அமர்ந்து வந்தால்
அந்த ரதம் கூட தான் உயிர்
பெற வேண்டி தாபமாகி
மயங்கும்! நான்
கேட்காமலே(யே) தயங்காமல்
நீ வழங்கும்
முத்தமிட்டாய்களுக்காக(வே)
மனமுவந்து மகிழ்ந்து
சொல்கிறேன் அன்பே என்
இனிய காதல் நல்வாழ்த்துகள்
என்று!
நீ என்னை முத்தமிட்டாய்!
அன்றிலிருந்து உன்
முத்த மிட்டாய்களை என்
அதரங்கள் வாங்கும் நாட்கள்
அத்தனையும் எனக்குக்
காதல் தினமாகி விடுகிறது!
விதவித(மான) லட்சுமிகள்
இருப்பதாகச் சொல்கிறார்கள்!
தனியொருவன் என்
மீது அருள் வைத்த நீதான்
என் காதல் லட்சுமி
கவிதை லட்சுமி என்
பேரன்பே!
-------------------
நான் உன்னிடம் என்
காதலைச்சொன்ன போது
உன் உயிரையே உயிலாக
எழுதி வைத்த பொன் மனச்
செல்வி நீ! உன் கன்னத்தில்
நான் முத்தமிட்டால்
கந்து வட்டிக்காரியாக மாறி
எனக்கு அள்ளி வழங்கும்
மணிமேகலையாக
மாறிய காதல்காரி நீ!
எப்பொழுது
வேண்டுமானாலும் கவிதை
எழுதிக் கொள் இப்பொழுது
என்னைப்படிக்க வா என்று
என்னை வரவேற்கும் மையல்
கலை மைதிலி நீ!
எல்லா தினங்களையு(மே)ம்
காதலர் தினமாக்க
எப்பொழுது(ம்)மே
என்னுடனே(யே)
இருக்கும் எழில் சுந்தரி நீ!
எந்த விளக்கமும்
சொல்லாமலே(யே)
உன் காதலை எனக்கு
விழிகளாலே(யே)
தெ(பு)ரிய வைத்த
சத்தியபாமா நீ! பல
வேடங்களைத் தரித்தாலும்
எனக்கு உயிர்ப்புடன் காதலை
வழங்கும் உனக்கு இனிய
காதல் நல்வாழ்த்துகள்
என் தேன்மொழியே!
-------------------
ஒவ்வொரு முறையும்
நாம் விளையாடும்
போதெல்லாம் நீ
அடித்தே ஆடுவதால்
நான் நினைத்தேன் நீ
விஜய்காந்த் ரசிகையாக
இருப்பாயோ என்று!
சந்திக்கும் போதெல்லாம்
முதலில் முத்தமிட்டு
விட்டுத்தான் பேசவே
தொடங்குகிறாய்!
அப்பொழுது எண்ணினேன்
நீ கமல்ஹாசன்
விசிறியோ
என்று! குதூகலமாகி
விட்டால்
அடுக்கு மொழியில்
அலப்பரையாய்க்
கொஞ்சுகிறாய்!



அப்பொழுது தோன்றிய
எண்ணம் நீ
டி ராஜேந்தரின் அபிமானியாக
இருக்கலாமோவென்று!
உன் ஒவ்வொரு வெற்றிக்குப்
பின்னும் நீயே செதுக்கிய
முயற்சியைக் கண்டேன்!
உண்மையைச் சொல்
உனக்கு அஜித் குமார் மட்டும்
தானே பிடிக்கும்!
எது எப்படியோ உன் அன்பை
நீ என்னிடம் தெரிவித்து
விட்டாய்! உனக்கு
என்றென்றும் என் இனிய
காதல் நல்வாழ்த்துகள்
என் ப்ரிய வசந்தமே!

## மங்கையர் மலர்

ஓர் ஆணியும் நீ
புடுங்க வேணாம் என்று
உன் கண்கள் கடுப்பாக
முறைத்து நடித்தாலும்
உன் மனசோ என் அருகே
வந்து அணைத்து முத்தமிட
மாட்டாயாடா?! என்று
எனக்குத் தெரியாதா என்ன?
காலை எழுந்தவுடன் கண்கள்
தமிழ்நாடு இ செய்தித்தாளைத்
தேடி அலைவது போல்
எனக்காக உன் மனம்
தவித்தாலும் கண்டும்
காணாதது போல் நடிப்பதில்
நீ தொலைக்காட்சித் தொடர்
நடிகைகளையும்
மிஞ்சி விடுகிறாய்!
மங்கையரே ரசித்து வியக்கும்
மலர் நீ! உன்னை நான்
பார்வையால் விழுங்குவது
போன்ற அதிசயம்
வேறென்ன இருந்து விடப்
போகிறது?! ஒவ்வொரு
முறையும் உன் வருகை
எனக்குத்தேவி தரிசனம்!
என் கா த ல் கோலாகலத்
திருவிழாவைக
கொண்டாடாமல்
வேறென்ன செய்யும்?!



**முத்து ஆனந்த்** வேலூர்

## செய்வது துணிந்து செய்!

நேரிசை ஆசிரியப்பா!

நெஞ்சில் துணிவுடன்
நேர்ந்தே செயலை
வஞ்சனை யின்றி
வளமுடன் செய்வோம்!

மனத்தின் வலிமையே
மாண்புத் துணிவு
கனிவு கொண்டே
காண்போம் செயலை!

அச்ச மின்றி அழகாய்ச்
செயலை இச்சை யோடே
இனிதாய்ச் செய்வோம்!

துன்பங் கண்டு
துவளா மல்தான்
இன்பமாய்க் கண்டு
இன்புற செய்யலாம்!

அன்பை அருளை
அதனுடன் பண்பாய்ச்சேர்த்தே
படைப்போம் துணிவையே!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

## எத்தனை சிறப்பானது... உன் வீடு...

கடந்து செல்லும்
போதெல்லாம்...
சிநேகமாகிவிடுகிறது...
விசித்திரமானது தான்...
காலம்... கிறுக்கல்களை
சித்திரமாகவும்...
ஓவியங்களை
வெற்றுத்
தீட்டல்களாகவும்...
மாற்றிவிடுகிறது...



**தே.சௌந்தர ராஜன்**
கல்யாணம்பூண்டி

## கவிதை! கவிதை! கவிதை!

கவிதையிலே தனைமறந்து
பாடுவேனம்மா!
கவிதை ஒன்றே
வாழ்க்கையென்று
ஆனதே அம்மா.!
காசு பணம் பெரியதென்று
தெரியலே யம்மா..
கவிதை தவிர வேறு ஒன்றும்
அறியலே அம்மா.!

இளம் வயதில்
எதையெதையோ..
எழுதினேனம்மா.. அந்த
எழுத்தினிலே எனைமறந்து
வாழ்கிறேனம்மா.!
வயது ஏற ஏற...வார்த்தை
வாய்த்ததே அம்மா.. அந்த
வார்த்தையில் தான் எனது
உயிர் இருக்குதே அம்மா.!
நினைத்தவுடன் எழுதுகிறேன்
கவிதை தானம்மா.. அது நீ
கொடுத்த வரங்கள் என்று
அறிகிறேனம்மா!

நேற்று இன்று நடந்ததெல்லாம்
கவிதையானது.. அதில்
நீரும் நெருப்பும் கலந்திருந்து
வார்த்தையானது..
நினைப்பதெல்லாம் எழுத்து
என்னும் வேள்வியானது..
அந்த வேள்வியிலே
ஆகுதியாய் இதயம் பாடுது!
காலங்களைக் கடந்து
வெல்லும் கவிதையானது..
அந்த கவிதை யெல்லாம்
கலைமகளின் அருளில்
பிறந்தது!

## இன்னொரு நாள் வரும்.!

உழைக்கிற தோழனின்
உள்ளக்கிடைக்கைகள்
நடக்கிற நாளும் வரும்!
ஏய்த்துப்.. பிழைக்கிற
கூட்டங்கள் ஓட்டம் எடுக்கிற..
இன்னொரு நாளும் வரும்!

உழுதவன் வைத்த உழவர்கள்
சந்தையில் விலையினை
நிர்ணயிக்க..அதை.. பழுதுகள்
இன்றி பாங்காய் வாங்கிடும்..
பணம் பொருள் கையில்வரும்!

சக்கரம் சுற்றிட.. ஆலைச்
சங்கொலி கேட்டுத் துயில்
மறக்கும்..அந்த
சமத்துவ ஓசையைக் கேட்டுக்
குயில்களும் சுதந்திரப்
பாட்டிசைக்கும்!

தேசத்தை உயிராய்
நினைத்தவர் ஆளும்..
நாட்டினில் கொடிப்
பறக்கும்! அந்த
தேசியக் கொடியின்
அசைவினைக்காண..
தென்றலும் தனை மறக்கும்!

பாசத்தினையே பாரிலே
விதைத்து பாரத ஏர் நடக்கும்..
அதை பார்க்கவும் வாழ்த்தவும்
பச்சைப் பசுங்கிளிகள்
வானத்தில் தவம் கிடக்கும்!

கற்பனை யாவுமே கண்முன்
காட்சியாய் மாறிய நாள்
பிறக்கும்! அந்த பாவலர்களின்
எழுதும் கரங்களில்
எழுத்தெனும் கொடி பறக்கும்!

ஏழைகள் வீட்டினுள்
எட்டு இலக்குமிகள்
எழுந்தருளியிருக்கும்!
அந்த எழிலாம் காட்சியை
காணுவதற்கே இங்கு
இன்னொரு நாள் பிறக்கும்!

சத்தியம் சாந்தம்
சமாதானமாய் மானுடம்
இணைந்திருக்கும்..
அந்த ஒற்றுமை
விளக்கொளி..
உலகெலாம் தெரியும்
இன்னொரு நாள்
பிறக்கும்!



**வே.கல்யாண்குமார்.**

# நூல் விமர்சனம்

நூலின் பெயர்: தாழங்குடை
ஆசிரியர்: 10 பெண் எழுத்தாளர்கள் ( விவரம் பின் அட்டையில்) வெளியீடு: குமுதம் பு(து)த்தகம்
விலை : ₹275
தொடர்புக்கு: 044 – 2642 6124/4591 9141




*10 எழுத்தாளர்கள் ஆளுக்கு 3 அத்தியாயங்கள் என எழுத 30 அத்தியாயங்கள் ஆக, குமுதம் சிநேகிதி இதழில் வெளிவந்த தொடர் இப்போது தொகுப்பாக.*

*தாழங்குடையோடு வாமனனாக வந்து மகாபலி மன்னனிடம் மூன்றடி மண் கேட்டு விஸ்வரூபம் எடுத்த திரிவிக்கிரம பெருமாள் போல, சுகன்யா வாழ்வில் விஸ்வரூபம் எடுத்த பிரச்சினைகளும் அதற்கு அவள் கண்ட தீர்விற்கும் ஏற்ற வெகு பொருத்தமான தலைப்பு இது.*

*காதலித்து மணந்த பணக்கார விஸ்வநாத் அவள் மீது கொண்ட இச்சையால் 3 வது கருவும் உருவான நிலையில், மருத்துவரிடம் குடும்பக்கட்டுப்பாடு செய்யச் சொன்னேனே பின் எப்படி? கரு உருவானது என சுகன்யா கேட்க , விஸ்வா அதற்கு சம்மதிக்கவில்லை என அவர் கூற, கணவனிடம் கொந்தளிக்க அவன் கலைத்துவிடலாம் எனக் கூலாக சொல்ல இருவருக்கும் இடையே கொஞ்சம் கொஞ்சமாக விரிசல் ஏற்பட்டு பிரிகின்றனர்.*

*கல்லூரி வயதில் நிற்கும் மகள் - நடிக்க ஆசைப்படுகிறாள்.*

*பள்ளியில் படிக்கும் அஸ்வின் போதையின் பிடியில் ஆட்டிஸம் பாதித்த மகன் ஹரி ஒரு விபத்தில் எதிர்பாராத விதமாக மூளைச்சாவு அடைய , உறுப்பு தானம் பற்றி மருத்துவர் சொல்ல விஸ்வா அதற்கு மறுப்புத் தெரிவிக்க சுகன்யா எடுத்த அதிரடி முடிவு என்ன? அறியப் படியுங்கள்.*

**ஸ்ரீகாந்த் திருச்சி**







பூட்டும் உன் கையில்
சாவியும் உன் கையில்
சிறை தண்டனை மட்டும்
எனக்கேனடி?!

ஒரே முறை உன்
விழிக்கதவுகளை திறந்து
என்னை பார் பிறவி பலனை
அடைந்து விட்டு
மோட்சம் அடைகிறேன்!

நீ என் வாழ்க்கையில்
போட்ட கோலம் காலம்
கடந்தும் வலிக்கிறது
ஏனோ என் கவலைகளின்



சத்தம் உன்
புன்னகைகளில்
காணாமல்
போகிறது!

**லி.நௌஷாத் கான்**



சூழ்கொண்ட வான்மேகம்!
கதிர்கள் உதிர்த்தது!
மழைத்துளியாய்!!

இரவு விண்மீன்
பகலில் மண்ணில் தெரியும்!
மார்கழியில் மட்டும்.
பனித்துளியாய்!

பாயும் அம்புகள் வீரனுக்கு
திமிலில் இலக்கு
ஜல்லிக்கட்டு!!!

ஆயிரம் இலைகள் மழையில்
நனைந்தாலும் வேர்தான்
நீருக்கு நுழைவு வாயில்!!!

மண்ணிற்கு மழை தந்த
வானத்தை மரங்கள்
வாழ்த்தியது இலைகளில்
பச்சை கொடி காட்டி!

சிதறிய கல்லில் தெரிந்தது
மறைந்திருந்த
சிற்பத்தின் அழகு!

கொத்தாக மலர்ந்த
மலர்கள் தினமும்
உதிர்ந்தது நாள்காட்டியில்!

கூட்டு வாழ்க்கையின்
ஒற்றுமையை கற்றுத்தந்தது
குழிக்குள் வரிசையாக
செல்லும் எறும்புக்கூட்டம்.!

மண்ணுக்குள்
மறைந்திருக்கும் வேர்கள்
மரக்கிளைகளின்
உள்ளுறுப்பு!!

கருவறையில் தோன்றி!
பனிக்குடம் உடைந்து!
உருவெடுத்து உலாவி!
காத்து வளர்த்த நீருடலை!
காற்றும் நீரும் பிரிந்தபின்!



மண்குடமாய்
உடைத்து!
கல்லறையில்
உறக்கம்!
கொள்ளும்
மனித
இனம்.!!!

**கவிஞர் பொன். பனகல் பொன்னையா.**

## "லஞ்சம் பெறா லட்சியவாதி"

தொடக்கம் முதல்
இறுதி வரை கடமையைக்
கண்ணாய்க் காத்து...

காசுபணக் குவிப்பை
கணமும் நாடாது...
களங்கமின்றிக்
களமாடிய கற்பரசரே...

உம் நேர்மை
உலகத்தார்க்குப் பாடம்!
உம் வாழ்க்கை
உலகத்தார்க்கு உதாரணம்!

பைசாவே உயிரெனப்
பலர் கைநீட்டியும்...
"நாணமே நாணய"மென
நெஞ்சுயர்த்தி நிற்கின்றீர்!

காகிதங்கள் குவிந்த
மேசைமேல் கரன்சிக் காற்று
வீசியது! உங்கள் மனம்
கற்பூரமாகாது
கல்லாய் நின்றது!

"சின்ன அட்ஜஸ்ட்மெண்ட்"
என்னும் வார்த்தைகள்
தினமும் வந்து சுரண்டின!
உங்கள் செம்மைச் சுவர்
சிறிதும் சாயவில்லை!

ஊழல் உலா வரும்
ஊரிலே உயிருடன் நிற்கும்
சான்றாக உங்கள் பெயர்
பொறிக்கப்படும்
எதிர்காலக்கல்வெட்டில்!

சம்பளம் குறைவுதான்
சந்தோஷக் குறையில்லை!
வீடு சிறியதுதான்
வெளிச்சம் மாறவில்லை!

பணிக்கு இன்று ஓய்வுதான்
உம் ஒழுக்கத்திற்கு
என்றுமே ஓய்வில்லை!

ஒரு ரூபாய் கூட வாங்காதது
உங்கள் வாழ்க்கைக் கீர்த்தி!
ஒரு நாளும் அசையாதது
உங்கள் உறுதியின் நேர்த்தி!

நாணத்தை நாணயமாய்த்
தாங்கிய நல்லவரே



நாங்கள்
குனிகிறோம்
உம்மை
வணங்க!

**முகில் தினகரன்**
கோவை



## சாதனைச்சிகரம் ஏறிடு!


உழைப்பினால் சிந்தும்
வியர்வை உடல்நல
பாதுகாப்பின் உயர்வு
கவலையால் சொரியும்
கண்ணீர் அடுத்த நகர்வுக்கு
அழற்சி !

வினாக்குறி வாழ்க்கையில்
முற்று எப்போதும் வராது
பலருக்கு ஆச்சரியமாகி
வாழ்வதில்
மேற்கோளாகிவிடு!

வாழ்ந்தோம் மடிந்தோம்
என்றில்லாது நடந்திடு
ஒவ்வொரு மணித்துளியும்
உள்ளங்கை நெல்லிக்கனி !

அதோ தெரிகிறது இலக்கு
இன்றே புறப்படு பிடிப்பதற்கு
பாய்மரக் கப்பல் வேண்டாம்
விசைப்படகு உன்னோடு
வேண்டும் !

வாழ்க்கை ஒரு பந்தயம்



வெற்றி
தோல்விகள்
ஏராளம்
பரிசுக்
கோப்பையை
வெல்ல
சாதனைச்
சிகரம் ஏறிடு !

**கா.ந.கல்யாணசுந்தரம்**

## குளிர்பதனச் சிறைக்கூடம்

பெற்றெடுத்த குழந்தைக்கோ ஆசை தீரப்
பெருகிவரும் பால்கொடுக்க முடிய வில்லை
சற்றேஎன் மடிவைத்துக்கொஞ்சி நெஞ்சில்
சந்தனத்தை அணைப்பதற்கும் நேரமில்லை
பற்றியகை கணவனுடன் குடும்பம் பற்றிப்
பாசமுடன் பேசுதற்கும் இயலவில்லை
சுற்றத்தார் தேடிவந்தும் அன்பாய்ப் பேசிச்
சூழ்ந்தமர்ந்து மனம்நெகிழ ஒய்வே இல்லை !

சுடுகின்ற மாமியாரின் சொல்லால் நெஞ்சு
சுட்டெரிய வழிகின்ற கண்ணீர் கண்டு
படுக்கையறை ஒத்தடமாய்க்கணவன் செய்யும்
பரிவுதனை அனுபவிக்கும் பேறுஇல்லை
கொடும்பழியைப்போடுகின்ற நாத்தி மாரைக்
கோபமுடன் திட்டியெதிர் சண்டை யிட்டுக்
கடுகடுத்த முகம்மலர சமரசத்தில்
கலந்துவரும் மகிழ்ச்சிக்கு வழியுமில்லை !

விடிவதற்கு முன்னெழுந்து வீட்டு வேலை
விரைவாக முடிக்குமுன்னே காலம் ஓடக்
கடிவாளக் குதிரையாகக் கடமை செய்யக்
கணவனுடன் அலுவலகப் படிகளேறி
நடிக்கின்ற நாகரிகப் பெண்ணாய் மாறி
நாளெல்லாம் எந்திரமாய்ச் சக்கையாகும்
குடித்தனமோ குளிர்பதனச்சிறையின் கூடம்
குமுறுதற்கும் பொழுதில்லா நகர வாழ்க்கை !

## குனிந்தபடி இருப்பதற்கா தலைகள்

நாட்டினிலே நடக்கின்ற அநியா யத்தை
நான்கேட்கத் தெருவிற்கு வந்து நின்றால்
வீட்டினிலே இருப்பவர்கள் ஏசுகின்றார்
வீண்வேலை எதற்கென்றே பேசுகின்றார் !
கூட்டிற்குள் அடைப்பட்டு இருத்தல் விட்டு
குறைகேட்கச் சிறகுகளை விரியச் செய்தால்
மாட்டிற்குக் கிடைக்கின்ற சாட்டை போல
மரியாதை தானுனக்கும் கிடைக்குமென்றார் !

உண்மைகளைப் பேசுதற்கு வாய்தி றந்தால்
ஊர்கெட்டுக் கிடக்கிறது வாய்மூ டென்றார்
கண்ணிரண்டில் பார்த்ததினைச்சொல்லவந்தால்
கழறுதற்கு நாக்குனக்கு இருக்காதென்றார் !
எண்ணத்தில் கபடின்றி நேர்மை யோடு
என்பணியைச்செய்வதனால் தலைநி மிர்ந்து
மண்மீது நடந்தாலோ காண்போ ரெல்லாம்
மமதையோடு செல்வதினைப்பாரென்கின்றார் !

உழைக்காமல் உழைப்பவரின் உழைப்பைத் தின்னும்
உன்மத்தர் செயல்களினைக்கேட்க வந்தால்
பிழைப்பதற்குத் தெரியாத முட்டாள் என்றே
பின்கழுத்தைப்பிடித்
தென்னைத்தள்ளுகின்றார் !
குழைந்திரந்து வாழ்வதுவும் வாழ்வா சொல்வீர்



குனிந்தபடி
இருப்பதற்குத்தலையெதற்கு
பிழைகளினைச் சுட்டுதற்கே
நிமிர்ந்து நிற்பேன்பின்விளைவு
எதற்கும்நான் அஞ்சமாட்டேன் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

## 2.0 கிட்ஸ் !

திருவிழா கூட்டம் என்றாலும் திருமண கூட்டம் என்றாலும்...
தனக்கான தேவதையை தேடிக் கொண்டுதான்
இருக்கின்றன...
ஒவ்வொரு 2.0 கிட்ஸ் ன் கண்களும் !

**எம்.பி.தினேஷ்.** கோவை – 25

## உடலும் உள்ளமும்

உடலும் உள்ளமும் ஒன்றோடு
ஒன்று பிணைந்தவை!

உடல்நலம் பாதிக்கப்பட்டால்
மன அமைதி குறையும் !

மன அழுத்தம் அதிகமானால்
உடல் ஆரோக்கியம் கெடும் !

ஆரோக்கியமான வாழ்விற்கு
உடற்பயிற்சி அவசியம் !

மன பயிற்சியும் மனிதனுக்கு
முக்கியம்!

சத்தான உணவே உடலுக்கு
பலம் மனதிற்கு அமைதி !

ஆழ்ந்த உறக்கம் மூளையைப்
புதுப்பித்து பதட்டத்தை
குறைக்கும்!

ஆழ்ந்த மூச்சு விடுவது ரத்த
ஓட்டத்தையும் மனநிலையும்
சீராக்கும்!

பிடித்தமான பொழுது
போக்குகளில் ஈடுபடுவது
மன அழுத்தத்தை விரட்டும்!

உடல் ஒரு ஆலயம் உள்ளம்
அதன் தெய்வம் !

சுத்தம் பேணினால் வாழ்வு
என்றும் சொர்க்கம் !

உழைப்பு உடலுக்கு உறுதி
அன்பு உள்ளத்திற்கு
அமைதி!

உடலும் உள்ளமும்
இணைந்தால் என்று
மகிழ்ச்சி!

உடல் ஒரு கருவி உள்ளம்
அதன் பாட்டு
கருவி சீரானால் இசை
தானாக கேட்கும் !

வாடிய பயிரைக் கண்டபோது
வாடிய வள்ளலார்
உள்ளம்போல் !

துடிக்கும் இதயம் அன்பால்
நிறைந்தால் உடலும் பிணி
இன்றி வாழும் !

அமைதியான உறக்கம் ஆயுள்
விருந்து!

எண்ணம் தூய்மையானால்
ஆரோக்கியம் தானாக
நிலைக்கும் !

மனதில் பாரம் குறைந்தால்
உடலில் வேகம் பிறக்கும்!



உடல் தூய்மை
, உள்ளத்
தூய்மை
மனத்தூய்மை
வாழ்க
வளமுடன்!

**பெ.திருமுகம்.**
மணமேல்குடி

முட்களுக்கு இடையே
பூத்தாலும் இதழ்கள்
முழுக்க மலர்ந்த முகத்தின்



ரகசியத்தை
சொல்
பதியன்
போடுவதற்கு.

**ஜயந்தி சிவக்குமார்**
திருச்சி

## ஆல்பம்

நீண்ட நாள் திட்டமிட்டு
ஒரு ஞாயிற்றுக்கிழமையில்
தொடங்கும் வீட்டை
ஒதுங்க வைக்கும் பணியை

பதினோரு மணிக்கெல்லாம்
அரைகுறையாய் நிறுத்தி



விடும்
கையில்
கிடைக்கும்
ஒரு பழைய
போட்டோ
ஆல்பம்

**நாகை பாலா**

## மௌனம் விலக

" உன் மௌன மொழி
வாடிய விழி உடைந்த உன்
உள்ளம் வெடித்து காய்ந்த
உன் இதழ்கள் ....."

என்னுடன் நீ போடும்
சண்டை சீண்டல் மொழி
உச்சம் பெற்று ஆட்சி
பெற்றால் அது தீண்டல்
மொழி ...."

உன் காந்த விழியும் காதல்
ரசம் பொங்கும் ஈர்ப்பு
மொழியும் என்னை சாய்த்து
விடும் ..."

அதையும் கடந்து நின்றால்
உன் புன்னகையும்
சிரிப்பொலியும்
கவிழ்த்து விடுமே ..."

அடித்தாலும் நீ தான்
அனைத்தாலும் நீ தான்
இரவுக்குள் நுழையும் போது
சர்க்கரையும்
எறும்பும் போல ..."

கொதிக்கும் உன் தேகம்
துடிக்கும் உன் இமைகள்
நடுக்கும் உன் விரல்கள்
தவிக்கும் உன் கால்கள் .... "

என் உறவைத் தாண்டிய உன்
பிறந்த வீட்டு உறவு உன்
நிழல் நாடியது காரணமா ....."

அந்த நிழலில் மகிழ்ந்த



நாட்கள்
நினைவில்
அலை
மோதுகிறதா
மௌனம்
விலக
வாய் திற
மாற்று
மருந்தே....."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி

## வலி

நீ அருகிலிருந்தால்
அடிபட்ட காயம் கூட



வலிப்பதில்லை
ஆனால்

தனிமையில்
இருந்தால்
என் இதயத்
துடிப்புக் கூட
வலிக்கிறது.

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை

## இறைவன்

உனக்கு இந்த மலைகளும்
நதிகளும் மலர்களடர்ந்த
செடிகளும் ஆர்ப்பரிக்கும்
அலைகளும் அனைத்துமே
பிடித்திருக்கிறது.
ஆனால் அவற்றின்



அழகுக்கு
பின்னால் ஒரு
ஆண்டவன்
இருப்பதை
மட்டும்
நினைவுகூர
ஏனோ
மறந்து விடுகிறாய்.

**கே. பி. ஜனார்த்தனன்**

## உயிராய் நீதானே

விடி பொழுது காலையிலே
உன் முகம் பார்க்கையிலே
புத்துணர்வு பெற்றேனேடி...

சாய்ந்த பொழுது நேரத்திலே
பல சாகசம் செய்ய
தோனுதடி...

படர்ந்த பனிகாலம் கூட
பக்குவமா பல விருந்து
படைக்குதடி....

பெண்ணே நீ இருக்கும்
திசையில் தென்றல்
தேனாய் இனிக்குதடி...

கானாத உன் முகத்தை
பார்க்க என் உயிர் செத்து
மடியுதடி...



எட்டு திசை
கட்டியாள நீதான்
என்றும் எனக்கு
வேண்டுமடி....!!

**பொன்.கருணா**
நவி மும்பை

## சிரிக்கும் சின்ன சிட்டு

மொட்டு விரிந்தது போல
அழகுச் சிரிப்பில் ,
சிறகுகள் விரித்து
சிட்டுக்குருவிகள் பறக்கிறதே
விருட்சங்களே அதன்
வீடுகளானதால்
உள்ளத்தில் மகிழ்ச்சியுடன்
மரக்கிளையில் ஆடுகிறதே
விடியலில் கதிரவனைப்
பார்த்து சிரிக்க
இனிமை குரலில் கீதம்
பாடுகிறதே மழலை
சிரிப்பு போல் மங்காத
உள்ளம் தெரிகிறதே...
சின்ன சிட்டுக்குருவியின்
உள்ளத்தில் எண்ணங்கள்



பிரதி
பலிக்கிறதே...
போற்றுவோம்
சிட்டுக்
குருவியை
ரசிப்போம்
அதன்
அழகை...

**உஷாமுத்துராமன்**



## உலகத் தமிழன் வரலாறு.! உ.வே.சா.

ஐயனே.. நீ.. தமிழ்த் தாத்தா.!
ஐயனே நீ.. தமிழ் ஊற்று.!

ஐயனே.. நீ தேடி அலைந்தது
ஓலைச்சுவடி.. நீ.. தமிழுக்குக்
கிடைத்த காலச்சுவடி.!

நீ.. கண்டு பிடித்தது
காப்பியங்கள்.. பதித்துத்
தந்தது.. இலக்கியங்கள்!

சங்க காலம்
பொற்காலம்.. உங்க
காலம் நற்காலம்..
தமிழ்த் தாத்தா தந்தது
நம் எதிர் காலம்.!

உன் பெயரை சொல்ல
நாவினிக்கும்.. ஐயனே உன்
கால்கள் தமிழைத் தேடி
நடக்கும்!

எழுதுகோல் உனது கையில்
இருக்கும்.. பொழுது தான்
முதல் நாடகம் பிறக்கும்...

உரை நடை உன் தலைப்
பாகை யாயிருக்கும்.. உன்
இதயத்தில் தான் தமிழ்த்
தேனாயிருக்கும்!

என் தாத்தா.. நம் தாத்தா..
அனைவருக்கும் மேல் அவர்
தாத்தா..! ஏன்?
அவர் தமிழ்த் தாத்தா!

தா..தா.. என்றே.. தமிழ்
எழுத்தே.. அழைத்தத் தாத்தா!
ஓலைச்சுவடிகளுக்கு அச்சு
வடிவம் தந்த தமிழ்த் தாத்தா!



உன் பெயரைக் கூறாது
.. உன் தொண்டை
நினையாது.. நம்
பொழுதுப் புலராது!
நீ..எம் தமிழின் வரலாறு!

**வே.கல்யாண்குமார்.**

## தந்தை

தந்தையே தலைவர் ஆவார்
தன்னையே உருக்கித்
தேய்வார் உந்துதல் விசையாய்
மாறி உண்மையில் ஊட்டம்
ஈவார் சொந்தமாய் உழைப்பை
ஊற்றிச்சொர்க்கமாய்
குடும்பம் ஆக்கிச்சந்தமாய்
இனிக்கும் நல்லார்
சந்ததி போற்றும் வல்லார்
(52)

அறிவினைக் கூட்டும்
ஆசான் ஆற்றலைத்
தீட்டும் நண்பன்
நெறிகளைக் கற்று
வித்தே நெஞ்சினில்
நிறையும் தோழன்
முறித்திடும் உறவா




தந்தை?
முழுமையை அறிவார் யாரோ?
குறித்திடும் சான்றாய்
வாழ்ந்து குன்றினின் புகழாய்
நிற்பார்
(53)

வலிகளைத் தனக்குள்
வைத்து வரங்களை நமக்குத்
தந்து சலித்திடும் வகையில்
பேசாச் சத்திய சீலன் தந்தை
பொலிவுடன் இருப்பார்
என்றும் போற்றுவோம்
அவரை நன்றாய்
ஒலித்திடும் புகழால்
நாளும் ஓதுவோம்
தியாகம் தன்னை!

**கவிஞர் மு.வா.பாலாஜி**
ஒசூர்

## பாதைக்கு வழி _ மொழி

அன்னையின் மொழியில் அன்பு காட்டி அரவணைக்கப்படும்
தந்தையின் மொழியில் அறிவுரைக் கூறி கண்டிக்கப்படும்
ஆசிரியரின் மொழியில் கல்வி கொடுத்து நல்வழி நடத்தும்
ஆண்டவனின் மொழியோ அருள் மழை பொழியும்.....
ஓடும் ஆறாய் உலகில் வந்தாய் "பேச்சு" மொழியாய்...
அதில் பிறக்கும் பனிக்கட்டியாய்... "எழுத்து" மொழியாய்
பரிணமித்தாய்.. ஒவ்வொருவர் மனதின் கண்ணாடியாகி
சமூகப் பிணைப்பானாய்.. பேசப்படும் பொழுதும் கேட்கப்படும்
பொழுதும் "பேச்சு" மொழியானாய்... எழுதப்படும் பொழுதும்
படிக்கப்படும் பொழுதும் "எழுத்து" மொழியானாய்
நினைக்கப்படும் பொழுதும் கனவு காணப்படும் பொழுதும்
"எண்ண" மொழியானாய்... ஆக, பேச்சு,எழுத்து எண்ணமாகி...



யாதுமாகி நிற்கும் மொழியே" உன் சீரிளமைத்
திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துவமே"
"உலகை நீ பார்ப்பது விழியால்...உலகே உன்னை
பார்க்க வைப்பதும் மொழியால்"
"உலக மொழி நாளில்"... அனைத்து
மொழிக்கும் தலை வணக்கம்....

**ம. முத்துலெட்சுமி** ஒசூர்.

## நிழலை தொலைத்த நிஜம்

நினைவுகள் என்னும் நிஜம் இருக்க வேறு நிழல் எதற்கு?
நினைவுகள் நீங்காமல் நெஞ்சில் நிலைக்கும்போது,
நிழற்படம் எதற்கு? பார்க்க முடியுமா என ஏங்கிய காலங்கள்
போய், பேசும் வாய்ப்பைத் தந்து இயற்கை நம்மை
அரவணைக்கிறது! நிஜங்களை மட்டும் நாம் நேசிக்கும் போது,
இயற்கை என்றும் நம்மோடு பயணிக்கும்!
அதைப் பதிவாக்கிப் பத்திரப்படுத்த முயலும்போதுதான்,
ஆசைகள் மெல்ல மேலோங்கிப் போகிறது! விலகியும்
கூட போகிறது கனவுகளோடு ஆவணங்களை சேர்த்து
வைக்கும் அத்தனையும், கடைசி வரை நிலைக்கும் என்பது
நிச்சயமில்லை! ஆனால், கண்ணுக்குள் புதைத்து வைத்த
நினைவுகளுக்கு, மரணத்திற்குப் பின்னும் நினைவாக மிஞ்சும்.
அழிவில்லை! சில பயணங்கள் நீளாமல் சுருங்குவதும்
நன்மைக்கே! சில விவாதங்கள் தொடராமல் முடிவதும்
நன்மைக்கே! அன்பான வார்த்தைகளும், அழகான



புன்னகையும் போதும், புதைந்து போன
பொக்கிஷங்களை அவை மீட்டுத்தரும்! பறந்து
செல்வதை விட, மெல்ல நடந்து செல்வதிலேயே
வாழ்க்கையின் அத்தனை சுகங்களும்
ஒளிந்திருக்கின்றன... அந்த நினைவுகளை
அசைபோட்டபடி,
நம் பயணம் இன்பமாகத் தொடரட்டும்!

**ஜனனி அந்தோணி ராஜ்,** திருச்சிராப்பள்ளி.

## வாங்க பேசலாம்

என்ன சோகம் நீ நிழலாக
மாற.. இருட்டின் அழகில்
சிலை ஆவாய்.. என்ன
கண்ணீர் கரங்களுக்கு
முத்தமிடு முத்து நீர்
பன்னீர் பறவையாகும்..
என்ன பாரம் ஏக்கங்களை
நாட்காட்டியின்
தாள்களாக
கிழித்துவிடு..
என்ன எதிர்பார்ப்பு
தருணங்களில்
கனவின் கதவுகளை
திறந்துவிடு... என்ன
மகிழ்வு
கடிகார முட்களை
வில்லாக்கு கண்கள் விடை
கூறும்.. என்ன வாழ்க்கை
வயதின் கூடுதலில்
வழிகாட்டும்.. தினம் ஒரு
முறையாவது சிரியுங்கள்..
சிந்தை குளிரும்..



விந்தை புரியும்..
வேட்கை தீரும்...
பேசலாம் வாங்க...

**கவிஞர் முனைவர் நா.மோகனசெல்வி மனோகரன்**
கோபிசெட்டிபாளையம்

## Follow our WhatsApp Channel

Scan this QR code using the CAMERA to view or follow our Channel

PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel

Sanjay
Cell: 90032 64920



## Real Choice

Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection

#361, Mint Street, (Opp. New Jain Temple) Sowcarpet, Chennai-600 079.

Real Choice Chennai | Real Choice Chennai | Real Choice Chennai

## WANTED

MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED

**Managers**: Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000

**Telecaller** -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer Knoweldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000

Call/wapp: 9438610756



## WEBSITE

## Any Website Rs.10,000/-

Professional Websites at Affordable Price!

Call: 7789941009

AUTHORISED கருடவேகா INTERNATIONAL COURIER
GARUDAVEGA
A Brand of NexGen Logistics Pvt Ltd

## International Courier Service

ஆண் / பெண் வேலைக்கு தேவை

கல்வி தகுதி : 10th Std முதல்

Ganapathy, Thudiyalur.

88866 56211

## WANTED

FEMALE TELECALLER

EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI

FOR PADMA MEDIA HOUSE

PadmaMedia House
Call/Whatsapp 94386 10756

## START YOUR OWN EPAPER WEBSITE TODAY!

CALL 7789941009

## Vilambaram

WE HELP YOU TO BOOST YOUR BUSINESS

VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599

## WANTED

**Job 1-SALES ENGINEER**
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu

**Job 1-SALES ENGINEER**
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu

ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com

## Wanted REPORTERS

சட்டமன்ற தொகுதி வாரியாக நிருபர்கள் தேவை



PRGI No. TNBIL/25/A1564
பேப்பர்பாய்
8122664699

தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE

## TAMIL TELECALLER JOB FOR

WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009

## UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD

உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்

அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்

5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துனை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துனை

## ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்

ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.

ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com


Vilambaram
GET...
SET.....
SHOOT
YOUR SALES
WITH SOCIAL
MEDIA
ASK US HOW ?
CONTACT US TODAY!
+91-7789941009
www.vilambaram.com


www.tamilnaduepaper.com
www.anandabhaskar.com
www.paperboy.biz


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just499
www.just499.com


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
RAVIKUMAR AND COMPANY


WE'RE
HIRING!
A Passionate
Content Creator
94386 10756


CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS



S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மிக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
based on Harvard's Project Zero
Admissions Open
For AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just499
Visite Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com

முனிவர் துணை
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots *Farm Land
*Flats *Ware Houses
*House *Factory Sites
*Villa *Sheds
*Bungalows
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website · Real Estate Website · E. Commerce Website
Restaurant Website · Shopping Website · News Website
MLM Binary Website · MLM Level Website · MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY AT ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 - Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

ANY MLM PLAN
INR PLAN RS.20000
CRYPTO PLAN RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247

WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998



# பல்சுவை களஞ்சியம்




# மாறிப்போன உறவுகள்



முன்னெல்லாம் ஒரு சொந்தகாரங்க வீட்டுக்குப் போனால்... "தம்பி..! வா வா, கண்ணு.. பாத்து எவ்ளோ நாளாச்சு. அம்மா நல்லாருக்கா..? அப்பா நல்லாருக்கா..? என்ன சாமீ இப்டி எளச்சுட்டே?"
"அங்க எல்லாம் நல்லா இருக்காங்க. நீங்க எல்லாரும் நல்லாருக்கிங்களா..?"
"எல்லா நல்லா இருக்கோம் சாமீ... கைய கழுவிட்டு வா. ரெண்டே ரெண்டு தோசை ஊத்தி தாரேன்.. பாப்பா.. மாமாக்கு கை துடைக்க துண்ட எடுத்து குடுத்துட்டு, சூடா தோசை ஊத்துமா".
"அத்தை... நா வரும்போது தான் சாப்ட்டுட்டு வந்தேன். என்னால இப்ப சாப்டவெல்லாம் முடியாது. தண்ணி மட்டும் குடுங்க, போதும்.."
"இந்தத் தண்ணிய குடிக்கவா இவ்ளோ தூரம் வந்தே..? பாப்பா.. அப்டியே தோசைய தட்டத்துல போட்டு, இங்கயே கொண்டாந்து குடு. மாமா இப்பிடியே உக்காந்து, பேசிட்டே சாப்டட்டும். " (எந்திரிச்சு சமையக்கட்டு வரைக்கும் நடக்க சங்கடப்பட்டு, சோறு வேணாம்னு சொல்ற சோம்பேறின்னு நினச்சுட்டாங்க போல).
அப்டி இப்டி பேசிப் பேசியேயே.. ஒரு நாலஞ்சு தோசைய அமுக்கி விட்ருவாங்க. அடுத்து, வந்த விஷயத்த சொல்லிட்டு நாம கிளம்பும் போது... "ஏஞ்சாமீ... இருந்துட்டு சாயங்காலமா போலாம்ல. மத்தியானத்துக்கு மாமன நாட்டுகோழி புடிச்சுட்டு வரச் சொல்றேன்.."
"இல்லத்த.. வேலையிருக்கு. அவசரமா போகணும்.."
"எப்ப வந்தாலும் உனக்கு அவசரந்தான்... பாத்து மெதுவா போ சாமீ. அம்மாவ கேட்டேன்னு சொல்லு. ஒரு நாலு நாளைக்கு அம்மாவ கொண்டாந்து விடு சாமீ, இங்க எங்கூட இருக்கட்டும். அட, பேசிட்டே மறந்துட்டேன் பாரு, இரு வாரேன்... (போய்... ஒரு கட்டப்பையில கத்திரிக்கா, தக்காளி, வெங்காயம் போட்டு கொண்டாந்து, வண்டில வெச்சுட்டு...) நேத்து சந்தைக்குப் போனேனா.. அங்க வாங்கியாந்தேன். நாங்க மூணு பேரு தான். இத்தனைய வெச்சுகிட்டு, என்ன பண்ணப் போறேன். கொண்டு போய் அம்மாட்ட குடு. பாத்து பத்தரமா போ சாமீ. எனக்கும் அம்மா நெனப்பாவே இருக்கு. முடிஞ்சா அடுத்த வாரம் வாரேன்னு சொல்லு.." இப்பெல்லாம் ஒரு சொந்தங்காரங்க வீட்டுக்குப்போனா ...
"ஹாய்... வா வா.. ஒரு அஞ்சு நிமிஷம் லேட் பண்ணிருந்தாலும், நாங்க வெளிய கிளம்பி இருப்போம். என்ன சாப்பிடுற..? காபி, டீ..? (கேட்டுட்டு உடனே) எங்க வீட்ல நாங்க யாரும் டீ, காபி சாப்பிடுறதில்ல.." (இதுக்கும் மேல, 'இல்லைங்க.. நாங்க தினம் ஆறு வேளையும் குடும்பத்தோட ஊர்வலமா போய் டீ குடிச்சுட்டு வந்தால்தான் எங்களுக்கு தூக்கம் வரும்'னா சொல்ல முடியும்..?) "ஐயையோ..! நா இன்னேரத்துல டீ, காபி சாப்பிட மாட்டேங்க.."
"அப்புறம்... என்ன விஷயம்..? (வந்த விஷயத்த சொன்னதும்)
இதுக்காகவா இவ்ளோ தூரம் வந்தே..? போன்லயே சொல்லி இருக்கலாமே..."
"இல்லைங்க... பார்த்து ரொம்ப நாளாச்சு. அதான் நேர்ல பாத்துட்டு போலாம்னு வந்தேன்.." "அதான் தினம் நாலு தடவ, வாட்ஸ் ஆப், FBல... போட்டோ அப்டேட் பண்றனே..." (கன்னத்துல செருப்பாலயே அடிச்ச மாதிரி இருக்கும். )
இதுக்கிடைல, அவங்க பையனும் பொண்ணும் காதுல ஹியர் போன மாட்டிட்டு குறுக்க மறுக்க நடந்துட்டு இருப்பாங்க. ஆனா நம்மள ஒரு மனுஷ ஜந்துவா கூட மதிக்க மாட்டாங்க. இந்தம்மா செருப்பால அடிச்சது பத்தாதுன்னு, தன்னோட குட்டிங்க கைல வெளக்குமாத்த குடுக்குற மாதிரி...) "ப்ரீத்தி... இந்த அங்கிள் யாருன்னு தெரிதா..?" (அது சின்ன வயசுல, நம்ம பாக்கெட்ல கைய விட்டு காச எடுத்து, ஏழு கடல மிட்டாய வாங்கி ஒரே வாய்ல ஒன்னா அமுக்குனத மறந்துட்டு.. சந்தைல எருமை மாட்ட ஏற இறங்க பாக்குற மாதிரி ஒரு பார்வைய பாத்துட்டு...) "நோ மம்மி.. நா பாத்ததே இல்ல. யாரிது..?"னு, வெளக்கு மாத்துலயே நம்மள போடும். உடனே அம்மாக்காரி அசடு மாதிரி ஒரு சமாளிப்பு சிரிப்பை சிரிச்சுட்டு...
"அப்புறம்..?"
(இன்னுமாடா கிளம்பல).
"சரிங்க... டைமாச்சு, நா கிளம்பறேன்.."
"ஆமா...
வந்து ரொம்ப நேரமாச்சு. நானும் வெளிய கிளம்பணும்.." "இனிமே வரும்போது ஒரு ரிங் பண்ணிட்டு வா. எங்க வீட்டுக்கு வர்ற கெஸ்ட்லாம் எப்பவுமே பர்மிஷன் கேட்டுட்டுதான் வருவாங்க... இப்ப போகும்போது அந்த கேட்ட லாக் பண்ணிட்டு போயிடு. தெரு நாய்லாம் உள்ள வந்துடும்.." மாறிய_ உலகம்.. மாறிப்போன_ உறவுகள்....

# போகுமிடம் வெகு தூரமிலை!



நாடக மேடையில் காட்சி முடியும் தருணம் . இரண்டு காட்சிகள்தான் பாக்கி, அதன் பின் நாம் நம் வீட்டிற்கு திரும்ப வேண்டும்.

காட்சிகளை நன்கு நடித்து தாமதிக்காமல் வீடு திரும்ப வேண்டும். அதாவது வாழ்க்கையில மூன்றாவது கட்டத்திற்கு வந்தபின்!!

பிரபல எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் இதை விவரிக்க ஒரு கதையைக் கூறுவார்....

ஒரு வழிதான் அரசனிடம் சென்றானாம். அவனிடம் ஒன்றுமே இல்லாததால் அரசனிடம் உதவி கேட்டு போகிறேன். கருணையுள்ளம் கொண்ட அரசனும்,' உனக்கு என்ன வேண்டும் "? என கேட்கிறான்.

அதற்கு அவன்," விவசாயம் பண்ண சிறிது நிலம் வேண்டும், அது போதும்" என்றான்

அரசன் அவனிடம்," நாளை இதே நேரம் இங்கு வா . இங்கிருந்து ஓட ஆரம்பி, எவ்வளவு தூரம் ஓடுகிறார் அவ்வளவு நிலம் உன்னுடையது . ஆனால் ஒரு நிபந்தனை. வேண்டியமடைடும் ஓடிவிட்டது பொழுது செய்வதற்காகவும் ஆரம்பித்த இடத்திற்கு வந்து விட வேண்டும். வராவிட்டால் உனக்கு எதுவும் கிடையாது. " என்றான்.

மறுநாள் விடிந்ததும் அவன் அரசன் குறிப்பிட்ட இடத்திலிருந்து ஓடவாரம்பித்தான் . ஓடிக் கொண்டே இருந்தான் உச்சி வேளை வரை. இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம் என ஓடிக் கொண்டே இருந்தான்.

பொழுது சாய்ந்தது தான் திரும்ப வேண்டியதைப் பற்றிய ஞாபகம் வந்தது. அப்புதுதான் தான் வெகு தூரம் வந்து விட்டதை உணர்ந்தான். திரும்ப வேண்டிய அவசரத்தில் திம்பி ஓட ஆரம்பித்தான். மிக களைப்பாக இருந்தது, ஓட முடியவில்லை. மூச்சிறைக்க. சிறிது நேரத்தில் உயிரற்ற சடலமாக கீழே சரிந்தான்.

இதை எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த அரசன் அவனருகில் சென்று,' இவனுக்கு வேண்டியது சிறிது நிலம், காரணமில்லாமல்' என வருந்தினான் தொலை தூரம் ஓடி உயிரை மாய்த்துக் கொண்டான்.

அவன் திரும்பி வர எண்ணினான் .ஆனால் திரும்பிய வரமுடியாத இடத்திற்குக் சென்று விட்டான்.

நானும் வாழ்க்கை பந்தயத்தில் ஓடி ஓடி எங்கு நிற்கிறேன் இப்போது?ஓடிக் கொண்டே இருக்கிறேனே! சூரியன் அஸ்தமித்து கூட தெரியாமல் ஓடிக் கொண்டிருக்கிறேன். திரும்பி வர தெரியாத நான் என்ன அபிமன்யுவா? நாம் எல்லோருமே திரும்பி வரத் தெரியாத அபிமன்யுக்கள்தான் !!
உண்மை என்னவென்றால்...

திரும்பி வரத் தெரிந்தவர்கள் வாழ் தெரிந்தவர்கள் ,ஆனால் திரும்பி வருவது அவ்வளவு எளிதல்ல.

டால்ஸ்டாய் கதை கதாநாயகன் சமயத்தில் திரும்பி வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என தோன்றியது.

# மீம்ஸ்









## விடுகதை



| | |
|---|---|
| அடித்தால் விலகாது, அணைத்தால் நிற்காது. அது என்ன? | தண்ணீர் |
| நடக்கத் தெரியாதவன், நட்டுவனுக்கு வழி காட்டுகிறான் அவன் யார்? | கைகாட்டி |
| தலையில் கீரீடம் வைத்த தங்கப்பழம் அது என்ன? | அன்னாசிப்பழம் |
| ராஜா, ராணி உண்டு நாடு அல்ல. இலைகள் பல உண்டு, தாவரம் இல்லை! அது என்ன? | காட்ஸ் |
| கந்தல் துணிக்காறி முத்துப் பிள்ளைகள் பெற்றாள் அவள் யார்? | சோளப்பொத்தி |
| மூன்றெழுத்துப் பெயராகும். முற்றும் வெள்ளை நிறமாகும் அது என்ன? | பஞ்சு |



# ஜோக்ஸ்

நீதிபதி : " அந்த வீட்டுப் பூட்டை உடைத்து ஏன் திருடினாய்?"

திருடன்: "என்னோட சாவி எதுவுமே அந்தப் பூட்டைத் திறக்காததால கடைசியா பூட்டை உடைக்க வேண்டியதாப் போச்சிங்க"
========================================

தொண்டர் 1 : "தலைவர் ரொம்ப அப்பாவியா இருக்காரா, எப்படி?"

தொண்டர் 2 : " சலூன்ல துண்டைப் போர்த்தினதுமே, 'எந்த வட்டத்தின் சார்பில போடுறே'ன்னு கேட்கிறாரு"
========================================

"வாழைப் பழம் ஒன்னு எத்தனை ரூபாய்ங்க?"

"ஒரு பழம் ரெண்டு ரூபாய்ங்க"

"ஒன்னரை ரூபாய்க்கு கொடுங்களேன்"

"ஒன்னரை ரூபாய்க்கு தோல் மட்டும்தான் கிடைக்கும்"

"அப்படின்னா ஐம்பது பைசாவுக்கு பழம் மட்டும் கொடுங்க"



========================================

"இந்த ஆசிரியர் வித்தியாசமானவரா, எப்படி?"

"பதிலை சொல்லிட்டு, இதனோட கேள்வி என்னனு கேட்பார்"
==============================================

"டாக்டர், நான் யார் பேச்சையுமே கேட்குறதில்லை"

"அதை என்னிடம் வந்து ஏன் சொல்றீங்க?"

"காது சரியா கேட்கலை; அதை சரி பண்ணுங்க டாக்டர்!"
==============================================

தொண்டர் 1: "தேர்தல்ல தோல்வி அடையாமல் இருக்க என்ன வழி?"

தொண்டர் 2: "போட்டி போடாமல் இருந்திடறதுதான் ஒரே வழி!"
========================================

"சுவரில் எழுதாதே'ன்னு இருந்தது. நான் போயி..."

"என்ன செய்தே?"

" 'சரி எழுதலை'ன்னு எழுதிட்டு வந்திட்டேன்"
========================================

ஆசிரியை : "ஒரு ரூபாய்க்கு ஒரு ஆப்பிள், அப்படின்னா பத்து ரூபாய்க்கு எத்தனை ஆப்பிள்?"

மாணவன்: "ஒரு ரூபாய்க்கு எந்த கடையில ஆப்பிள் விற்குதுன்னு சொல்லுங்க, நான் போய் வாங்கி வறேன்"

# வாழ்வு தரும் ஆரோக்கியம்



## யாருக்கு பொதுவாக ரத்த குறைவு ஏற்படும்?



சரியான உணவு உண்ணாமல் இருப்பவர்கள், கர்ப்பிணிகள், தைராய்டு குறைபாடு உள்ளவர்கள், சிறுநீரக குறைபாடு உள்ளவர்கள், எதிர்ப்பு சக்தி குறைபாட்டினர்,

நாட்பட்ட நோயாளர்கள், வயதானவர்கள், குழந்தைகள் ரத்தம் அதிகரிக்க என்ன சாப்பிடலாம். ஆரோக்கியமான சரிவிகித உணவு மிக அவசியம். எல்லாவிதமான கீரைகளிலும் இரும்புச்சத்தும் மற்ற விட்டமின்களும் நிறைந்திருக்கிறது. அத்துடன் பருப்பு, பால் மீன் முட்டை போன்றவை புரோட்டின் சத்தை கொடுக்கும்.

ஒரு சில காய்கறிகள் பழங்களில் இரும்புச் சத்து அதிகமாக இருக்கிறது. எடுத்துக்காட்டாக பேரிச்சை, முருங்கை புளிச்சக்கீரை.

## தண்ணீர் ஒவ்வாமை...



குளியல் என்பது உடலை தூய்மையாக வைத்திருக்க அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு பழக்கமாக இருக்கிறது. ஆனால், குளியல் என்றாலே சிலருக்கு பயம் ஏற்படும் நிலையும் உள்ளது. ஏனென்றால் உடலில் தண்ணீர் படும்போது தோல் அரிப்பு தாங்க முடியாது. இந்த நிலைக்கு அக்வாஜெனிக் புரூரிட்டஸ் அல்லது தோல் தினவு என்று பெயர். இது ஒரு சிலருக்கு ஏற்படும் அரிதான தோல் பாதிப்பு ஆகும். இந்த பாதிப்பு உள்ளவர்கள் தோலில் தடிப்பு அல்லது நிற மாற்றம் எதுவும் ஏற்படுவது இல்லை. குளித்த உடன் உடலை அரிப்பில் இருந்து மீட்க துணியை கொண்டு நீண்ட நேரம் தேய்த்துக்கொண்டே இருக்கும் நிலைமை காணப்படும்.

இந்நோய் காரணம் குறித்து இதுவரை மருத்துவ உலகத்தால் முழுமையாக புரிந்து கொள்ள முடியவில்லை. உடலில் தண்ணீர் பட்டதும், நரம்புகள் ஏன் இது போன்ற ஒவ்வாமை அறிகுறிகளை ஏற்படுத்துகின்றன என்பதற்கு சில காரணங்கள் இருக்கலாம் என்று மட்டும் சொல்லப்படுகிறது. ஒரு சிலருக்கு ரத்தத்தில் ஹீமோகுளோபின் கூடுதலாக அதிகரித்து இருந்தால், இதுபோன்ற பாதிப்பு ஏற்படும்.

ஹெபடிடிஸ்-சி மற்றும் சில மூட்டு நோய்கள் இருந்தால் இந்த நிலை ஏற்படலாம் என டாக்டர்கள் கூறுகின்றனர். அதே போல், மன அழுத்தம், தோல் கசிவு, சில மருந்துகள் காரணமாகவும் அரிப்பு அதிகரிக்கலாம். சில வேளைகளில், தண்ணீர் தோலின் மேல்புறத்தை தொட்டதும், 'மாஸ்ட் செல்கள்' எனப்படும் நோய் எதிர்ப்பு செல்களில் உள்ள ஹிஸ்டமின் போன்ற வேதிப்பொருட்கள் வெளியே வந்து அரிப்பு ஏற்படுத்தும் என்றும் தெரியவந்துள்ளது. இயற்கையின் பல சிக்கலான கேள்விகளுக்கு விடை தெரிவதில்லை. அதில் இதுவும் ஒன்று என மருத்துவ உலகம் கூறுகிறது.

## நடனமாடுபவர்கள் திடீர் மரணம்: DJ சத்தத்தால் மாரடைப்பு



திருமண நிகழ்ச்சிகள், விழாக்களில் தற்போது டி.ஜே. சத்தத்துடன் நடனமாடுவது புதிய கலாச்சாரமாக மாறிவிட்டது.

இதே போன்ற அதிக சத்தத்துடன் பாடல்களை ஒலிபரப்பி நடனம் ஆடும் போது திடீரென சிலர் இறக்கும் சம்பவங்கள் நடந்து வருகின்றன.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு மாமல்லபுரத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் நடனமாடிக் கொண்டிருந்த பெண் ஒருவர் திடீரென மயங்கி விழுந்து இறந்தார்.

இதேபோல நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் திருமணம் மற்றும் விசேஷ நிகழ்ச்சிகளில் நடனம் ஆடுபவர்கள் திடீர் திடீரென இறக்கும் சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

பல்வேறு நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்படும் டி.ஜே. சத்தத்தால் உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்பது சமீபத்திய ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

ஜெர்மனியில் உள்ள மெய்ன்ஸ் பல்கலைக்கழக மருத்துவ மையம், டி.ஜே. ஒலிகளின் விளைவுகள் குறித்து இளைஞர்கள் முதல் பெரியவர்கள் வரை 15,000 பேரிடம் ஒரு ஆய்வை நடத்தியது.

ஒலிபெருக்கிகள் மற்றும் டி.ஜே. ஒலிகள் போன்ற எந்தவொரு இசையும் ஒரு குறிப்பிட்ட வரம்பை மீறினால், இதயத் துடிப்பு மாறுவது கண்டறியப்பட்டது.

மக்கள் மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள் என்பதும் கண்டறியப்பட்டது. டி.ஜே.க்கள் போன்ற உரத்த ஒலிகளால், மன அழுத்தம், ரத்த அழுத்தம் மற்றும் இதயத் துடிப்பு வியத்தகு அளவில் அதிகரிக்கிறது.

ரத்த அழுத்தம் அதிகரிக்கிறது. மாரடைப்பு மற்றும் மூளை பக்கவாதத்தால் இறக்கும் அபாயம் உள்ளது.

பைபாஸ் அறுவை சிகிச்சை செய்தவர்களுக்கு மாரடைப்பு ஏற்படலாம். 100 டெசிபலுக்கு மேல் ஒலிகளை நீண்ட நேரம்கேட்டால் காது கேட்கும் பிரச்சனைகள் ஏற்படும். சிறு குழந்தைகளுக்கு மெல்லிய உள் அடுக்குகள் சேதமடைந்து நிரந்தர காது கேளாமை ஏற்படுகிறது.

டி.ஜே. சத்தங்கள் கர்ப்பிணி பெண்களைப் பாதிக்கின்றன என்பதை இந்த ஆய்வுகள் காட்டுகின்றன. ஒலி மாசுபாட்டால் கருச்சிதைவு ஏற்படுவதற்கான வாய்ப்பும் அதிகம்.

நமக்கு இதயத் துடிப்பு ஏற்படுவது போல, கருப்பையில் உள்ள குழந்தைகளும் அவற்றை அனுபவிக்கலாம். கர்ப்பத்தின் 4-வது மாதத்திலிருந்து கர்ப்பிணிப் பெண்கள் சத்தங்களிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

டி.ஜே. சத்தம் சுற்றுச்சூழல் மற்றும் விலங்குகள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

நாய்கள், கால்நடைகள், ஆடுகள் மற்றும் கோழிகள் தங்கள் நடத்தையை மாற்றிக் கொள்கின்றன.

சமீபத்தில் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம், தெலுங்கானா மாநிலம் மொய்னாபாத்தில் உள்ள ஒரு ரிசார்ட்டில் டிஜே சத்தம் காரணமா அருகிலுள்ள கோழிப் பண்ணையில் 100-க்கும் மேற்பட்ட கோழிகள் இறந்ததாக புகார் வந்தது.

பலவீனமான கட்டிடங்கள் இடிந்து விழுகின்றன.

அதிர்வு விளைவு காரணமாக கட்டிடங்களும் அதிர்வுறும். இதன் விளைவாக, பலவீனமான கட்டமைப்புகள் இடிந்து விழும் வாய்ப்பு உள்ளது.

டி.ஜே. பயன்படுத்தும் இடங்களில் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

ஹெட்போன் அல்லது நுரையால் ஆனவற்றை பயன்படுத்தலாம். அவை உரத்த ஒலிகளைத் தடுக்கின்றன. அவை 30 டெசிபல் சத்தத்தைக் குறைக்கின்றன.

காது செருகிகளை பயன்படுத்தி முழு காதையும் மறைக்காத ஹெட்போன் சந்தையில் வந்துள்ளன. அவை சத்தத்தை முழுமையாகத் தடுக்காமல் தெளிவான ஒலியை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

டி.ஜே. ஒலிபரப்பும் இடங்களில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

## வாயு தொல்லைக்கு மருந்தாகும் பெருஞ்சீரகம்

ஓட்டல்களில் சாப்பாடோ, பிரியாணியோ சாப்பிட்டு முடித்ததும் பில் தொகை செலுத்தும் இடத்தில் ஒரு கிண்ணத்தில் பெருஞ்சீரகம் வைக்கப்பட்டிருக்கும். அது இனிப்பு கலந்து வெள்ளை நிறத்திலோ அல்லது எதுவும் சேர்க்கப்படாமல் பச்சை நிறத்திலோ காட்சியளிக்கும். அதனை சிறிது எடுத்து மெல்லும் வழக்கத்தை பலரும் பின்பற்றுவார்கள். அவை என்னென்ன நன்மைகளை ஏற்படுத்தும் என்று பார்ப்போம்.

**வாய்க்கு புத்துணர்ச்சி அளிக்கும்**

பெருஞ்சீரகம் இயற்கையாகவே இனிமையான, புத்துணர்ச்சியூட்டும் சுவையை கொண்டது. வாய் துர்நாற்றத்தை எதிர்த்து போராடக்கூடியது. ரசாயன அடிப்படையிலான வாய் புத்துணர்ச்சியூட்டும் பொருட்களை போல் அல்லாமல், பெருஞ்சீரகம் சுவாசத்திற்கு புத்துணர்ச்சியூட்டுவதோடு செரிமானத்திற்கும் உதவும்.

**ஹார்மோன் சம நிலைக்கு உதவும்**

பெருஞ்சீரகத்தில் பைட்டோ ஈஸ்ட்ரோஜன்கள் உள்ளன. அவை ஈஸ்ட்ரோஜனை பிரதிபலிக்கும் தாவர அடிப்படையிலான சேர்மங்கள். குறிப்பாக மாதவிடாய் கோளாறுகள், வயிறு வீக்கம் மற்றும் மனக்குழப்பத்தை கையாளும் பெண்களுக்கு இது உதவியாக இருக்கும்.

**உடல் எடையை நிர்வகிக்கும்**

பெருஞ்சீரகத்தில் நார்ச்சத்து அதிகமாக உள்ளது. இது பசி உணர்வை போக்கி முழுதாகவும், திருப்தியாகவும் உணர வைக்கும். உணவு உட்கொண்ட பிறகு பெருஞ்சீரகத்தை மென்று சாப்பிடுவது தேவையற்ற நொறுக்குத்தீனிகளை சாப்பிடுவதை குறைத்து காலப்போக்கில் உடல் எடையை நிர்வகிக்க உதவும்.

**செரிமானத்தை மேம்படுத்தும்**

அனெத்தோல், பென்சோன் மற்றும் எஸ்ட்ராகோல் போன்ற ஆவியாகும் எண்ணெய்கள் பெருஞ்சீரகத்தில் உள்ளன. அவை செரிமான நொதிகளை தூண்டி, ஊட்டச்சத்துக்களை சிறப்பாக உறிஞ்சுவதற்கும், செரிமானத்தை விரைவுபடுத்துவதற்கும் உதவும். குறிப்பாக அதிகமாக சாப்பிட்டாலோ அல்லது எண்ணெய் நிறைந்த உணவுகளை உட்கொண்டாலோ பெருஞ்சீரகம் மெல்வது நல்ல பலனை தரும்.

**வீக்கம் மற்றும் வாயு தொல்லையை குறைக்கும்**



வயிறு வீக்கம், வாயு தொல்லையை குறைப்பதற்கு பெருஞ்சீரகம் உதவும். அதிலிருக்கும் ஆன்டி-ஸ்பாஸ்மோடிக் பண்புகள் குடலில் உள்ள தசைகளை தளர்த்தவும், பிடிப்புகள் மற்றும் வாயு தொந்தரவை குறைக்கவும் உதவும். உணவு உட்கொண்ட பிறகு பெருஞ்சீரகத்தை மென்று சாப்பிடுவதன் மூலம் அந்த சங்கடமான நிலைமையை தவிர்க்க முடியும்.

**எவ்வளவு உட்கொள்ள வேண்டும்?**

உணவு உட்கொண்ட பிறகு அரை டீஸ்பூன் பெருஞ்சீரகத்தை மென்று சாப்பிடலாம். பெருஞ்சீரகம் ஆரோக்கியத்திற்கு உகந்ததுதான் என்றாலும் ஏதேனும் உடல்நல பிரச்சினைகளை கொண்டிருந்தாலோ, மருந்து, மாத்திரைகள் உட்கொண்டிருந்தாலோ மருத்துவரிடம் ஆலோசனை பெற்றே பெருஞ்சீரகத்தை உணவுக்கு பிறகு மெல்லும் வழக்கத்தை பின்பற்ற வேண்டும்.

**எது நல்லது?**


பச்சை நிறத்தில் காட்சியளிக்கும் பெருஞ்சீரகத்தை உட்கொள்வதே சிறந்தது. சர்க்கரை பாகு கலந்து வெண்மை நிறத்தில் காட்சியளிக்கும் பெருஞ்சீரகமும் செரிமானத்திற்கும், வாய் புத்துணர்ச்சிக்கும் உதவும் என்றாலும் அதிலிருக்கும் இனிப்பு கலோரிகளை அதிகரிக்க செய்யும்.

ரத்தத்தில் சர்க்கரை அளவை அதிகரிக்க வழிவகுக்கும். ஊட்டச்சத்துக்களின் செறிவை நீர்த்து போகச்செய்யும். உடல் பருமன், ரத்த அழுத்தம் உள்ளிட்ட பிரச்சினை இருப்பவர்கள் இனிப்பு பெருஞ்சீரகத்தை தவிர்க்க வேண்டும்.

## உப்பு உடலுக்கு ஆபத்தா?

இயற்கையில் பல்வேறு தனிமங்கள் காணப்படுகின்றன. இவற்றில் சோடியம் என்ற தனிமத்தின் அணுக்கள் இணைந்து சோடியம் என்ற தனிமத்தை உருவாக்குகின்றன, இது ஒரு மென்மையான, வெள்ளை நிற உலோக வகை தனிமம் ஆகும். இது காற்றில் தீவிரமாக எரியும் இயல்பு கொண்டது. அத்துடன் தண்ணீருடன் கலக்கும் போது வெடிக்கும் தன்மை கொண்டது.

குளோரின் அணுக்கள் இணைந்து குளோரின் வாயுவை உருவாக்குகின்றன. இது மஞ்சள்-பச்சை நிறத்தில் காணப்படும் ஒரு வாயு, உலோகங்களை அரிக்கும் தன்மை கொண்டது. மேலும், விலங்குகள், தாவரங்கள் இதனை நுகர்ந்தால் நஞ்சாக மாறும், மிகவும் நச்சுத் தன்மையுடையது.



இயற்கையின் விதியில், சோடியம் என்ற வெடிக்கும் தனிமம், நச்சுத்தன்மை கொண்ட குளோரின் என்ற இரண்டு தனிமங்கள் இணையும் போது, அவை இரண்டும் தங்கள் தீவிர தன்மையை இழந்து மனிதனுக்கு மிகவும் அத்தியாவசியமான ஒரு உப்பை உருவாக்குகின்றன.

அதுவே சோடியம் குளோரைடு எனப்படும் சமையல் உப்பு ஆகும். உணவு தயாரிப்பில் பெருமளவு சமையல் உப்பு பயன்படுத்தப்படுகிறது. காய்கறிகள், மீன், இறைச்சி ஆகியவற்றை பதப்படுத்த உப்பு சேர்க்கப்படுகிறது. கிருமி நாசினியாகவும் பயன்படுத்தப்படுகிறது.

உப்பு பல நேர்மறையான பண்புகளை கொண்டதாக இருந்த போதிலும், அதிக அளவில் சேர்க்கப்படும் உப்பு, கோழிகள், நாய்கள், பூனைகளுக்கு தீங்கு விளைவிக்கும்.

பெரியவர்களுக்கு சோடியம் உப்பு தினசரி உட்கொள்ளல் அளவு 2,300 மி.கி.க்கும் குறைவாகவும், உயர் ரத்த அழுத்தம் உள்ள நபர்களுக்கு ஒரு நாளைக்கு சுமார் 500 மி.கி. என்ற சிறிய அளவு மட்டுமே தேவைப்படுகிறது. அதிக உப்பு உடலுக்கு ஆபத்து என்கின்றனர்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## மாசி தெப்ப திருப்பள்ளியோடம் உற்சவம்



அருள்மிகு ஸ்ரீரங்கம் அரங்கநாத சுவாமி திருக்கோயில் நம்பெருமாள் மாசி தெப்ப திருப்பள்ளியோடம் உற்சவம் முதல் திருநாள் மாலை வெள்ளி ஹம்ஸ வாகனம் திருவீதி புறப்பாடு.

## திருப்புல்லாணி சேர்த்தி சேவை



திருப்புல்லாணி சேர்த்தி சேவை

## அம்மனுக்கு அலங்கார தீபாராதனை



தூத்துக்குடி மேலூர் தெப்பக்குளம் மாரியம்மன் கோயிலில் கும்பாபிஷேக பாலஸ்தாபனத்தை முன்னிட்டு அம்மனுக்கு அலங்கார தீபாராதனை நடைபெற்றது.

## பிறந்தநாள் வாழ்த்து



வடசென்னை கிழக்கு மாவட்ட துணைத்தலைவர் திரு ஃபாருக் பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவித்த திரு டிவி துரைராஜ் முன்னாள் மாவட்ட தலைவர் திரு என் வி ஜெயராமன் முன்னாள் சர்க்கிள் தலைவர் திரு மோகன் குமார் வாழ்த்து தெரிவித்தனர்

# உலக தாய்மொழி தினம் – 2026

இன்று பிப்ரவரி 21 உலக தாய்மொழி தின விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழ் பேசினாலும், கேட்டாலும் இனிமை தரும் மொழியாய் திகழ்வதாலேயே மகாகவி பாரதியார், 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாடியுள்ளார். மொழி நம் பண்பாட்டின் விழி. மொழியில்லாத வாழ்க்கை ஒளியில்லாத வாழ்க்கை போன்றது. அறிதவதற்கும் தெரிவதற்கும் புரிந்து கொள்வதற்கும் காரணமாக அமையும் உயிர் ஊடகமே மொழி ஆகும். அறிவின் வளர்ச்சி தாய்மொழியால் மட்டுமே சாத்தியம். நடைமுறைக் கல்வி, வழிக்காட்டல் மற்றும் கல்வியின் பிரதிபலன் என்பதே இந்த வருடத்திற்கான தொனிப்பொருளாக காணப்படுகின்றது.

1952 இல் இந்த நாளன்று அன்றைய கிழக்கு பாகிஸ்தான் தலைநகர்




டாக்காவில் வங்காள மொழியை ஆட்சி மொழியாக அறிவிக்கக் கோரி நடத்தப்பட்ட போராட்டத்தின் போது உயிர்நீத்த 4 மாணவர்களின் நினைவாக இந்நாள் உலகளாவிய முறையில் மொழி தொடர்பாக நினைவு கூறப்பட்டு சிறப்பு நாளாகக் கொண்டாடப்படுகிறது.

அனைத்துலக அமைப்புகளின் ஆதரவுகள் காரணமாக ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தால் (யுனெசுக்கோ அமைப்பு) 1999ஆம் ஆண்டு பிப்ரவரி 21 ஆம் தேதி நடைபெற்ற பொது மாநாட்டில் இந்நாளை அனைத்துலக தாய்மொழி நாளாக அறிவித்தது. பல்வேறு சமூகங்களின் மொழி, பண்பாட்டுத் தனித் தன்மைகளைப் பேணுவதுடன் அவற்றுக்கிடையிலான ஒற்றுமையையும் உருவாக்கும் எண்ணத்தோடு இந்த நாளை யுனெஸ்க்கோ அறிவித்தது. 2000 ஆம் ஆண்டு முதல் இந்நாளானது உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. உலகில் தற்போது 7000 க்கும் அதிகமான மொழிகள் பயன்படுத்தப்படுவதாகவும், அவற்றில் 50 விதமான மொழிகள் அழிந்து செல்லும் அபாயத்தை எதிர்நோக்கி உள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாய்மொழியாம் தமிழை காப்போம்; அதன் வழி நடப்போம்.

தொகுப்பு: பா. சீனிவாசன், துணைத் தலைவர், வந்தை வட்ட கோட்டை தமிழ்ச் சங்கம்.

## உலகத் தாய்மொழி தின உறுதிமொழி



நாகர்கோவில் கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் அழகுமீனா தலைமையில் உலகத் தாய்மொழி தின உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

## வேளாண் பயிர்கடன்



காஞ்சிபுரத்தில் வேளாண் பயிர்கடன்களை கலெக்டர் கலைச்செல்வி வழங்கினார்.

## தெருமுனை பிரசார கூட்டம்



கடையநல்லூரில் அதிமுக தேர்தல் வாக்குறுதிகளை விளக்கி நடந்த தெருமுனை பிரசார கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் ராஜலட்சுமி,செய்தி தொடர்பாளர் கல்யாணசுந்தரம் பங்கேற்றனர்.

## தேர்தல் வாக்குறுதி



திருவொற்றியூர் சரவணா நகரில் அதிமுக கவுன்சிலர் கார்த்திக், தேர்தல் வாக்குறுதிகளை வீடு வீடாக வழங்கினார்.

## தேர்தல் அதிகாரிகளுடன் ஆலோசனை




தஞ்சை மாவட்டத்தில் பதட்டமான வாக்குச்சாவடிகள் குறித்து கலெக்டர் பிரியங்கா பங்கஜம், நேற்று காவல்துறை அதிகாரிகள் மற்றும் தேர்தல் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

## இந்திய மாணவர் சங்கம், கலெக்டரிடம் மனு



கோவை தொட்டிப்பாளையம் அரசு பள்ளியில் கழிவறையை மாணவர்களை அனுப்பி சுத்தம் செய் யவைத்த தலைமை ஆசிரியரை கைது செய்யக் கோரி இந்திய மாணவர் சங்கம், தீண்டாமை ஒழிப்பு சங்கத்தினர் நேற்று கலெக்டரிடம் மனு அளித்தனர்.

## உலகத் தாய்மொழி நாள் உறுதி மொழி



நீலகிரி கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் லட்சுமி பவ்யா தலைமையில் உலகத் தாய்மொழி நாள் உறுதி மொழி எடுத்தனர்.

## பணி நியமன ஆணை




தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில், பயிற்சியாளர்களாக பணியாற்ற தேர்வாகியுள்ளவர்களுக்கு பணி நியமன ஆணைகளை துணை முதல்வர் உதயநிதி வழங்கினார்.

## உலக தாய்மொழி தின உறுதிமொழி




உலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு தென்காசியில் கலெக்டர் கமல்கிஷோர் தலைமையில் உறுதிமொழியினை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.உடன் எம்.பி.க்கள் ராணி, ராபர்ட்புரூஸ்,எஸ்.பி.மாதவன், மாவட்டவனஅலுவலர் ராஜ்மோகன் உள்ளனர்.

## வடகரை லூர்துமாதா ஆலயத் திறப்பு விழா





கும்பகோணம் வட்டம் வடகரையில்,புதுப்பிக்கப்பட்ட புனித லூர்தன்னை ஆலயத்தை குடந்தை மறைமாவட்ட ஆயர் அவர்கள், புனிதப் படுத்தி திறந்துவைத்த போது, திரளான அருட்தந்தையர்கள் அருட் சகோதரிகள் மற்றும் பொதுநிலையினர் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்கள். செய்தி: குடந்தை பரிபூரணன்.

## விசிக அலுவலகம் திறப்பு



செஞ்சியில் விசிக மாவட்ட செயலாளர் சிவா அலுவலகத்தை, கட்சியின் தலைவர் திருமாவளவன் திறந்து வைத்தார்.

# ரவுசு மணி

பணம் நிம்மதி
தராது என்று
எந்த ஏழையும்
சொன்னதில்லை...
ஆனால்....
நிம்மதி தராத
அந்த பணத்தை
இழக்க எந்த
பணக்காரனும்
தயாராக
இல்லை ..




V. முத்து ராமகிருஷ்ணன்

## காவனூர் அருள்மிகு அங்காளபரமேஸ்வரி திருக்கோயில் மயானக்கொள்ளை மற்றும் பிரம்மோற்சவ பெருவிழா

இராணிப்பேட்டை, பிப்.21:

இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு வட்டம் காவனூர் கிராமத்தில் அருள்பாலித்து வரும் அருள்மிகு அங்காளபரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் கடந்த பிப்ரவரி 15 நாள் மகா சிவராத்திரி கொடியேற்றத்துடன் தொடங்கிய மயானக்கொள்ளை மற்றும் பிரம்மோற்சவம் நடைபெற்று வருகிறது. மயானக்கொள்ளை சூரை விழாவில் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் கலந்துகொண்டனர். அன்றாடம் உற்சவ ரதங்கள் கிராம வீதிகளில் கரகாட்டம்,ஒயிலாட்டம், அம்மன் வேடமிட்டு நடனங்கள் என வாண வேடிக்கையுடன் உலா வருகின்றன. திமிரி பரதாலயா நாட்டியப்பள்ளி மாணவிகளின் பரத நாட்டியம், பட்டிமன்றம், கள்ளக்குறிச்சி ஆடலரசன் கலைக்குழு வினரின் நடன நிகழ்வுகளும் நடைபெற்றன.ஏழாம் நாளான இன்று திருக்கோயில் மூலவர் அம்மனுக்கு வெள்ளிக்கவசம் சாத்துதல் ஆராதனையும் இரவு புஷ்ப மின் அலங்காரத்துடன் அம்மன் தேர் திருவீதி உலா வருகிறது. தாரை தப்பட்டையுடன் கரகாட்டம் மயிலாட்டம் என வாணவேடிக்கையுடன் நடைபெறுகிறது. இன்று பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட சுற்று வட்டார கிராமங்களிலிருந்து பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டு சிறப்பான ஏற்பாடுகளை நிர்வாகிகள் மற்றும்



விழாக் குழுவினர் செய்து வருகிறார்கள். நாளை ஞாயிறு பகல் தேர் பவனி வருகிறது. பத்தாம் நாள் மஞ்சள் நீராட்டு விழாவும் பதினோராம் நாள் ஊஞ்சல் நிகழ்வுடன் அன்னதானம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டு நிறைவடைகிறது.

ஒவ்வொரு ஆண்டும் பக்தர்களின் எண்ணிக்கை பெருகிவருகின்ற காவனூர் அருள்மிகு அங்காள அம்மன் கோவிலுக்கு பெரிய அளவிலான மண்டபம் கட்ட ஏற்கனவே அடிக்கல் பூமி பூஜை நடைபெற்றுள்ளது. மேல்மலையனூருக்கு அடுத்து காவனூர் அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில் பிரசித்தி பெற்று வருவது பக்தகோடிகள் கவனத்தை ஈர்த்துள்ளது.

## அனைத்து துறை அரசு அலுவலர்கள் உறுதிமொழி



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் உலக தாய்மொழி தினத்தையொட்டி கலெக்டர் சிவசவுந்தரவல்லி தலைமையில் அனைத்து துறை அரசு அலுவலர்கள் உறுதிமொழியேற்றனர்.



போளூர் வட்டம் ஏரிக்குப்பம் கிராமத்தில் உள்ள சனீஸ்வரபகவான் கோயில் குடமுழுக்கு விழா நேற்று நடந்தது.

## ஆட்டோ



திருவொற்றியூரில் திமுக மூத்த நிர்வாகி மகன் ஸ்டாலின் பிரபுவுக்கு கவுன்சிலர் கவிகணேசன் ஏற்பாட்டில் ஆட்டோவை துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. வழங்கினார்.

# சுற்றுலா: ஸ்ரீசைலத்தில் அவசியம் பார்க்க வேண்டிய ஐந்து இடங்கள்!

ஆந்திரப் பிரதேசத்தின் அழகிய நல்லமலா மலைகளில் அமைந்துள்ள ஸ்ரீசைலம், தொலைதூரப் பயணிகளை ஈர்க்கும் அமைதியான மற்றும் ஆன்மீகத் தலமாகும். இயற்கை அழகு ஆகியவற்றின் சரியான கலவையை வழங்குகிறது. இங்கே பார்க்க வேண்டிய இடங்கள் பல அவற்றில் சில...



### பாதாள கங்கை

ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுனா கோயிலில் இருந்து 1 கிமீ தொலைவில் அமைந்துள்ள பாதாள கங்கை, கிருஷ்ணா நதியின் உப்பங்கழியில் அமைந்துள்ள புனித தலமாகும். இங்கு புனித நதியில் நீராட பக்தர்கள் குவிகின்றனர். அக்கமஹாதேவி குகைகளுக்கு நிதானமான சவாரி மற்றும் பயணங்களுக்கு படகு சவாரி மையமாக பாதாள கங்கை செயல்படுகிறது. பாதாள கங்கையை அடைய, ஹரிதா ஹோட்டலுக்கு அருகில் உள்ள ஹனுமான் கோயிலில் இருந்து பக்தர்கள் சுமார் 500 படிகள் கீழே இறங்க வேண்டும். மாற்றாக, ஹரிதா ஹோட்டலில் இருந்து ஒரு சாலை இயங்குகிறது, இது ஸ்ரீசைலம் அணையின் உப்பங்கழிகள் மற்றும் சுற்றியுள்ள மலைகளின் பிரமிக்க வைக்கும் காட்சிகளை வழங்குவதால், ஒரு தனித்துவமான மற்றும் இயற்கையான அனுபவத்தை வழங்குகிறது. 14 ஆம் நூற்றாண்டில் ரெட்டி மன்னன் ப்ரோலயா வேமா ரெட்டியால் பாதாள கங்கைக்கு செல்லும் படிக்கட்டு பாதை கட்டப்பட்டது, இது இந்த புனித தளத்திற்கு வரலாற்று முக்கியத்துவத்தை சேர்க்கிறது.

### ஸ்ரீசைலம் வனவிலங்கு சரணாலயம்

பரந்த நிலப்பரப்பில் பரந்து விரிந்து கிடக்கும் ஸ்ரீசைலம் வனவிலங்கு சரணாலயம் இயற்கை ஆர்வலர்களின் புகலிடமாகும். பல்வேறு வகையான விலங்குகள் மற்றும் பறவைகளின் தாயகமான இந்த சரணாலயம் இயற்கையின் மடியில் ஒரு சிலிர்ப்பான வனவிலங்கு அனுபவத்தை வழங்குகிறது. ஸ்ரீசைலம் நகரத்திலிருந்து சுமார் 30 கிமீ தொலைவில் அமைந்துள்ள ஸ்ரீசைலம் புலிகள் காப்பகத்தை சாலை வழியாக எளிதில் அணுகலாம். இது நாகார்ஜுனா சாகரிலிருந்து 60 கி.மீ தொலைவில் உள்ளது. நாகார்ஜுனாசாகர் ஸ்ரீசைலம் வனவிலங்கு சரணாலயத்தைப் பார்வையிட பயணிகளுக்கு வழக்கமான பேருந்து சேவைகள், ஸ்ரீசைலம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுடன் இந்த ரிசர்வ் நல்ல தொடர்பைக் கொண்டுள்ளது. ஸ்ரீசைலம் அருகே 50 கிமீ தொலைவில் உள்ள சிறந்த சுற்றுலாத் தலமாகும்.




### மல்லிகார்ஜுன சுவாமி கோவில்

சிவபெருமானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களில் மல்லிகார்ஜுன சுவாமி கோயிலும் ஒன்றாகும். அதன் கட்டிடக்கலை அற்புதம், ஆன்மீக ஒளி மற்றும் சுற்றியுள்ள மலைகளின் பிரமிக்க வைக்கும் காட்சிகள் பக்தர்கள் மற்றும் கட்டிடக்கலை ஆர்வலர்கள் கண்டிப்பாக பார்க்க வேண்டும். நகரத்தில் உள்ள கோயில்களின் சுவர்கள் மற்றும் தூண்களை அலங்கரிக்கும் நேர்த்தியான சிற்பங்கள் மற்றும் சிற்பங்களைக் கொண்டுள்ளது. இப்பகுதியில் உள்ள பல வசீகரிக்கும் கோவில்களில், நல்லமலா மலைகளில் அமைந்திருக்கும் ஒரு பிரமிக்க வைக்கும் புனிதமான கட்டிடம் உங்கள் வருகையின் போது கவனிக்கப்படக்கூடாது. அதன் அழகும் முக்கியத்துவமும் இந்த நகரத்தில் பார்க்க வேண்டிய இடமாக அமைகிறது.

### அக்கமஹாதேவி குகைகள்

இயற்கை எழில் கொஞ்சும் நல்லமலா மலையில் அமைந்துள்ள அக்கா மகாதேவி குகைகள் கண்கவர் இயற்கை உருவாக்கம். பாதாள கங்கையிலிருந்து படகு சவாரி அனுபவத்தை மேம்படுத்துகிறது, சுற்றியுள்ள இயற்கை அழகில் உங்களை மூழ்கடிக்க பலர் விரும்பினர். நீங்கள் குகைகளுக்குள் ஆழமாகச் செல்லும்போது, இயற்கையாக உருவான சிவலிங்கத்தை நீங்கள் சந்திப்பீர்கள், இது மாயமான சூழலைக் கூட்டுகிறது. குகைகளின் புதிரான புவியியல், பிரமிப்பூட்டும் சூழலுடன் இணைந்து, உண்மையிலேயே வசீகரிக்கும் இடமாக உள்ளது. நகரத்திலிருந்து 10 கிமீ தொலைவில் அமைந்துள்ள இந்த குகைகள் இயற்கை மற்றும் ஆன்மீக ஆர்வலர்கள் கண்டிப்பாக பார்க்க வேண்டிய இடமாகும்.

### ஸ்ரீசைலம் அணை

கிருஷ்ணா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஸ்ரீசைலம் அணை, பொறியியல் துறையின் அற்புதம். இந்த அணை நீர்த்தேக்கத்தின் மூச்சடைக்கக்கூடிய காட்சிகளையும், சுற்றியுள்ள பசுமையான பசுமையையும் வழங்குகிறது, இது இயற்கை ஆர்வலர்கள் மற்றும் புகைப்படக் கலைஞர்களுக்கு ஸ்ரீசைலத்தில் சிறந்த இடமாக அமைகிறது. இந்த அணை 1960 இல் கட்டப்பட்டது, மேலும் இது ஸ்ரீசைலத்தில் ஒரு சிறந்த சுற்றுலா தலமாக மாறியுள்ளது. கிருஷ்ணா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட இந்த அற்புதமான அணை, நகரத்தில் மட்டுமின்றி, நாடு முழுவதிலும் ஒரு அடையாளமாக மாறியுள்ளது.

# வேலைவாய்ப்பு கார்னர்

## பொதுத்துறை நிறுவனத்தில் வேலை

கட்டுமானத் துறையில் மகத்தான பலத்தைக் கொண்ட என்பிசிசி நிறுவனத்தில் தற்போது பொறியியல், கட்டடக்கலை, மனிதவளம் மற்றும் நிதி போன்ற துறைகளில் காலியாக உள்ள பல்வேறு பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கு தகுதியும் ஆர்வமும் உள்ளவர்களிடம் வரும் மார்ச் 6 ஆம் தேதி முதல் ஏப்ரல் 5 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இது குறித்த விவரங்களை பார்ப்போம்...

விளம்பர எண். 01/2026 பணி: General Manager (Engg.) - 1 Manager (Architecture and Planning) 2 Deputy Manager (Company Secretary) 1 Assistant Manager (Corporate Communication) 2 Assistant Manager (Rajbhasha) 1 Assistant Manager (HRM) (E-1) 4 Sr. Project Executive (Civil) 10 Assistant Manager (PHE) 1 Graduate Assistant (IT/ CS /Net Working/ Systems Administration) Junior Engineer (Civil) 20 Junior Engineer (Electrical) 10 Junior Engineer (Mechanical) 5

வயதுவரம்பு: 5.4.2026 தேதியின்படி, மேற்கண்ட பணியிடங்களுக்கு 28 வயதிற்குள் இருக்க வேண்டும். அரசுவிதிகளின்படி வயதுவரம்பில் தளர்வு வழங்கப்படும்.

தகுதி: ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியான தகுதிகள் மற்றும் பணி அனுபவங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதால் அதிகாரப்பூர்வ அறிவிப்பை பார்த்து தெரிந்துகொள்ளவும். பொறியியல் துறையில் சம்மந்தப்பட்ட பிரிவில் பட்டம், இளங்கலைப் பட்டம் பெற்றவர்கள், எம்பிஏ முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தேர்வு செய்யப்படும் முறை: கணினி வழித் தேர்வு, திறன் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பக் கட்டணம்: எஸ்சி, எஸ்டி, மாற்றுத்திறன் பிரிவினரை தவிர்த்து, இதர அனைத்து பிரிவினரும் ரூ.1000 செலுத்த வேண்டும். கட்டணத்தை ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை: https://nbccindia.in என்ற இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 6.3.2026 முதல் 5.4.2026-க்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

# 'சட்டமன்றத் தேர்தலில் நான் போட்டியிடுவேன்' : பிரேமலதா

**சென்னை, பிப்.21:**

பிரேமலதா விஜயகாந்த் கோயம்பேட்டில் உள்ள விஜயகாந்த் நினைவிடத்தில் தேமுதிகவினருடன் உறுதிமொழி ஏற்றதுடன், மக்களுக்கு அன்னதானம் வழங்கினார். இதனையடுத்து அவர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது;-.

திமுக உடன் கூட்டணி என்பது ஒட்டுமொத்த தேமுதிக தொண்டர்களின் விருப்பம். அது தான் என் விருப்பம். அவர்கள் முடிவு தான் என் முடிவு. தி.மு.க.வோடு கூட்டணி முதல் முறை என்றாலும், விஜயகாந்த்தும், கருணாநிதியும் பல ஆண்டுகளாக நட்பில் இருந்தவர்கள். எங்கள் திருமணத்தை நடத்தி வைத்தவர் கலைஞர். பல ஆண்டுகளாக அவர்கள் குடும்பமும் எங்கள் குடும்பமும் நெருக்கமாக பழகியவர்கள். தற்போது விஜயகாந்த்தும் இல்லை, கருணாநிதியும் இல்லை. அவர்கள் ஆசியோடு கூட்டணி உறுதி செய்யப்பட்டுள்ளது. 2016ம் ஆண்டு பழம் நழுவி பாலில் விழப்போகிறது என்று கலைஞர் சொன்னார். இன்று 10 ஆண்டு கழித்து பழம் நழுவி தேன் கலந்த பாலில் விழுந்திருக்கிறது. இந்தியா கூட்டணியில் இணைந்துள்ளோம். 2026 தேர்தலில் இந்த கூட்டணி மகத்தான வெற்றி பெறும். 200க்கும் அதிகமான தொகுதிகள் வெல்லும். எத்தனை தொகுதி, என்னென்ன தொகுதிகள் என்பது பற்றி எல்லாம் பேச எங்கள் தரப்பில் குழு அமைத்து பேச்சு நடத்துவோம். முடிவை ஸ்டாலின் அறிவிப்பார். அது தான் கூட்டணி தர்மம். அனைவரும் தோழமை கட்சிகள் தான். பலரின் கற்பனைகளுக்கும் தே.மு.தி.க. இன்று முற்றுப்புள்ளி வைத்துள்ளது. கூட்டணி ஆட்சி அமைந்தால் மக்களுக்கும் நாட்டுக்கும் நல்லது. அதில் நான் உறுதியாக உள்ளேன். கூட்டணி என்பது தேர்தலுக்கானது. அதேபோல் மக்களுக்கும் நாட்டுக்கும் நல்லது நடக்கும் என நம்புகிறேன். நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் நான் போட்டியிடுகிறேன். 234 தொகுதிகளும் தே.மு.தி.க.வின் களம்தான். இவ்வாறு அவர் கூறினார்.

# போக்குவரத்துக் கழக ஓய்வூதியர்களுக்கான பலன்களை வழங்க ரூ. 2446 கோடி ஒதுக்கீடு

**சென்னை, பிப். 21:**

சட்டசபையில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் ஒரு அறிவிப்பை வெளியிட்டு பேசினார். அப்போது அவர் பேசுகையில், போக்குவரத்து கழகத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு கொரோனா காலம் முதல் ஓய்வூதிய பலன்கள் வழங்க சிரமம் ஏற்பட்ட நிலையில் 2021ம் ஆண்டு முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற நிலையில் பல்வேறு கட்டமாக தமிழக அரசு நிதிகள் வழங்கியது. அதன் தொடர்ச்சியாக 2024 ஏப்ரல் முதல் 2026 மார்ச் வரை ஓய்வு, விருப்ப ஓய்வு பெற்ற 6,867 பேருக்கு ஓய்வூதிய பலன்கள் வழங்க இன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ரூ.2,446 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

கடந்த நான்கு ஆண்டுகளில் இதுவரை மொத்தம் 7,379 கோடி ரூபாய் அரசு சார்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மொத்தம் 24,100 ஓய்வுபெற்ற தொழிலாளர்கள் பலன் அடைந்துள்ளனர். இதற்காக போக்குவரத்து கழக பணியாளர்கள் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# பொருநை நெல்லை புத்தகத் திருவிழா

**நெல்லை, பிப்.21:**

திருநெல்வேலி மாநகராட்சி வர்த்தக மையத்தில் 9-வது பொருநை நெல்லை புத்தகத் திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதன் 9-ஆம் நாள் நிகழ்ச்சியில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கான பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.




இதனைத் தொடர்ந்து கருத்தரங்கம் மற்றும் கவியரங்கம் ஆகிய நிகழ்வுகளும் நடைபெற்றன. பள்ளி மாணவர்களுக்காக நடத்தப்பட்ட சிறுகதை எழுதும் போட்டியை கவிஞர் கோ. கணபதி சுப்ரமணியன் ஒருங்கிணைத்தார். இதில் ஆசிரியர்கள் செல்வராஜ், சிவசெல்வ மாரிமுத்து மற்றும் புனித இன்னாசியார் கல்வியியல் கல்லூரி பேராசிரியை இந்திரா ராஜாமணி ஆகியோர் நடுவர்களாகப் பணியாற்றினர். போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு நெல்லை நகர முதன்மை நூலகர் செல்வ சுப்பிரமணியன் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்.

கல்லூரி மாணவர்களுக்காக "சமூக ஊடகங்கள் வாசிப்பு ஆர்வத்தைக் குறைக்கிறதா? வளர்க்கிறதா?" என்ற தலைப்பில் விவாத அரங்கம் நடைபெற்றது. பேராசிரியர் சௌந்தர மகாதேவன் வரவேற்புரை ஆற்றினார். இந்த விவாதத்தில் 15 மாணவ, மாணவியர் பங்கேற்றுத் தங்கள் கருத்துகளை முன்வைத்தனர். டாக்டர் ஜி. இராமானுஜம், டாக்டர் கோ. சுபாஷ் சந்திரன் மற்றும் ஆசிரியர் தெ. ஆறுமுகம் ஆகியோர் நடுவர்களாகச் செயல்பட்டனர். இப்போட்டியில் பிரேம்குமார் (டி.டி.எம்.என்.எஸ். கல்லூரி) மற்றும் குரு லெட்சுமி (தூய சவேரியார் கல்லூரி) முதலிடத்தைப் பிடித்தனர். இரண்டாம் பரிசினை ஆஷிகா (நேரு நர்சிங் கல்லூரி) மற்றும் கந்த பரமேஸ்வரன் (ஏபிஏ கல்லூரி) வென்றனர். மூன்றாம் பரிசினை சுப்புலெட்சுமி (மானூர் அரசுக் கல்லூரி) மற்றும் இசக்கி பாண்டி (டி.டி.எம்.என்.எஸ். கல்லூரி) ஆகியோர் பெற்றனர். வெற்றி பெற்றவர்களுக்கு 7,000 ரூபாய் மதிப்பிலான புத்தகக் கூப்பன்கள் பரிசாக வழங்கப்பட்டன. ஒருங்கிணைப்பாளர் முத்துலெட்சுமி நன்றி கூறினார்.


கருத்தரங்கம், கவியரங்கம்:

மாலையில் நடைபெற்ற கருத்தரங்கில், ஊரக வளர்ச்சி முகமை ஆணையர் ஆர். ஆனந்தகுமார் முன்னிலை வகித்தார். இதில் கவிஞர் கலாப்பிரியா "வாழ்வை அழகாக்கும் கவிதைகள்" என்ற தலைப்பிலும், எழுத்தாளர் சுனில் கிருஷ்ணன் "தமிழ் அறிவியல் புனைவுகள்" என்ற தலைப்பிலும், எழுத்தாளர் செந்தில் ஜெகந்நாதன் "காவேரியில் இருந்து தாமிரபரணிக்கு" என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினர். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் நாகராஜன் நன்றியுரை வழங்கினார்.

# 10, 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு: நாகை மாவட்டம் மாநிலத்தில் சிறப்பிடம் பெற கலெக்டர் வாழ்த்து

**நாகப்பட்டினம், பிப்.21:**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 10 மற்றும் 12-ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் சிறந்த தேர்ச்சி விகிதத்தைப் பெற்று, மாநில அளவில் மாவட்டம் குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடிக்க வேண்டும் என்று கலெக்டர் ப. ஆகாஷ் வாழ்த்து தெரிவித்துள்ளார்.



இது குறித்து கலெக்டர் ப. ஆகாஷ் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:-

ஆசிரியர் என்பவர் கற்பித்தல் பணியை மட்டும் செய்பவர் அல்ல; அவர் ஒரு உளவியலாளர், ஆலோசகர், ஊக்குவிப்பாளர் மற்றும் சிறந்த வழிகாட்டியாக இருந்து சமூக முன்னேற்றத்திற்காகப் பங்காற்றுபவர். மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைப்பதன் மூலம் ஒரு நாட்டின் எதிர்காலத்தையே ஆசிரியர்கள் உருவாக்குகிறார்கள். அத்தகைய அறப்பணியை அர்ப்பணிப்புடன் செய்து வரும் ஆசிரியப் பெருமக்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுப் பொதுத் தேர்வு நெருங்கும் இக்காலத்தில், ஆசிரியர்கள் மிகுந்த பொறுப்புடனும் கவனமுடனும் செயல்பட்டு, மாணவர்களுக்கு ஏற்படும் தயக்கம் மற்றும் அச்சத்தைப் போக்கி அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். தேர்வு எழுதவுள்ள மாணவ - மாணவியர்கள் தங்களின் பள்ளி வாழ்க்கையில் ஒரு முக்கியத் தருணத்தில் இப்போது உள்ளீர்கள். எனவே, தேர்வு குறித்த தேவையற்ற அச்சமோ அல்லது பதற்றமோ இன்றி தேர்வை எதிர்கொள்ளத் தயாராகுங்கள். நீங்கள் இதுவரை எழுதிய தேர்வுகளைப் போன்றதுதான் இந்த பொதுத் தேர்வும். உங்கள் கவனத்தைச் சிதற விடாமல், படிப்பின் மீது முழு ஈடுபாடு காட்டிப் படியுங்கள். நல்ல மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெற்று, வாழ்வின் உயரிய பண்புகளை அடைய வேண்டும் என்று மாணவ - மாணவியர் மற்றும் ஆசிரியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் தனது வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

# கூடலூரில் பதற்றமான வாக்குச்சாவடி மையங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள்

**நீலகிரி, பிப்.21:**

தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு, நீலகிரி மாவட்டம் கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பந்தலூர் வட்டம் சேரங்கோடு ஊராட்சியில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



சேரங்கோடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி (சேரங்கோடு பஜார்), கன்னம்வயல், மன்னாத்தி வயல், மரடி, கொன்னச்சல், கழிச்சல், அய்யன்கொல்லி, காவயல், மழவன் சேரம்பாடி, கொளப்பள்ளி உள்ளிட்ட வாக்குச்சாவடி மையங்களில் குடிநீர், கழிப்பறை, மின்சாரம், சாய்வுதளம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், பதற்றமான வாக்குச்சாவடி மையங்களில் மேற்கொள்ள வேண்டிய கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். கக்குண்டி கிராமத்தில் மாதிரி வாக்குச்சாவடி மையம் அமைக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அவர் அறிவுறுத்தினார். இந்த ஆய்வில் கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் குணசேகரன், காவல் துணைக் கண்காணிப்பாளர் (தேவாலா) கல்யாணகுமார், பந்தலூர் வட்டாட்சியர் சிராஜுதீன் நிஷா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# திருவாரூரில் சமுதாய வளைகாப்பு

**திருவாரூர், பிப்.21:**

திருவாரூர் விளமல் அருகேயுள்ள பொன்தமிழ் திருமண மண்டபத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகள் சார்பில், சமுதாய வளைகாப்பு நடைபெற்றது.

விழாவிற்கு, திருவாரூர் மாவட்டக் கலெக்டர் வ.மோகனச்சந்திரன் தலைமை வகித்தார். மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி என்.வி.என். சோமு, திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கர்ப்பிணி தாய்மார்களுக்கு பதினோரு வகையான சீர்வரிசைப் பொருட்களை வழங்கினர்.

சமுதாய வளைக்காப்பில் கலெக்டர் மோகனச்சந்திரன் தெரிவித்ததாவது:-

ஒரு குழந்தையின் வளர்ச்சி, கருவாக உருவான நாளிலிருந்தே ஆரம்பமாகிறது. இதனை மனதிற்கொண்டு கர்ப்பிணி பெண்கள், கர்ப்பக் காலத்தில் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் இருந்தால்தான் அவர்களுக்கு பிறக்கும் குழந்தை ஆரோக்கியமான, அறிவான குழந்தையாக இருக்கும். வசதி வாய்ப்பு குறைவால் இந்த நிகழ்ச்சியை நடத்த முடியாத குடும்பத்தில் குழந்தைகள் பாதிக்கப்படக் கூடாது என்ற தொலை நோக்கு பார்வையுடன் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் சிறப்பான திட்டம் இந்த வளைகாப்பு திட்டமாகும்.

11 வகை சீர்வரிசை பொருட்கள்: மேலும் உங்களுக்கு வழங்கப்படும் சத்துமாவு போன்ற ஊட்டச்சத்து நிறைந்துள்ள பொருட்கள் வழங்குவதை நீங்கள் உங்கள் ஆரோக்கியத்திற்காகவும், குழந்தையின் வளர்ச்சியாகவும் நீங்கள் சாப்பிட வேண்டும். அங்கான்வாடி மையங்களுக்கும், சுகாதார மையத்திற்கும் பரிசோதனைக்கு ஒவ்வொரு மாதமும் தவறாது செல்ல வேண்டும். நாம் இருவர், நமக்கு இருவர் என்ற கோட்பாட்டினை கடைபிடிக்க வேண்டுமென மாவட்டக் கலெக்டர் தெரிவித்தார்.

# தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமார் வருகிற 26, 27-ந் தேதிகளில் சென்னை வருகை

**புதுடெல்லி, பிப்.21:**

தமிழக சட்டமன்ற தேர்தல் தொடர்பாக ஆலோசனை நடத்த தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமார் சென்னை வருகிறார். அவர் வருகிற 26, 27-ந் தேதிகளில் தமிழக அரசியல் கட்சியினர் மற்றும் பல்வேறு தரப்பினர்களுடன் ஆலோசனை நடத்துகிறார்.




தமிழக சட்டபைக்கு வரும் ஏப்ரல் மாதத்தில் தேர்தல் நடைபெற இருக்கிறது. அதற்கு முன்பாக வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருந்தப் பணிகள்(எஸ்.ஐ.ஆர்) நடைபெற்று வருகின்றன. கடந்த அக்டோபர் 27ந் தேதி நிலவரப்படி தமிழகத்தில் 6.41 கோடி வாக்காளர்கள் இருந்தனர். சிறப்பு தீவிர திருந்தப் பணிகளை தொடர்ந்து வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் 5.43 கோடி பேர் மட்டுமே இடம் பெற்றிருந்தனர். மொத்தம் 97.37 லட்சம் வாக்களர்களின் பெயர்கள் அதில் நீக்கப்பட்டு இருந்தன.

அவர்களில் இடம் மாறிச் சென்ற வாக்காளர்களை மீண்டும் பட்டியலில் சேர்ப்பதற்கான வாய்ப்பளிக்கப்பட்டு, இறுதிப் பட்டியல் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. வரும் 23-ந் தேதி இறுதிப் பட்டியல் வெளியிடப்படுகிறது. இறுதி வாக்காளர் பட்டியலில் 5 கோடியே 65 லட்சம் என்ற அளவில் வாக்காளர்கள் எண்ணிக்கை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழகத்தில் நடக்கும் எஸ்.ஐ.ஆர். பணிகளை மதிப்பீடு செய்யவும், சட்டமன்ற தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் பற்றியும் ஆய்வு செய்வதற்கும் இந்திய தேர்தல் கமிஷனில் இருந்து துணை கமிஷனர்கள் சென்னைக்கு வந்து கடந்த 12, 13ந் தேதிகளில் ஆய்வுக் கூட்டத்தை நடத்தினர்.

அதன் தொடர்ச்சியாக தமிழகத்தில் நடக்கும் தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமாருக்கு அறிக்கை அனுப்பினர்.

அடுத்ததாக தமிழ்நாட்டில் தேர்தல் தயார் நிலை பணிகளை ஆய்வு செய்வதற்காக தலைமை தேர்தல் கமிஷனர் வருகிற 25-ந்தேதி சென்னை வருகிறார். அவருடன் கமிஷனர்கள் சுகபிர்சிங் சாந்து, விவேக் ஜோஷி வருகின்றனர்.

சென்னையில் உள்ள நட்சத்திர ஓட்டலில் 26 மற்றும் 27-ந்தேதி ஆகிய நாட்கள் ஆலோசனைக் கூட்டத்தை நடத்துகின்றனர். முதலில் தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் மற்றும் சில அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்கின்றனர். அதைத் தொடர்ந்து 26ந் தேதி காலையில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை தனித்தனியாக சந்தித்து ஆலோசனை மேற்கொள்கின்றனர்.

அதைத் தொடர்ந்து அன்று மாலையில் தேர்தல் பணியில் ஈடுபட உள்ள வருமான வரித்துறை உள்ளிட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்கின்றனர்.

# விளையாட்டு செய்திகள்

## இலங்கை அணி அதிர்ச்சி தோல்வி - ஜிம்பாப்வே 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி!

**கொழும்பு, பிப்.21:**

ஐசிசி டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் கொழும்பு நகரில் உள்ள ஆர்.பிரேமதாசா மைதானத்தில் நேற்று 'பி' பிரிவில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் முன்னாள் சாம்பியனான இலங்கை, ஜிம்பாப்வே அணியுடன் விளையாடியது. முதலில் பேட் செய்த இலங்கை அணி 7 விக்கெட்கள் இழப்புக்கு 178 ரன்கள் குவித்தது.

தனது 19-வது அரை சதத்தை அடித்த தொடக்க வீரரான பதும் நிசங்கா 41 பந்துகளில், 8 பவுண்டரிகளுடன் 62 ரன்கள் விளாசினார். குஷால் பெரேரா 22, குஷால் மெண்டிஸ் 14, துனித் வெல்லாலகே 15, கமிந்து மெண்டிஸ் 7, கேப்டன் தசுன் ஷனகா 6 ரன்கள் சேர்த்தனர். இறுதிக்கட்ட ஓவர்களில் மட்டையை சுழற்றிய பவன் ரத்னாயகே 25 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகளுடன் 44 ரன்கள் விளாசினார். அவரது அதிரடி காரணமாக இலங்கை அணியால் வலுவான இலக்கை கொடுக்க முடிந்தது. கடைசி 2 ஓவர்களில் மட்டும் பவன் ரத்னாயகே 30 ரன்களை விளாசியிருந்தார். ஜிம்பாப்வே அணி சார்பில் கிரேம் கிரீமர், பிராடு இவான்ஸ், பிளெசிங் முசாராபானி ஆகியோர் தலா 2 விக்கெட்கள் கைப்பற்றினர்.

ஜிம்பாப்வே அணி 19.3 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 182 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. பிரையன் பென்னட் 48 பந்துகளில், 8 பவுண்டரிகளுடன் 63 ரன்களும், முன்யோங்கா 3 பந்தில், 8 ரன்களும் சேர்த்தனர். 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஜிம்பாப்வே அணிக்கு இது 3-வது வெற்றியாக அமைந்தது.

அந்த அணி லீக் சுற்றில் தோல்வியை சந்திக்காமல் சூப்பர் 8 சுற்று ஆட்டங்களை எதிர்கொள்கிறது. இலங்கை அணிக்கு இது முதல் தோல்வியாக அமைந்தது. சூப்பர் 8 சுற்றுக்கு அந்த அணி ஏற்கெனவே தகுதி பெற்றிருந்தது. இலங்கை அணி லீக் சுற்றை 3 வெற்றி, ஒரு தோல்வியுடன் நிறைவு செய்துள்ளது. சூப்பர் 8 சுற்றில் ஜிம்பாப்வே அணி தனது முதல் ஆட்டத்தில் வரும் 23-ம் தேதி மேற்கு இந்தியத் தீவுகளுடன் மோதுகிறது.

## 2-வது டி20 போட்டியில் இந்திய மகளிர் அணியை வீழ்த்தியது ஆஸ்திரேலியா

**கான்பெர்ரா, பிப்.21:**

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி இருகிறது. இரு அணிகள் இடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட டி20 கிரிக்கெட் தொடரில் சிட்னியில் நடைபெற்ற முதல் போட்டியில் இந்திய மகளிர் அணி 21 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது. இந்நிலையில் 2-வது ஆட்டம் நேற்று கான்பெர்ராவில் நடைபெற்றது. முதலில் பேட் செய்த ஆஸ்திரேலிய மகளிர் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 163 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக தொடக்க வீராங்கனையான ஜார்ஜியா வால் 57 பந்துகளில், ஒரு சிக்ஸர், 11 பவுண்டரிகளுடன் 88 ரன்களும், பெத் மூனி 39 பந்துகளில், 4 பவுண்டரிகளுடன் 46 ரன்களும் விளாசினர். 19 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி மகளிர் 3 ஆட்டங்கள் கொண்ட டி20 தொடரை 1-1 என சமநிலையை அடையச் செய்துள்ளது. கடைசி மற்றும் 3-வது போட்டி இன்று (21-ம் தேதி) அடிலெய்டில் நடைபெறுகிறது.

# என்ஐஏ அதிகாரியாக நடித்து வேலைவாய்ப்பு மோசடி: ஜம்மு-காஷ்மீர் நபர் டில்லியில் கைது

**புதுடெல்லி, பிப்.21:**

தேசிய புலனாய்வு முகமையில் (என்ஐஏ) அதிகாரியாக இருப்பதாகக் கூறி பொருளாதாரத்தில் நலிவடைந்த குடும்பத்தினரிடம் வேலைவாய்ப்பு மோசடி ஈடுபட்டு வந்த ஜம்மு-காஷ்மீரைச் சேர்ந்த நபர் தில்லி செங்கோட்டை அருகே கைதுசெய்யப்பட்டதாக காவல் துறை அதிகாரிகள் வியாழக்கிழமை தெரிவித்தனர்.



கைதுசெய்யப்பட்ட முடாசார் ஜம்மு-காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தைச் சேர்ந்தவர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக அதிகாரிகள் கூறியதாவது: தில்லிசெங்கோட்டை பின்னால் உள்ள தில்லி சாலோ பூங்கா அருகே உள்ள வாகன நிறுத்தத்தில் ஜம்மு-காஷ்மீர் பதிவெண் கொண்ட கார் சந்தேகத்துக்குரிய வகையில் நிறுத்தப்பட்டிருந்தது. ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த தில்லி காவல் துறையினர் காரை பார்வையிட்டனர். அப்போது அதில் முடாசார் என்ற நபரும் ஒரு சிறுவனும் இருப்பதை அதிகாரிகள் கண்டனர்.

இதையடுத்து, அவர்களிடம் போலீஸார் விசாரணை நடத்தினர். அப்போது, அந்த நபர் என்ஐஏ அடையாள அட்டையை காவல் துறையிடம் காண்பித்தார். அந்த அடையாள அட்டை தொடர்பாக காவல் துறையினருக்கு சந்தேகம் எழுந்த நிலையில், விசாரணைக்காக கோட்வாலி காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

வேலைவாங்கித் தருவதாகக் கூறி பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களிடம் அந்த நபர் மோசடி செய்தது வந்தது முதல்கட்ட விசாரணையில் தெரியவந்தது.

சிறுவனுக்கு வேலைவாங்கித் தருவதாகக் கூறி அவருடைய குடும்பத்தினரிடம் முன்பணம் பெற்ற முதாஸ்சார், கடந்த பிப்.12-ஆம் தேதி சிறுவனுடன் ஜம்முவிலிருந்து காரில் தில்லி புறப்பட்டார். கடந்த பிப்.13-ஆம் தேதி நள்ளிரவில் தில்லி வந்த இருவரும் ஜாமா மசூதி அருகே உள்ள விருந்தினர் விடுதியில் தங்கினர். சிறுவனின் வேலைக்காக சிலரை அணுகியிருப்பதாகத் தெரிவித்த அந்த நபர், எந்தவொரு ஆவணங்களையும் வழங்கவில்லை.

தில்லி காவல் துறையின் சிறப்பு பிரிவு, உளவுப் பிரிவு மற்றும் தேசிய புலனாய்வு முகமை ஆகியவை இணைந்து விசாரணை நடத்தியதில் அந்த அடையாள அட்டை போலியானது என்றும் அதுபோன்ற அட்டை வழங்கப்படவில்லை என்பதும் தெரியவந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் என்றனர் அந்த அதிகாரிகள்.

# இந்தியாவில் அரிய புவி காந்த உற்பத்தி நடப்பாண்டில் தொடங்கும் : மத்திய அமைச்சர் ஜி.கிஷண் ரெட்டி

**புதுடெல்லி, பிப்.21:**

இந்தியாவில் அரிய புவி நிரந்தர காந்தம் (ஆர்இபிஎம்) உற்பத்தி நடப்பாண்டில் தொடங்கும் என்று மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் ஜி.கிஷண் ரெட்டி தெரிவித்தார்.

நியோடைமியம், பிரசியோடைமியம் உள்ளிட்ட அரிய புவி தனிமங்களின் கொள்முதலில் மத்திய அரசு தீவிர கவனம் செலுத்தும் நிலையில், இது தொடர்பான சுரங்கப் பகுதிகள் ஏலமிடப்பட்டு வருகின்றன. இந்தச் சூழலில், மத்திய அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

டில்லியில் இந்திய தொழில் மற்றும் வார்த்தக சம்மேளனங்களின் கூட்டமைப்பு (ஃபிக்கி ) மற்றும் மத்திய சுரங்கத் துறை சார்பில் வியாழக்கிழமை கருத்தரங்கு நடைபெற்றது. இதில், மத்திய அமைச்சர் ஜி.கிஷண் ரெட்டி பங்கேற்றுப் பேசியதாவது:

அரிய புவி தனிமங்களின் தேவையில் இறக்குமதியை சார்ந்திருப்பதைக் குறைக்க, 'தற்சார்பு இந்தியா' திட்டத்தின்கீழ் மத்திய அரசு தீவிர முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. அதன்படி, அரிய புவி நிரந்தர காந்த உற்பத்தி நடப்பாண்டிலேயே தொடங்கப்பட உள்ளது. இது, மின்வாகன உற்பத்தி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைகளில் தற்சார்பை உறுதி செய்யும் முக்கிய படிக்கல்லாகும்.

நாட்டில் அரிய கனிமங்கள் பிரித்தெடுப்பு-சுத்திகரிப்பு ஆலைகள் பற்றாக்குறையாக உள்ளன. இது, மிகப் பெரிய சவாலாக உள்ளது. இப்பிரச்னைக்கு தீர்வுகாணும் வகையில், ஆந்திரம், ஒடிஸா, மகாராஷ்டிரம், குஜராத் ஆகிய 4 மாநிலங்களில் ஆலைகள் நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. குஜராத் மற்றும் ஆந்திர அரசுகள் ஏற்கெனவே பணியைத் தொடங்கிவிட்டன. விரைவில் ஒடிஸா, மகாராஷ்டிர மாநில முதல்வர்களை சந்தித்துப் பேசவுள்ளேன்.

அரிய கனிமங்களின் உற்பத்தியில் முழுமையான விநியோகசங்கிலியைக் கட்டமைக்க வேண்டும். இல்லையெனில், சுத்திகரிக்கப்பட்ட அரிய கனிமங்களின் தேவையில் நாம் தொடர்ந்து இறக்குமதியைதான் நம்பியிருக்க வேண்டியிருக்கும் என்றார் ஜி.கிஷண் ரெட்டி.

மின்சார வாகனங்கள், காற்றாலை டர்பைன்கள், மின்னணுப் பொருள்கள், விண்வெளி மற்றும் பாதுகாப்புத் தளவாடங்களின் தயாரிப்பில் முக்கிய அங்கமான அரிய புவி நிரந்தர காந்தங்களை உள்நாட்டில் தயாரிப்பதற்கு உகந்த சூழலை கட்டமைக்க மத்திய அரசு தீவிர நடவடிக்கைமேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக ரூ.7,280 கோடி மதிப்பீட்டிலான திட்டத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

# ஏ.ஐ. பயன்பாட்டுக்கு 5 அம்ச தொலைநோக்குப் பார்வை: டில்லி மாநாட்டில் முன்வைத்தார் பிரதமர் மோடி

**புதுடெல்லி, பிப்.21:**

செயற்கைநுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில்நுட்ப பயன்பாட்டில் மக்களை மையப்படுத்திய அணுகுமுறைக்காக, இந்தியாவின் 5 அம்ச 'மானவ்' தொலைநோக்குப் பார்வையை முன்வைத்து, எடுத்துரைத்தார் பிரதமர் மோடி.



இது தொடர்பாக, தில்லி ஏ.ஐ. தாக்க உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், 'ஏ.ஐ. தொழில்நுட்ப பயன்பாட்டில் தேசிய இறையாண்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய தன்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அந்த வகையில், இந்தியா சார்பில் 'மானவ்' தொலைநோக்குப் பார்வையை முன்வைக்கிறேன். இது, தார்மிக நெறிமுறை, பொறுப்பான நிர்வாகம், தேசிய இறையாண்மை, அனைவருக்குமான அணுகல்-உள்ளடக்கம், சட்டப்பூர்வ பயன்பாடு ஆகிய 5 அம்சங்களை உள்ளடக்கியது' என்றார்.

உச்சிமாநாட்டில் உலகத் தலைவர்களின் முழு அமர்வில் பேசிய பிரதமர், 'இந்தியா கடவுள் புத்தரின் புண்ணிய பூமி. சரியான புரிதலில் இருந்தே சரியான செயல் பிறக்கும் என்பது புத்தரின் போதனையாகும். ஏ.ஐ. தொழில்நுட்ப பயன்பாட்டில் நெறிமுறையற்ற செயல்பாடுகளுக்கு வரம்பில்லாத வாய்ப்புகள் உள்ளன.

எனவே, வெளிப்படையான, தெளிவான பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் விதிமுறைகளுக்கான செயல்திட்டத்தை உருவாக்குவது அவசியம். ஏ.ஐ. நிறுவனங்களுக்கு மிகப் பெரிய பொறுப்பு உள்ளது. தரவு இறையாண்மை மதிக்கப்படுவதுடன், ஏ.ஐ. பயிற்சிக்கு தெளிவான தரவு கட்டமைப்பு வேண்டும்.

தொழில்நுட்பத்தை அதிகாரத்துக்கான கருவியாக அல்லாமல், சேவைக்கான தளமாக பயன்படுத்துவதால், இந்தியாவில் சமீப ஆண்டுகளில் எண்ம பொது உள்கட்டமைப்பு துடிப்பாக மாறியுள்ளது' என்றார்.

தில்லி உச்சி மாநாட்டில் இந்திய நிறுவனங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஏ.ஐ. மாதிரிகள் மற்றும் கைப்பேசி செயலிகளையும் பிரதமர் தனது உரையில் குறிப்பிட்டார்.

# க்ரைம் கார்னர்

## பாகிஸ்தானுக்கு ரகசிய தகவல்கள்: வடமாநில வாலிபர் கைது

**கொச்சி, பிப்.21:**

கேரள மாநிலம் கொச்சி கப்பல் கட்டும் தளத்தில் இருந்து பாகிஸ்தானுக்கு 'வாட்ஸ்-அப்' மூலம் ரகசிய தகவல்கள் அனுப்பியதாக கடந்த மாதம் வடமா நிலத்தைச் சேர்ந்த 3 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் சிலரை போலீசார் தேடி வந்தனர்.

இந்த நிலையில் இந்த வழக்கில் தொடர்புடைய ஒருவர் இடுக்கி மாவட்டம் மறையூர் பகுதியில் பதுங்கி இருப்பதாக கர்நாடக மாநிலம் உடுப்பி உளவுப்பிரிவு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து நேற்று மறையூர் வந்த கர்நாடக போலீசார், உள்ளூர் போலீசாரின் உதவியுடன் விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது அந்த பகுதியில் கட்டுமான தொழிலாளியாக வேலை பார்த்து வந்த வடமாநில வாலிபர் ஒருவரை பிடித்து விசாரித்தனர். இதில் அவர், மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த அலிப் இஸ்லாம் (வயது 21) என்பதும், அவர் கொச்சி கப்பல் கட்டும் தளத்தில் வேலை பார்த்து வந்ததும், அப் போது அவர் பாகிஸ்தானுக்கு ரகசிய தகவல்களை அனுப்பி உள்ளார் என்பதும் தெரியவந்தது.

இதையடுத்து போலீசார் அவரை கைது செய்தனர். இது குறித்து போலீசார் கூறுகையில், அலிப் இஸ்லாம் கடந்த ஒரு மாதமாக மறையூரில் வாடகைக்கு வீடு எடுத்து தங்கி கட்டுமான பணியில் ஈடுபட்டு வந்துள்ளார். மேலும் இவர் இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட 4-வது நபர் என்றனர்.

## 'பறக்கும் முத்தம்'...9 ஆண்டுகள் கழித்து 3 ஆண்டு சிறை - கோர்ட்டு அதிரடி

**மும்பை, பிப்.21:**

16 வயது சிறுமிக்கு 'பறக்கும் முத்தம்' கொடுத்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து மும்பை சிறப்பு கோர்ட்டு தீர்ப்பு வழங்கியுள்ளது. 2017-ம் ஆண்டு நடைபெற்ற இந்த சம்பவத்திற்கு 9 ஆண்டுகள் கழித்து தற்போது தீர்ப்பு வெளியாகியுள்ளது. தீர்ப்பில், 'பறக்கும் முத்தம்' போன்ற செயல் வெளிப்படையாக பாதிப்பில்லாதது போல தோன்றினாலும், அது பெண்ணின் கண்ணியத்தை மீறும் பாலியல் ரீதியான செயல் என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டது. சிறுமியின் மனநிலைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் நடந்ததால், இது தண்டனைக்குரிய குற்றம் என கூறியது.

இதையடுத்து குற்றம்சாட்டப்பட்டவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. குற்றம்சாட்டப்பட்டவருக்கு தற்போது திருமணமாகி ஒரு கைக்குழந்தை உள்ளது குறிப்பிடத்தக்கது.

## வருமானத்துக்கு அதிகமாக 372% சொத்து சேர்த்த பெண் காவல் ஆய்வாளர்

**சென்னை, பிப்.21:**

ராஜலட்சுமி என்பவர் சென்னை காவல் துறை பாலியல் தடுப்புப் பிரிவில்(1) ஆய்வாளராக பணிபுரிகிறார். இவர் திரு மங்கலம், வெல் கம் காலனியில் குடும்பத்துடன் வசிக்கிறார். இவர் பணியின்போது தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி முறைகேடாக அதிகளவில் பணம் சம்பாதித்து வருவதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதை அடிப்படையாக வைத்து கடந்த 13-ம் தேதி இவரது வீட்டில் லஞ்ச ஒழிப்புப் பிரிவு போலீஸார் சோதனை நடத்தினர்.

முடிவில் பல்வேறு சொத்துகள் தொடர்புடைய முக்கிய ஆவணங்களை லஞ்ச ஒழிப்பு போலீஸார் பறிமுதல் செய்து கையோடு எடுத்துச் சென்றனர். இதன் தொடர்ச்சியாக வருமானத்தை விட 372% அதிக சொத்து சேர்த்ததாக ஆய்வாளர் ராஜலட்சுமி மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

அவர் வருமானத்தை விட ஊழல் மற்றும் சட்ட விரோத வழிகளில் ரூ.5.42 கோடிக்கு சொத்துகளை தனது பெயரிலும், குடும்ப உறுப்பினர்களின் பெயரிலும் வாங்கியுள்ளார்.

அதாவது வருமானத்தை விட 372% அதிகளவில் சொத்து சேர்த்துள்ளார். இதையடுத்து, அவர் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# வணிகச் செய்திகள்

## "ஏஐ மலிவாக கிடைக்க ரூ.10 லட்சம் கோடி முதலீடு செய்யப்படும்" - முகேஷ் அம்பானி

**புதுடெல்லி, பிப்.21:**



டெல்லி ஏஐ உச்சி மாநாட்டில் நேற்று பங்கேற்ற ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி பேசியதாவது: சில ஆண்டுகளுக்கு முன்பு இந்திய மக்களை இணையதள யுகத்துடன் எங்கள் ஜியோ நிறுவனம் இணைத்தது.

அதுபோல இப்போது இந்தியாவை செயற்கை நுண்ணறிவு (ஏஐ) யுகத்துடன் ஜியோ இணைக்கும். செல்போன் மற்றும் இணைய தரவு கட்டணங்களை நாங்கள் எந்த அளவுக்கு குறைத்தோமோ அதுபோல செயற்கை நுண் ணறிவுத் திறனுக்கான செலவையும் வெகுவாக குறைப்போம்.

இதற்காக ரிலையன்ஸ் ஜியோ நிறுவனம் அடுத்த 7 ஆண்டுகளில் ரூ.10 லட்சம் கோடியை முதலீடு செய்யும். இது வெறும் ஊக முதலீடு அல்ல. தேசத்தை கட்டியெழுப்பும் மூலதனம். இந்தியாவின் ஏஐ மாற்றத்தில் ஜியோ இன்னும் பெரிய பங்கை வகிக்கும்.

இணைய வசதியை எப்படி தரம், நம்பகத்தன்மை மற்றும் மிகக் குறைந்த விலையில் மாற்றிய அமைத்தோமோ, அதேபோல இதையும் ஜியோ செய்யும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை; ஆனால் தேர்தலுக்கு முன் பணம்: பிரியங்கா காந்தி

**புதுடெல்லி, பிப்.21:**



பாஜக ஆளும் மாநிலங்களில் தேர்தலுக்கு முன்பு பெண்களுக்கு பணம் கொடுப்பதாக காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழ்நாடு, கேரளம், அஸ்ஸாம் உள்ளிட்ட மாநில சட்டப்பேரவைகளுக்குவிரைவில் தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப்படவுள்ளன.

அஸ்ஸாம் மாநிலத்தில் பாஜக கூட்டணிக்கும், காங்கிரஸ் கூட்டணிக்கும் நேரடிப் போட்டி நிலவுகிறது. இரு கட்சிகளின் தலைவர்களும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், அஸ்ஸாமுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் பிரியங்கா காந்தி, குவஹாத்தியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு வியாழக்கிழமை உரையாற்றினார்.

அவர் பேசியதாவது:

“அஸ்ஸாமில் இளைஞர்களுக்கு வேலை கிடைக்கிறதா? பாஜக அரசு எங்கெல்லாம் இருக்கிறதோ, அங்கெல்லாம் தேர்தலுக்கு முன்பாக பெண்களுக்கு பணம் கொடுக்கிறார்கள். ஆனால், ஆட்சியில் இருந்த 5 ஆண்டுகளில் பெண்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டதா? குற்றம் அதிகரித்து வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் எத்தனை பெண்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டது? எத்தனை பெண்கள் அவர்களின் சொந்த கால்களில் நிற்க உதவி வழங்கப்பட்டது?

மக்களின் கைகளில் உள்ள அனைத்து செல்வங்களும் இந்த மாநிலத்தை ஆளும் ஒரு குடும்பத்தின் கைகளுக்குச் செல்கின்றன” என்று தெரிவித்தார்.

முன்னதாக அஸ்ஸாம் பாஜக அரசுக்கு எதிராக 20 குற்றச்சாட்டுகள் அடங்கிய “மக்கள் குற்றப்பத்திரிகை”யை பிரியங்கா காந்தி வெளியிட்டார்.

அஸ்ஸாம் மக்களின் பூர்வீக நிலங்களை பெரு நிறுவனங்களுக்கு அளித்ததாகவும், பொருளாதார முறைகேட்டில் ஈடுபட்டதாகவும் முதல்வர் ஹிமந்த பிஸ்வ சர்மாவுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## டிவி சப்தத்தை குறைக்க சொன்ன கணவரைக் கொன்ற மனைவி!

**குண்டூர், பிப்.21:**

ஆந்திரத்தில் டிவி சப்தத்தை குறைக்கச் சொன்னதால் ஏற்பட்ட வாக்குவாதத்தில், கணவரை கத்தியால் குத்தி மனைவி கொலை செய்துள்ளார். ஆந்திரப் பிரதேச மாநிலம் குண்டூர் மாவட்டத்தில் உள்ள டிட்கோ வீட்டுவசதி காலனியில் ஷேக் அகமது (வயது 27) மற்றும் அவரது மனைவி கிராந்தி வசித்து வந்தனர். ஏசி மெக்கானிக்காக பணிபுரியும் ஷேக் அகமது வியாழக்கிழமை இரவு வீடு திரும்பிய நிலையில், அவரது மனைவி டிவியை அதிக சப்தத்துடன் பார்த்துக் கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து, டிவியின் சப்தத்தை குறைக்குமாறு ஷேக் அகமது கூறிய நிலையில், அவரது மனைவியுடன் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

வாக்குவாதம் முற்றிய நிலையில், ஷேக் அகமதுவை அவரது மனைவி கிராந்தி கத்தியால் குத்தியுள்ளார். இதில், சம்பவ இடத்திலேயே ஷேக் அகமது உயிரிழந்துள்ளார்.

தொடர்ந்து, காவல்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில், சம்பவ இடத்துக்கு விரைந்த போலீசார் ஷேக் அகமது உடலைக் கைப்பற்றி உடற்கூராய்வுக்காக அனுப்பி வைத்துள்ளனர். மேலும், கிராந்தியைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ‘சமூக ஊடகங்களில் சிறாரைத் தடுப்பது சவாலானது’ : மார்க் ஸக்கர்பெர்க்

**புதுடெல்லி, பிப்.21:**

பயனர்கள் தங்களின் உண்மையான வயதை மறைத்து, தவறான தகவல்களை வழங்குவதே இதற்கு முக்கியக் காரணம் என்றும், இதைத் தொழில்நுட்ப ரீதியாக முழுமையாகக் தடுப்பது கடினம் என்றும் மெட்டா நிறுவனத்தின் சிஇஓ மார்க் ஸக்கர்பெர்க் விளக்கமளித்தார்.

தற்போது 20 வயதாகும் இளம்பெண் ஒருவர், தான் சிறுமியாக இருந்தபோது சமூக ஊடகங்களைப் பயன்படுத்தியதால் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளானதாகக் கூறி, மெட்டா மற்றும் யூடியூப் நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்திருந்தார். கலிஃபோர்னியாவின் லாஸ் ஏஞ்சலீஸ் நீதிமன்றத்தில் புதன்கிழமை (உள்ளூர் நேரப்படி) நடைபெற்ற இந்த வழக்கு விசாரணையில் மார்க் ஸக்கர்பெர்க் நேரில் ஆஜரானார். அப்போது, பாதிக்கப்பட்ட பெண் 9 வயதிலேயே இன்ஸ்டாகிராம் கணக்கு வைத்திருந்தது குறித்து வழக்குரைஞர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த மார்க் ஸக்கர்பெர்க், ‘எங்கள் தளத்தில் சிறார்களைக் கண்டறிய ஏற்கெனவே பல மென்பொருள் கருவிகளைப் பயன்படுத்தி வருகிறோம். 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு ‘டீன் அக்கவுன்ட்ஸ்’ போன்ற கூடுதல் பாதுகாப்புக் கட்டுப்பாடுகளை இன்ஸ்டாகிராம் தீவிரப்படுத்தியுள்ளது. இருப்பினும், ஆப்பிள் மற்றும் கூகுள் நிறுவனங்கள் தங்களின் ஆப்-ஸ்டோர்களிலேயே வயது சரிபார்ப்பு முறையைக் கொண்டு வருவதுதான் இதற்கு நிரந்தர தீர்வாக இருக்கும்’ என வாதிட்டார். ‘வருங்கால வெற்றிக்காக இளம் பயனர்களைத் தக்கவைக்க வேண்டும்’ என்ற மெட்டா நிறுவனத்தின் ரகசிய மின்னஞ்சல்களைச் சுட்டிக்காட்டிய வழக்குரைஞர்கள், லாபத்துக்காகவே பதின்ம வயதினரை நிறுவனம் குறிவைப்பதாகக் குற்றஞ்சாட்டினர்.

இதை மறுத்த மார்க் ஸக்கர்பெர்க், ‘பதின்ம வயதினரிடம் செலவு செய்யப் பணம் இருக்காது என்பதால், அவர்கள் எங்களுக்குப் பெரிய வணிக இலக்கு அல்ல. எங்கள் மொத்த வருமானத்தில் அவர்களால் வருவது வெறும் 1 சதவீதம் மட்டுமே’ என்று குறிப்பிட்டார். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு, இதேபோன்ற புகாரில் அமெரிக்க நாடாளுமன்றக் குழுவின் விசாரணையை மார்க் ஸக்கர்பெர்க் எதிர்கொண்டது நினைவுகூரத்தக்கது.

## உ.பி.யில் 2027 தேர்தலில் ஒவைசி கட்சி 200 தொகுதிகளில் போட்டி

**புதுடெல்லி, பிப்.21:**



வரும் 2027ம் ஆண்டு உ.பி. சட்டப்பேரவை தேர்தலில் ஒவைசி கட்சி 200 தொகுதிகளில் போட்டியிடத் திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது. இதன் காரணமாக, சமாஜ்வாதி, காங்கிரஸுடன் ஆளும் பாஜகவும் வாக்குகளை இழக்கும் அபாயம் உள்ளது.

ஏஐஎம்ஐஎம் கட்சியின் தேசியத் தலைவரும் ஹைதராபாத் எம்.பி.யுமான அசதுதீன் ஒவைசியின் செயல்பாடுகள், உ.பி. அரசியல் கட்சிகளிடையே பதற்றத்தை தூண்டியுள்ளது. இவர் எத்தனை தொகுதிகளில் போட்டியிட்டாலும் அவற்றில் சிறுபான்மையினர் வாக்குகளை பறித்து விடும் அபாயம் அக்கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இவற்றில் காங்கிரஸ் கட்சி மிகப்பெரிய கவலையில் இருப்பதாக தெரிகிறது.

முஸ்லிம் வாக்குகளின் பிளவால் ஏற்கெனவே பலவீனமான தனது சிறுபான்மையினர் ஆதரவு தளத்தை இது மேலும் குறைக்கக்கூடும் என காங்கிரஸ் அஞ்சுகிறது.

2022 சட்டப்பேரவை தேர்தலில் கூட, காங்கிரஸ் கட்சி முஸ்லிம் வாக்குகளில் குறிப்பிடத்தக்க பங்கைப் பெறவில்லை. எனவே உ.பி.யில் ஏஐஎம்ஐஎம் போட்டியால், காங்கிரஸுக்கான வாக்குகள் மேலும் குறையும் வாய்ப்புகள் உள்ளன. முக்கிய எதிர்க்கட்சியான சமாஜ்வாதியின் நிலைமை சற்று வித்தியாசமாக உள்ளது. 2022 தேர்தலில் சுமார் 79 முதல் 83% முஸ்லிம் வாக்குகளை அக்கட்சி பெற்றுள்ளது. 2024 மக்களவைத் தேர்தலில் சமாஜ்வாதி வாய்ப்பளித்த 4 முஸ்லிம் வேட்பாளர்களும் வெற்றி பெற்றனர். உ.பி.யில் ஏஐஎம்ஐஎம் கட்சியின் செல்வாக்கு வளர்ந்தாலும் தங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் வலுவானக் கூட்டணியால் சிறுபான்மையினர் வாக்குகளை ஓரளவு பாதுகாக்கலாம் என சமாஜ்வாதி நம்புகிறது.

## இந்தியப் பயணத்தை நிறைவு செய்து புறப்பட்டார் பிரான்ஸ் அதிபர்!

**புதுடெல்லி, பிப்.21:**



மும்பையைத் தொடர்ந்து, தில்லி சென்ற பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான் தனது இந்தியப் பயணத்தை நிறைவு செய்துள்ளார்.

தில்லியில் நடைபெறும் செய்யறிவு உச்சி மாநாட்டில் பங்கேற்க மத்திய அரசின் அழைப்பில் பேரில், பிரேசில், ஸ்பெயின், கஜகஸ்தான் உள்ளிட்ட ஏராளமான நாடுகளின் தலைவர்கள் இந்தியா வந்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து, பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான் மற்றும் அவரின் மனைவி பிரிஜிட் மேக்ரான் ஆகியோர் கடந்த செவ்வாய்க்கிழமை (பிப். 17) மும்பை வந்தடைந்தனர்.

மும்பையில், பிரான்ஸ் அதிபர் மேக்ரான் இந்தியாவுடனான உறவுகளை மேம்படுத்துவது குறித்து பிரதமர் மோடியுடன் பேச்சுவார்த்தைகளைநடத்தினார். இந்தச் சந்திப்பில், இருநாடுகளுக்கு இடையிலான முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இதையடுத்து, அதிபர் மேக்ரான் அவரது மனைவியுடன் புகழ்பெற்ற வரலாற்று சின்னமான சத்ரபதி சிவாஜி ரயில் நிலையத்தை செவ்வாய்க்கிழமை இரவு நேரில் பார்வையிட்டார்.

பின்னர், மும்பையிலிருந்து விமானம் மூலம் புதன்கிழமை தில்லி வந்தடைந்த அதிபர் மேக்ரான் நடைபெற்ற செய்யறிவு உச்சி மாநாட்டில் கலந்துகொண்டார்.

மேலும், மாநாட்டின் ஒருபகுதியாக பிரதமர் மோடியுடன் அவர் பேச்சுவார்த்தைகளை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கடந்த பிப்.17 ஆம் தேதி முதலான தங்களது இந்தியப் பயணத்தை நிறைவு செய்த பிரான்ஸ் அதிபர் மேக்ரான் மற்றும் அவரின் மனைவி பிரிஜிட் ஆகியோர் இன்று மாலை பிரான்ஸ் புறப்பட்டுச் சென்றனர்.

அவர்களை மத்திய வெளியுறவு இணையமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் நேரில் சென்று வழியனுப்பினார்.

## சபரிமலை கோயிலில் வழங்கப்படும் பிரசாத நடைமுறைகளை நிர்வகிப்பதில் குறைபாடுகள் : கேரள உயர் நீதிமன்றம் அதிருப்தி

**திருவனந்தபுரம், பிப்.21:**

சபரிமலை ஐயப்பன் கோயிலில் வழங்கப்படும் பிரசாத நடைமுறைகளைக் கண்காணிப்பது, நிர்வகிப்பது, கணக்கெடுப்பது உள்ளிட்டவற்றில் பெரும் குறைபாடுகள் நிலவுவதாக கேரள உயா நீதிமன்றம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

சபரிமலை ஐயப்பன் கோயிலில் பக்தாகளுக்குப் பிரசாதமாக அப்பம், நெய், அரவணைப் பாயசம், விபூதி, குங்குமம் உள்ளிட்டவை குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. இதில் மண்டல பூஜையின்போது நடந்த நெய் விற்பனையில் முறைகேடுகள் நடந்ததாக திருவிதாங்கூா தேவஸ்வ கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அதிகாரி அளித்த அறிக்கையின்படி, கேரள உயா நீதிமன்றம் தாமாக வழக்கெடுத்து விசாரித்து வருகிறது.

கடந்த ஜனவரி மாதம் 13-ஆம் தேதி நடைபெற்ற விசாரணையின்போது, நெய் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் தவறாக கையாளப்படுவது குறித்து உயா நீதிமன்றம் அதிர்ச்சி தெரிவித்திருந்தது. மேலும், இதுகுறித்து விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யும்படி, சிறப்பு புலனாய்வுக் குழுவுக்கு உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில் இந்த வழக்கு கேரள உயா நீதிமன்றத்தில் நீதிபதிகள் ராஜா விஜயராகவன், கே.வி.ஜெயகுமாா ஆகியோரைக் கொண்ட அமா்வு முன்பு வியாழக்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது சிறப்பு புலனாய்வுக் குழுவின் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. மேலும் சிறப்பு புலனாய்வுக் குழு தரப்பில், இந்த விவகாரம் தொடாபாக பிஎன்எஸ் சட்டம், ஊழல் தடுப்பு சட்ட பிரிவுகளின்கீழ் கோயில் சிறப்பு அதிகாரிகள் உள்ளிட்ட 30 போ மீது வழக்குப்பதிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இதைக் கேட்ட நீதிபதிகள், முழு விசாரணையை 45 நாள்களுக்குள் முடிக்கும்படி சிறப்பு புலனாய்வுக் குழுவினரை கேட்டுக் கொண்டனா. இதையடுத்து, சிறப்பு புலனாய்வுக் குழுவினரின் அறிக்கையைப் பரிசீலித்துவிட்டு நீதிபதிகள் கூறியதாவது: பிரசாத விற்பனை நடைமுறையில் அமைப்பு ரீதியில் மிகப் பெரிய குறைபாடுகள் இருப்பது தெரிய வந்துள்ளது. இந்தக் குறைபாடுகளுக்கு திருவிதாங்கூா தேவஸ்வம் வாரியம் விரைந்து தீா்வு காண வேண்டும். இது தனிப்பட்ட முறைகேடுகள் ஆகாது. பிரசாத நடைமுறை, கண்காணிப்பு, இருப்பு கணக்கெடுத்தல், நிதிக் கட்டுப்பாடு ஆகியவற்றில் உள்ள அமைப்பு ரீதியிலான குறைபாடுகளையே இது காட்டுகிறது. ஆவணங்களைக் கையாள்வது, பிரசாதங்களை விற்ன் மூலம் கிடைத்த வருமானத்தைக் கணக்கிடுவது சாதாரணமாகவும், அஜாக்கிரதையாகவும் கையாளப்பட்டிருப்பது அதிா்ச்சி அளிக்கிறது. இதை ஒருபோதும் ஏற்க முடியாது. பிரசாத விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்தை தகணக்குவரம்புக்குள் கொண்டு வரப்படுவதையும், நிதி மற்றும் நிா்வாக முறையில் வெளிப்படைத்தன்மை இருப்பதையும் திருவிதாங்கூா தேவஸ்வம் வாரியம் உறுதி செய்ய வேண்டும். இந்த வழக்கில் உயா நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளை செயல்படுத்த எடுக்க நடவடிக்கைகள் குறித்து விரிவான திட்ட அறிக்கையையும், அதுதொடாபான கால வரையறையையும் திருவிதாங்கூா தேவஸ்வம் வாரியம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனா. மேலும் அடுத்த விசாரணையை இம்மாதம் 27-ஆம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்தி வைத்தனா.

## ‘முன்னாள் முதல்வர் ஜெகன்மோகன் ஆட்சியில் அன்னபிரசாதம் தரம் இல்லை’

**திருமலை, பிப்.21:**

திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் பி.ஆர்.நாயுடு திருமலையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஆந்திர முன்னாள் முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி ஆட்சியில் லட்டு பிரசாதம் தயாரிப்பதற்கான நெய்யில் மட்டும் கலப்படம் நடக்கவில்லை. அன்னதானப் பொருட்கள் கூட தரமாக இருந்ததில்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு லட்டு பிரசாதத்தின் தரம் மட்டுமல்ல, அன்னபிரசாதத்தின் தரமும் பல மடங்கு அதிகரித்துள்ளது.

பக்தர்களும் இதனை பல இடங்களில் பதிவு செய்து வருகின்றனர். ஆனால் தேவையில்லாமல் முதல்வர் சந்திரபாபு நாயுடு குடும்ப பால் உற்பத்தி நிறுவனங்கள் மீது ஜெகன் கட்சியினர் வீண் புரளி கிளப்பி வருகின்றனர். அவர்களுக்கு நெய் எது, பாலாடை கட்டி எது என்று கூட தெரியவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## 20,000 ஆசிரியர்கள் பணி நிரந்தரம்!

**கோட்டயம், பிப்.21:**

கேரளாவில் ஆளும் இடதுசாரி ஜனநாயக முன்னணியில் அங்கம் வகிக்கும் கேரள காங்கிரஸ் (எம்) தலைவர் ஜோஸ் கே.மாணி செய்தியாளர்களிடம் கூறியதாவது: அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் சுமார் 20,000 ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என அரசு அறிவித்துள்ளது. குறிப்பாக, உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளின் இறுதித் தீர்ப்புக்கு உட்பட்டு, இந்த பணி நிரந்தர நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படும் என அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது” என்றார்.

இதுகுறித்து கேரள கல்வி அமைச்சர் வி.சிவன் குட்டி நேற்று கூறும்போது, “மாற்றுத் திறனாளிகளுக்கான இடஒதுக்கீடு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் ஆசிரியர் நியமன ஒப்புதல் தொடர்பான நீண்ட கால சட்டச் சிக்கல்களைத் தீர்க்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது” என்றார்.

## ராஜஸ்தானில் 8 நீதிபதிகள் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம்

**புதுடெல்லி, பிப்.21:**

ராஜஸ்தான் மாநில நீதிமன்றங்களில் பணி நேரத்தில் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையை மேற்கொள்ளாமல் தனது அறையில் அமர்ந்திருந்த 8 நீதிபதிகள் காத்திருப்போர் பட்டிலுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மாநில உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி சஞ்சீவ் பிரகாஷ் சர்மா, உயர்நீதிமன்ற வளாகத்தில் பழைய கட்டடத்தில் அமைந்துள்ள நீதிமன்றங்கள் மற்றும் அருகிலுள்ள சில மாவட்ட நீதிமன்றங்களில் நடத்திய திடீர் ஆய்வுக்குப் பிறகு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. உயர்நீதிமன்ற பதிவாளர் இதுதொடர்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளார். அதில், ‘நிர்வாகக் காரணங்களுக்காக 8 நீதிபதிகள் உடனடியாக காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்படுகின்றனர்’ என்று தெரிவிக்கப்பட்டது. வேறு காரணங்கள் எதுவும் அதில் குறிப்பிடப்படவில்லை.

## அரிய புவி காந்த உற்பத்தி நடப்பாண்டில் தொடங்கும் : மத்திய அமைச்சர்

**புதுடெல்லி, பிப்.21:**

நியோடைமியம், பிரசியோடைமியம் உள்ளிட்ட அரிய புவி தனிமங்களின் கொள்முதலில் மத்திய அரசு தீவிர கவனம் செலுத்தும் நிலையில், இது தொடர்பான சுரங்கப் பகுதிகள் ஏலமிடப்பட்டு வருகின்றன. இந்தச் சூழலில், மத்திய அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

டில்லியில் இந்திய தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனங்களின் கூட்டமைப்பு (ஃபிக்கி) மற்றும் மத்திய சுரங்கத் துறை சார்பில் வியாழக்கிழமை கருத்தரங்கு நடைபெற்றது. இதில், மத்திய அமைச்சர் ஜி.கிஷண் ரெட்டி பங்கேற்றுப் பேசியதாவது:

அரிய புவி தனிமங்களின் தேவையில் இறக்குமதியை சார்ந்திருப்பதைக் குறைக்க, ‘தற்சார்பு இந்தியா’ திட்டத்தின்கீழ் மத்திய அரசு தீவிர முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. அதன்படி, அரிய புவி நிரந்தர காந்த உற்பத்தி நடப்பாண்டிலேயே தொடங்கப்பட உள்ளது. இது, மின்வாகன உற்பத்தி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைகளில் தற்சார்பை உறுதி செய்யும் முக்கிய படிக்கல்லாகும். அரிய கனிமங்களின் உற்பத்தியில் முழுமையான விநியோக சங்கிலியைக் கட்டமைக்க வேண்டும். இல்லையெனில், சுத்திகரிக்கப்பட்ட அரிய கனிமங்களின் தேவையில் நாம் தொடர்ந்து இறக்குமதியைதான் நம்பியிருக்க வேண்டியிருக்கும் என்றார் ஜி.கிஷண் ரெட்டி.

## கிரிக்கெட் மைதானத்தில் புகுந்த தேனீக்கள்: நடுவர் உயிரிழப்பு; விளையாட்டு வீரர்கள் படுகாயம்

**உன்னாவ், பிப்.21:**

உத்தர பிரதேச மாநிலம் உன்னாவ் மாவட்டத்தில் உள்ள கிரிக்கெட் மைதானத்துக்குள் தேனீக்கள் கூட்டம் புகுந்து தாக்கியதில் படுகாயமடைந்த நடுவர் உயிரிழந்தார். கிரிக்கெட் வீரர்கள் படுகாயமடைந்தனர்.

இதுகுறித்து போலீஸ் அதிகாரிகள் கூறியதாவது:

உன்னாவ் மாவட்டத்தில் உள்ள மைதானத்தில் கான்பூர் கிரிக்கெட் சங்கம் சார்பில் புதன்கிழமை மாலை கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டது. கிரிக்கெட் போட்டி நடந்துகொண்டிருந்தபோது, அங்கு வந்த தேனீக்கள் கூட்டம் விளையாடிக் கொண்டிருந்த அனைவரையும் தாக்கியுள்ளது. இதில் படுகாயமடைந்த கான்பூரைச் சேர்ந்த நடுவர் மாணிக் குப்தா சுயநினைவை இழந்தார். தேனீக்கள் தாக்குதலில் விளையாட்டு வீரர்களும் படுகாயமடைந்தனர். அவர்கள் அனைவரும் அருகிலுல்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். நடுவர் மாணிக் குப்தாவை பரிசோதித்த மருத்துவர்கள், அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

# காஸா மறுசீரமைப்புக்கு ரூ.1.55 லட்சம் கோடி : அமைதிக் குழுவின் முதல் கூட்டத்தில் அறிவிப்பு

**காசா, பிப்.21:**

காஸா மறுசீரமைப்புப் பணிகளுக்காக அமெரிக்கா மற்றும் அமைதிக் குழு நாடுகளின் சார்பில் 1,700 கோடி டாலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.1.55 லட்சம் கோடி) நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்தார்.

கடந்த செப்டம்பரில் இஸ்ரேல்-ஹமாஸ் போரை நிறுத்த டிரம்ப் முன்மொழிந்த அமைதிக் குழுவின் முதல் ஆலோசனைக் கூட்டம், அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

நிகழ்வில் அதிபர் டிரம்ப் ஆற்றிய உரை: காஸா மறுசீரமைப்புக்காக அமைதிக் குழுவின் பல உறுப்பு நாடுகள் இணைந்து இதுவரை 700 கோடி டாலர் திரட்டியுள்ளது. அமெரிக்கா கூடுதலாக 1,000 கோடி டாலர் வழங்கும். அதேபோல், மனிதாபிமான உதவிகளுக்காக ஐ.நா. 200 கோடி டாலர் நிதி வழங்கும். காஸாவின் நீடித்த அமைதிக்கு, அங்கு நிலைநிறுத்தபடவுள்ள சர்வதேச படைக்கு இந்தோனேசியா, மொராக்கோ, கஜகஸ்தான், கொசோவோ, அல்பேனியா ஆகிய 5 நாடுகள் வீரர்களை அனுப்புகின்றன. காஸா காவல்துறைக்குப் பயிற்சி அளிக்கும் பொறுப்பை எகிப்து மற்றும் ஜோர்டான் ஏற்றுக்கொண்டுள்ளது என்றார்.

# மேற்கு கரை விவகாரம்: இஸ்ரேலுக்கு இந்தியா உள்ளிட்ட 100 நாடுகள் கண்டனம்


**காசா, பிப்.21:**

மேற்குக் கரையில் நிலப்பதிவு செய்வது தொடர்பான இஸ்ரேலின் முடிவுக்கு இந்தியா உள்ளிட்ட 100 நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இஸ்ரேல் ஆக்கிரமிப்பில் உள்ள பாலஸ்தீனத்துக்கு சொந்தமான மேற்கு கரை பகுதியில் நிலப்பதிவு செய்வதற்கான திட்டத்துக்கு அந்நாட்டு அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது. இது மேற்குக் கரையில் உள்ள சட்டவிரோதமான இருப்பை விரிவாக்கம் செய்யும் நோக்கில் எடுக்கப்படும் நடவடிக்கை என்றும், இந்த முடிவை இஸ்ரேல் திரும்பப் பெற வேண்டும் எனவும் 100 நாடுகள் சார்பில் ஐ.நா.வுக்கான பாலஸ்தீன நிரந்தர கண்காணிப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையில் 85 நாடுகள் மட்டுமே இஸ்ரேலின் நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்திருந்தன. இந்தியா கண்டனம் தெரிவிக்கவில்லை. பிறகு இந்தியாவும் இணைந்து கண்டனம் தெரிவித்தது.

# ராஃபா எல்லை வழியாக காஸாவை விட்டு வெளியேற 640 பேருக்கு மட்டுமே அனுமதி



**வாஷிங்டன், பிப்.21:**

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக கடந்த பிப். 2-ஆம் தேதி திறக்கப்பட்ட ராஃபா எல்லை வழியாக, இதுவரை 640 பாலஸ்தீனர்கள் மட்டுமே காஸாவை விட்டு வெளியேறியுள்ளனர்.

கடந்த 2024, மே மாதம் இஸ்ரேல் ராணுவம் இந்த எல்லையைக் கைப்பற்றிய பிறகு, சுமார் ஒன்றரை ஆண்டுகள் கழித்து கடந்த பிப். 1-இல் திறக்கப்பட்டது. பிப். 2 முதல் மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டது.

பிப். 2 முதல் கடந்த புதன்கிழமை(பிப். 18) வரை மொத்தம் 640 பாலஸ்தீனர்கள் காஸாவை விட்டு வெளியேறியுள்ளனர். 508 பேர் மீண்டும் காஸாவுக்குள் நுழைந்துள்ளனர்; தகுந்த காரணங்கள் இன்றி 26 பேரின் பயணத்தை இஸ்ரேல் தடுத்து நிறுத்தியுள்ளது. இந்தக் குறிப்பிட்ட நாள்களில் சுமார் 3,400 பேர் எல்லையைக் கடக்கத் திட்டமிட்டிருந்தனர். ஆனால், உண்மையில் 1,148 பேர் (அதாவது 33 சதவீதம் பேர்) மட்டுமே இரு திசைகளிலும் பயணிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

போர் பாதிப்பினால் தற்போது காஸாவில் சுமார் 20,000 பேருக்கு உடனடி மருத்துவச் சிகிச்சை தேவைப்படுகிறது. எனினும், இஸ்ரேலின் கடுமையான கட்டுப்பாடுகளால் மக்கள் வெளியேற முடியாமல் தவிப்பதாக காஸா அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

# எப்ஸ்டீன் கோப்புகள்! கைதான சில மணிநேரங்களில் பிரிட்டன் மன்னரின் சகோதரர் விடுதலை!

**லண்டன், பிப்.21:**



எப்ஸ்டீன் கோப்புகள் விவகாரத்தில் குற்றம்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட பிரிட்டனின் முன்னாள் இளவரசர் ஆண்ட்ரூ சில மணிநேரங்களில் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த பெரும் பணக்காரரான ஜெஃப்ரி எப்ஸ்டீன் சிறுமிகளைக் கடத்திப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியதற்காக, கைது செய்யப்பட்டு சிறையில் மர்மமான முறையில் உயிரிழந்தார்.

அமெரிக்க நீதித் துறை அண்மையில் வெளியிட்ட எப்ஸ்டீன் கோப்புகளில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பிரபலங்கள், தலைவர்கள் எப்ஸ்டீனுடன் பகிர்ந்த விடியோக்கள், புகைப்படங்கள், மின்னஞ்சல்கள் குறித்த தரவுகள் வெளியாகி உலகளவில் பெரும் அதிர்வலைகளை உருவாக்கின.

பிரிட்டன் மன்னர் மூன்றாம் சார்லஸின் சகோதரரான முன்னாள் இளவரசர் ஆண்ட்ரூ மவுண்ட்பேட்டன் விண்ட்சரின் மீது பாலியல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

மேலும், அமெரிக்க நீதித் துறை வெளியிட்ட கோப்புகளின் அடிப்படையில், கடந்த 2004 முதல் 2011 ஆம் ஆண்டு வரை பிரிட்டனின் சர்வதேச வர்த்தக தூதராகப் பதவி வகித்த ஆண்ட்ரூ தனது அதிகாரபூர்வத் தகவல்களை எப்ஸ்டீனிடம் பகிர்ந்ததற்கான ஆதாரங்கள் சிக்கியுள்ளன. இந்த நிலையில், விசாரணையின் ஒருபகுதியாக, ஆண்ட்ரூவை கடந்த வியாழக்கிழமை (பிப். 20) பிரிட்டனின் தேம்ஸ் வேலி காவல் துறையினர் கைது செய்தனர்.

இந்த நடவடிக்கை சர்வதேச அளவில் பெரும் வரவேற்பைப் பெற்றதுடன், சட்டம் தன் கடமையைச் செய்யும் என பங்கிங்காம் அரண்மனை வெளியிட்ட செய்தியில் மன்னர் சார்லஸ் கூறியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து, கைது செய்யப்பட்ட சில மணிநேரங்களில் வியாழக்கிழமை மாலை முன்னாள் இளவரசர் ஆண்ட்ரூ விடுதலை செய்யப்பட்டதாக, பிரிட்டன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இருப்பினும், அவருக்குச் சொந்தமான இடங்களில் அதிகாரிகள் சோதனைகள் மேற்கொண்டு வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

முன்னதாக, ஆண்ட்ரூவின் மீதான பாலியல் குற்றச்சாட்டுகளால் நடைபெற்ற மாபெரும் போராட்டங்களைத் தொடர்ந்து அவரது இளவரசர் பட்டத்தை மன்னர் மூன்றாம் சார்லஸ் பறித்தது குறிப்பிடத்தக்கது.

# வேற்றுகிரகவாசிகள் பற்றிய ரகசிய கோப்புகளை வெளியிட டிரம்ப் உத்தரவு!

**வாஷிங்டன், பிப்.21:**



வேற்றுகிரகவாசிகள் (ஏலியன்கள்) பற்றிய அரசின் ரகசிய கோப்புகள் அனைத்தையும் பொதுவெளியில் வெளியிட அதிகாரிகளுக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

வேற்றுக்கிரகவாசிகள் உள்ளனரா, இல்லையா என உலகம் முழுவதும் பல ஆண்டுகளாக விவாதிக்கப்பட்டு வருகிறது. அமெரிக்க ஆய்வாளர்கள் வேற்றுக்கிரகவாசிகளைப் பிடித்து வந்து, அந்நாட்டின் நெவாடா பகுதியில் உள்ள ரகசியமான இடமான 'ஏரியா 51'-இல் வைத்து ஆய்வு செய்து வருவதாகவும் அவ்வப்போது தகவல் வெளியாகி வருகிறது. இதை அமெரிக்கா இதுவரை உறுதி செய்யவில்லை.

சமீபத்தில் அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா, யூடியூபர் ஒருவருக்கு அளித்த பேட்டியின்போது, வேற்றுக்கிரகவாசிகள் இருப்பது உண்மைதான், ஆனால் நான் இதுவரை பார்த்ததில்லை என்றார்.

அமெரிக்க முன்னாள் அதிபர் ஒருவரே, வேற்று கிரகவாசிகள் இருப்பதாக கூறியிருப்பது, உலகம் முழுவதும் பல விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில், வேற்றுகிரகவாசிகள் மற்றும் அவர்கள் பயன்படுத்தும் விமானங்கள் பற்றிய கோப்புகளை ரகசிய பட்டியலில் இருந்து நீக்கி அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ள டிரம்ப் தெரிவித்திருப்பதாவது: "மக்களிடையே ஏற்பட்டுள்ள அதீத ஆர்வத்தை தொடர்ந்து வேற்றுகிரகவாசிகள், வேற்றுகிரக வாழ்க்கை, அடையாளம் காணப்படாத வான்வழி நிகழ்வுகள் மற்றும் அடையாளம் காணப்படாத பறக்கும் விமானங்கள் தொடர்பான அரசின் ரகசிய கோப்புகளை அடையாளம் கண்டு, பொதுமக்களின் பார்வைக்கு வெளியிட உத்தரவிட்டுள்ளேன்" எனத் தெரிவித்துள்ளார்.

# சீன மோசடி கும்பலுக்கு உதவிய 3 பேர் கைது

**நாகலாந்து, பிப்.21:**



சீனாவைச் சேர்ந்த இணையவழி மோசடி கும்பலுக்கு உதவிய 3 பேர் குருகிராமில் கைதுசெய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களிடமிருந்து 20 சிம் போட்டு பாக்ஸ்கள், ஒரு மடிக்கணினி ஆகியவை கைப்பற்றப்பட்டதாக அந்த அதிகாரிகள் கூறினர்.

இதுதொடர்பாக அதிகாரிகள் கூறியதாவது: இணையவழி மோசடி சம்பவம் தொடர்பாக நாகாலாந்தில் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். இதைத்தொடர்ந்து, நாகாலாந்தைச் சேர்ந்த கார்மா, ஹிமாசலைச் சேர்ந்த லோப்சாங் சுல்திம், ந்காவங் கியால்ஸ்டன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர்.

கர்மா மற்றும் சுல்திம் கடந்த பிப்.14-ஆம் தேதி கைதுசெய்யப்பட்டனர். கடந்த பிப்.16-ஆம் தேதி நேபாளத்துக்கு தப்பியோட முயன்றபோது கியால்ஸ்டன் தில்லியின் மஞ்சு கா திலியாவில் கைதுசெய்யப்பட்டார்.

இந்தியர்களை குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட இணையவழி மோசடி சம்பவங்களுக்கு சிம் போர்ட் பாக்ஸ்களை பயன்படுத்தி வந்ததாக கைதுசெய்யப்பட்ட நபர்கள் விசாரணையின்போது தெரிவித்தனர். சீனாவைச் சேர்ந்த சேகா என்பவரின் அறிவுறுத்தலின் பேரில் இ-சிம்களை பாக்ஸ்களை பொருத்தி மோசடியில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்டனர்.

இந்த அமைப்பின் மூலம் 20 கைப்பேசிகளைப் பயன்படுத்தி நாளுக்கு 20,000-க்கும் மேற்பட்ட அழைப்புகளை மேற்கொள்ள முடியும். கேமிங் மற்றும் முதலீட்டு மோசடி உள்ளிட்ட குற்றச் செயல்களுக்காக சேகா ஒரு செயலியைப் பயன்படுத்தி இந்தியர்களைத் தொடர்புகொண்டுள்ளார்.

சீனாவில் பிறந்த சுல்திம் மற்றும் கியால்ஸ்டன் இருவரும் இந்தியாவில் 15 ஆண்டுகளுக்கு அகதிகளாக வசித்தனர். சீனம் மற்றும் தைவான் மொழியில் சரளமாகப் பேசக்கூடிய இருவரும், சேகாவிடம் விசேட் என்ற செயலி மூலம் தொடர்பு கொண்டு வந்தனர். இந்தச் செயலி இந்தியாவில் கடந்த 2020-இல் தடைசெய்யப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட மூவரும் நீதிமன்றத்தில் புதன்கிழமை ஆஜராடுத்தப்பட்டு நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களுடன் தொடர்புடைய பிற நபர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றனர் அந்த அதிகாரிகள்.

# ஆப்பிரிக்காவில் 'ஸ்பைனோசோரஸ்' இன எச்சங்கள் - ஆய்வாளர்கள் அதிர்ச்சி தகவல்

**நைஜர், பிப்.21:**

ஆப்பிரிக்காவின் சஹாரா பாலைவனத்தில், நைஜர் மாநிலத்தில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட ஸ்பைனோசோரஸ் இன எச்சங்கள், ஆய்வாளர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளன. இந்த விலங்கு 40 அடி நீளம் மற்றும் 57 டன் எடை கொண்டது. இது பெரும்பாலும் மீன்களை வேட்டையாடியதாகக் கருதப்படுகிறது. ஆய்வாளர்கள் இதற்கு "ஹெல் ஹெரன்"(HELL HERON) என பெயரிட்டுள்ளனர்.



இந்த கண்டுபிடிப்பு, டைனோசோர்களின் வகைகள் மற்றும் அவைகளின் பழங்கால வாழ்க்கை பற்றிய ஆராய்ச்சிக்கு புதிய ஒளியை அளிக்கிறது. "ஹெல் ஹெரன்" இனத்தின் அடையாளங்கள் மற்றும் வாழ்விடங்கள் குறித்து விரிவான ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற உள்ளன.

# புத்தாண்டு கொண்டாட்டத்தில் துயரம் 12 பேர் பலியான சோகம்

**பீஜிங், பிப்.21:**

சீனாவின் ஹுபெய் மாகாணத்தில் பட்டாசு கடையில் ஏற்பட்ட தீவிபத்தில் 12 பேர் உயிரிழந்தனர். 2 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சீனாவில், சந்திர புத்தாண்டு சமீபத்தில் கொண்டாடப்பட்டது. இதையொட்டி, நாடு முழுதும் பட்டாசுகள் வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் மக்கள் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர். சீன ஜோதிடத்தின்படி இது 'குதிரை ஆண்டு' தொடக்கத்தைக் குறிக்கிறது. இந்தக் கொண்டாட்டத்தின்போது தீய சக்திகளை விரட்டப் பட்டாசுகள் வெடிப்பது மரபாகும்.

இந்நிலையில், சீனாவின் ஹுபேய் மாகாணத்தின் ஜியாங்யாங் நகரில் உள்ள பட்டாசு கடை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 12 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 2 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது ஏற்பட்ட வெடிவிபத்தால் 12 பேர் உயிரிழந்தது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ஈரான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா, இஸ்ரேல் தீவிரம்



**வாஷிங்டன், பிப்.21:**

ஈரானில் அடக்குமுறைகளுக்கு எதிராக போராட்டம் நடத்திய மக்கள் மீது அரசு துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். பொதுமக்களை கொல்வதை நிறுத்தாவிட்டால், ஈரான் மீது தாக்குதல் நடத்தப்படும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஏற்கெனவே எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கிடையில், அமெரிக்கா - ஈரான் இடையே ஜெனிவாவில் நடைபெற்ற அணு ஆயுத ஒழிப்பு பேச்சுவார்த்தை பலன் அளிக்கவில்லை என்றால், ஈரான் மீது மிகப் பெரிய தாக்குதல் நடத்த அமெரிக்காவும், இஸ்ரேலும் தயாராகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஈரான் அருகே யுஎஸ் எஸ் ஆபிரகாம் லிங்கன் விமானம் தாங்கி போர்க்கப்பல் தனது துணைப் போர்க் கப்பல்களுடன் தயார் நிலையில் உள்ளது. இந்நிலையில் யுஎஸ்எஸ் ஜெரால்ட் ஆர்ஃபோர்ட் போர்க் கப்பலும் மத்திய கிழக்கு நோக்கி அனுப்பப்பட்டுள்ளது. மேலும், அமெரிக்கா போர்த் தளவாடங்களை மத்திய கிழக்கு பகுதியில் குவித்துள்ளது. இது மிகப் பெரிய தாக்குதலுக்கு அமெரிக்காவும், இஸ்ரேலும் தயாராகி வருவது போல் தெரிகிறது. இந்த தாக்குதல் சில வாரங்கள் தொடரலாம் எனவும் கூறப்படுகிறது.

# ஒப்பந்தம் செய்யாவிட்டால் ஈரான் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும்: டிரம்ப் கடும் எச்சரிக்கை!

**வாஷிங்டன், பிப்.21:**

ஒப்பந்தம் செய்யவிட்டால் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என ஈரானுக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரான் தனது அணுசக்தி மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைத் திட்டங்களைக் கைவிடக் கோரி வாஷிங்டன் - தெஹ்ரான் இடையேயான பேச்சுவார்த்தை ஜெனீவாவில் நடைபெற்று வருகிறது. அமெரிக்க தூதர்கள் ஸ்டீவ் விட்காஃப் மற்றும் ஜாரெட் குஷ்னர் ஆகியோர், ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்கியின் உதவியுடன் அமெரிக்கா - ஈரான் இடையேயான மோதலைத் தடுக்கும் வகையில் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையில், உலகின் மொத்த கச்சா எண்ணெய் போக்குவரத்தில் 20 சதவிகிதத்தைக் கையாளும் முக்கிய நீர்வழிப் பாதையான ஹார்மோஸ் நீரிணையில் ஈரான் கடற்படை பிப்.16 முதல் பிரம்மாண்ட போர்ப் பயிற்சியைத் தொடங்கியது.

இந்தப் பயிற்சியின் ஒரு பகுதியாக செவ்வாய்க்கிழமையன்று, ஜெனீவாவில் பேச்சுவார்த்தைக்கு மத்தியில், ஹார்மோஸ் நீரிணையில் ஏவுகணை சோதனைகளை நடத்தி ஈரான் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த உலகளவிலான பதற்றத்துக்கு மத்தியில், எஃப்-35, எஃப்-16, எஃப்-22 ரகத்தைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட அதிநவீன போர் விமானங்களை மத்திய கிழக்கில் அமெரிக்கா நிலைநிறுத்தியுள்ளது. அதுமட்டுமின்றி 13 போர்க் கப்பல்கள், அமெரிக்காவின் மிகப்பெரிய விமானம் தாங்கி போர்க்கப்பலான ஆபிரகாம் லிங்கன் உள்ளிட்டவையும் மத்திய கிழக்கில் நிலைநிறுத்தியுள்ளது. இதனிடையே, புதன்கிழமை செய்தியாளர்களுடன் பேசிய வெள்ளை மாளிகையின் பத்திரிகை செயலர் கரோலின் லீவிட், "ஜெனீவாவில் ஈரானுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இருப்பினும், பல விஷயங்களில் உடன்பாடு எட்டவில்லை. அதுகுறித்து இரு வாரங்களுக்குள் மீண்டும் ஈரானியர்கள் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். ஈரான் அமெரிக்காவுடன் ஒரு ஒப்பந்தத்தை எட்டுவது புத்திசாலித்தனமாக இருக்கும்" என்று தெரிவித்தார்.

இந்தநிலையில், அமெரிக்காவின் ஒப்பந்தங்களுக்கு ஒத்துபோகாத ஈரானுக்கு எச்சரிக்கை விடுக்கும் விதமாக

வாஷிங்டனில் தனது அமைதி வாரியத்தின் தொடக்கக் கூட்டத்தில் பேசிய அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், "பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. ஈரானுடன் பேச்சுவார்த்தைகள் செய்வது எளிதானகாரியம் அல்ல என்பது அனைவரும் தெரியும். நாம் நல்ல ஒப்பந்தத்தைச் செய்ய வேண்டும். இல்லையென்றால் மோசமான விளைவுகள் நேரிடும்" எனத் தெரிவித்துள்ளார்.

ஈரான் மீது அமெரிக்கா எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் நிலவிவரும் சூழலில், ஓமன் வளைகுடாவில் ரஷியாவுடன் சேர்ந்து ஈரான் கடற்படைப் பயிற்சியை மேற்கொண்டு வருகிறது. அரபிக்கடலில் தனது போர்க் கப்பல்களை நிலைநிறுத்தியுள்ள அமெரிக்கா, அதிநவீன போர் விமானங்களையும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பி உள்ளதால் பதற்றம் இரு நாடுகளுக்கும் இடையே போர் மூளும் சூழல் உருவாகியுள்ளதால், உலக நாடுகளிடையே போர்ப்பதற்றம் அதிகரித்துள்ளது.

# திராவிட மாடல் 2.0 ஆட்சி, எங்கள் சாதனைகளை நாங்களே விஞ்சும் அளவிற்கு இருக்கும்: முதலமைச்சர்





# அதிபர் டிரம்ப் விதித்த வரிகள் ரத்து! அமெரிக்க உச்ச நீதிமன்றம் அதிரடி!

# வேற்றுகிரகவாசிகள் பற்றிய ரகசிய கோப்புகளை வெளியிட டிரம்ப் உத்தரவு!

# 2025-26ம் ஆண்டுக்கான இறுதி துணை மதிப்பீடுகள்: நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பேரவையில் தாக்கல்

# தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமார் வருகிற 26, 27-ந் தேதிகளில் சென்னை வருகை


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 21.02.2026 சனிக்கிழமை இலவச இ–பேப்பர்